உ

சிவமயம்

# தமிழ்வேதத்தின் வித்தான நால்வர் நற்றமிழ்

பாகம் - 1



## திருஞானசம்பந்தர் சுவாமிகளின் தேவாரங்கள் தந்த அற்புதங்கள்

தொகுப்பு : இணுவையூர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

வெளியீடு : சைவநெறிக்கூடம்,
இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில்

ஆடி, 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தமிழ் வேதத்தின் வித்தான நால்வர் நற்றமிழ்

## பாகம் - 01

# திருஞானசம்பந்தர் சுவாமிகளின் தேவாரங்கள் தந்த அற்புதங்கள்

இணுவையூர்
கலாபூஷணம் மூ.சிவலிங்கம்

வெளியீடு :

சைவநெறிக்கூடம்,
இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில்

2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழ்வேதத்தின் வித்தான நால்வர் நற்றமிழ், பாகம் - 01**

| | | |
|---|---|---|
| தொகுப்பாசிரியர் | - | கலாபூஷணம் மூ.சிவலிங்கம் |
| பதிப்புரிமை | - | சைவநெறிக்கூடம், இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் |
| வெளியீடு | - | சைவநெறிக்கூடம், இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் |
| முதற்பதிப்பு | - | 2018 |
| நூல் வடிவமைப்பு | - | சுடர்நிலவு கிரபிக்ஸ், இணுவில். |
| நூலின் அளவு | - | A5 |
| பக்கங்கள் | - | viii + 127 |
| விலை | - | ரூபா. 300.00 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சைவமும் தமிழும் காலமறியாத தொன்மை வாய்ந்தவை. இறைவன் குருபகவானாம் தட்சிணாமூர்த்தமாக அமைந்து திருமூலர் முதலான எட்டு சீடர்களுக்கு சின் முத்திரையில் மௌன உபதேசஞ் செய்கிறார். எட்டுச் சீடர்களும் யோகநிலையில் இருந்து நாதாந்த முடிபை அறிந்து தெளிந்தவர்கள். இமயமலைச் சாரலில் உலாவந்த மாலாங்கதேவரின் வேண்டுதலால் திருமூலர் நந்தியின் (இறைவனின்) வழிகாட்டலால் தென்னகத்து சிதம்பரத் தில் உலக நன்மை கருதி மக்களுக்கு உபதேசிக்க வந்தவர். நந்தியின் வழிகாட்டலில் திருவாவடுதுறையில் அமர்ந்தார். திரு மூலரின் உபதேசம் பெறவென மாலாங்க தேவருட்பட ஏழு சீடர்கள் அமர்ந்தனர். தமிழில் சீலாங்க வேதத்தை (ஆகமத்தை)ச் செப்பிய திருமூலரிடம் யாவரும் நன்கு கற்றுத் தேறியதால் சைவத்தமிழ் வழி வழியே நிலைத்ததாகும்.

திருமூலர், அகத்தியர் ஆகிய இருவரும் நண்பர்கள். அகத்தியரின் சீடர் தொல்காப்பியர். இவரின் காலம் முதற் சங்க காலம் - 12000 வருடங்களுக்கு முந்தியவை. இவ்வாறு வழிவந்த சைவமும் தமிழும் குருகுலப் பயிற்சியாக எண்ணிறந்த காலம் வாழ்ந்தன. பிற்காலத்தில் பௌத்தம் (2600 வருடங்களுக்கு முன்) சமணம், கிறிஸ்தவம் (2017 வருடங்களுக்கு முன்) தோன்றின. இவை சைவசமயத்தின் மூல தத்துவத்தில் இருந்து பெற்றவற் றுடன் தமது உப விதிகளையும் சேர்த்துத் தனித்தனியே உருவான சமயங்களாகும். இச்சமயங்கள் மக்களையும் அரசர்களையும் வசீகரித்து முன்னேற முயன்றன. இதனால் சைவம் நலிவுற்றது.

சைவசமயம் நலிவுற்ற போது பரம்பரை பரம்பரையாகச் சைவத்தையே உயிர்மூச்சாக எண்ணி வாழ்ந்த சமய சீலர்கள் வருந்தினர். தமது வழிபாட்டில் இறைவனை வேண்டித் தவமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவம் வளரப் பலர் பிரார்த்தித்தனர். இவர்களுள் சீர்காழிப் பதியில் வாழ்ந்த சிவபாதவிருதயரின் அபார பக்தியின் பேரில் இறைவனின் பேரருள் திருஞானசம்பந்தரை இத்தமிழ் மண்ணில் அவதரிக்கச் செய்தது. திருஞானசம்பந்தர் இறைவனின் நியதிப்படி மூன்று வயது வந்ததும் இறைவன் இறைவியால் "பால்" கொடுத்து ஆட்கொள்ளப்பட்டார். ஞானப்பாலின் சிறப்பால் சைவம் வளர பாடல்கள் பாடி அற்புதங்கள் பல செய்து பதினாறு வயதில் இறைவனின் சோதியுட் கலந்தார். இவரின் வரலாற்றை வேறாக அறிவோம்.

இறைவன் தமது சிவநெறி தொடர்ந்து நிலைபெறும் வண்ணம் திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோருடன் நால்வரையும் நற்றமிழில் சைவப் பண்ணில் இசைபாட வைத்தார். இறைவனின் நியதியால் இச்சமய குரவர்கள் நால்வரதும் பாடல்கள் மூலம் பல அற்புதங்கள் நிகழ்ந்தன. இதனால் சைவம் மேலோங்கியது. இவர்களின் பாடல்கள் பன்னிரு திருமுறைகளில் எட்டுத் திருமுறைகளாக அமைந்தன. மேலும் பல பெரியார்களின் பக்தி சிரத்தையால் பன்னிரு திருமுறைகளும் தமிழ் வேதமாக அமைந்து சைவசமயத்தின் பெருமையைத் துலக்குகின்றன. சமயகுரவர்களின் பாடல்களே தமிழ்வேதத்தின் வித்தாக அமைந்தன.

காலங்கள் மாறவும் அந்நியராட்சியால் சைவம் மந்த நிலைக்குத் தள்ளப்பட்டது. நாவலர் பெருமானின் அவதாரத்தால் புத்துயிர் பெற்ற சைவம் இன்றைய மேலைத்தேயப் பண்பாடு, திரைப்பட மோகம், நவீன விஞ்ஞான தொடுபேசி தொழில் நுட்பத்தால் நலிவடைகிறது. இதனால் சைவசமயம் நலிவடையா வண்ணம் மக்களைச் சிறுவயதிலிருந்தே ஊக்குவிப்பதன் பேரில் சமய நிறுவனங்களும் அதனோடிணைந்த அன்பர்களும் தூண்டு வதன் பேரில் இந்த நூல் வெளிவருகின்றது. "தமிழ் வேதத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தான நால்வர் பாடிய நற்றமிழ்" என்னும் தலையங்கத்தில் நான்கு பாகங்களாக சமயகுரவர்களின் அற்புதங்களும் அதன் பாடல்களும் வெளிவருகின்றன.

இணுவில் ஞானலிங்கேச்சுரர் ஆலய நிறுவுனருடன் சைவ நெறிக்கூடம் வெளியிடும் இந்த நூலுக்கு உதவிய அனைத்து அன்பர்களுக்கும் ஞானலிங்கேச்சுரர் அருள் பாலிக்க வேண்டி இறைஞ்சுகிறேன்.

ஞானலிங்கேச்சுரர் திருக்கோயிலின் அர்ச்சனை மலர்களாக ஒலிக்கும் இப்பாடல்கள் வழிபடுவோர் இலகுவில் படித்தறிவதன் பேரில் அற்புதங்களும் பாடிய சந்தர்ப்பங்களும் சிறப்பாக அமைந் துள்ளன. இந்த நூலை வெளியிடுவதன் பேரில் பதிப்புரை வழங்கிய சிவருசி.தர்மலிங்கம் சசிக்குமார் அவர்களின் அரும் பணிக்கு இறையருள் வழிகாட்டியது. மேலும் இம்மலரைக் குறுகிய காலத்தில் அச்சேற்றி அரிய நூலாக வடிவமைத்த இணுவில் கிழக்கு சுடர்நிலவு கிரபிக்ஸ் நிறுவனத்தினருக்கும் நன்றிகள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

"என் கடன் பணி செய்து கிடப்பதுவே"

"அன்பே சிவம்"

**இணுவையூர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்


**சைவநெறிக்கூடம்**

**அருள்ஞானமிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோவில்**

DER VEREIN SAIVANERIKOODAM / CLUB DE SAIVANERIKOODAM

Verein für tamilische Religion und Kultur

L'Association de la religion et de culture tamoule

Inuvil South, Inuvil, Jaffna, Sri Lanka.




# வெளியீட்டுரை

இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில் தமிழ் வேதத்தினால் பூசிக்கப்படுவது யாவரும் அறிந்ததே. இப்பூசையில் இடம்பெறும் அர்ச்சனை மலர்களாக அமைந்ததும் இறைவனுக்கு உகந்தது மானவை பன்னிரு திருமுறைகளாகும்.

இவற்றுள் சமயகுரவர்கள் நால்வர் பாடிய பாடல்கள் முதல் எட்டுத் திருமுறைகளையும் அலங்கரிக்கின்றன. இப்பாடல்கள் "நால்வர் பாடிய நற்றமிழ்" என அமைந்துள்ளன. இதன் முதலாம் பாகம் மழலைச்செல்வர் திருஞானசம்பந்தர் சுவாமிகளாலும் இரண்டாம் பாகம் திருநாவுக்கரசு (அப்பர்) சுவாமிகளாலும் அருளிச் செய்யப்பட்டவைகளாகும்.

பல அன்பர்களின் வேண்டுகோளுக்காக முதலாம் பாகம் "திருஞானசம்பந்தர் சுவாமிகளின் தேவாரங்கள் தந்த அற்புதங்கள்" எனவும், இரண்டாம் பாகம் "திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரங் கள் தந்த அற்புதங்கள்" எனவும் இரு நூல்களாக வெளிவருகின்றன. இணுவில் சைவநெறிக்கூடத்தின் இரண்டாவது வெளியீடான இவ்விரு நூல்களையும் இணுவையூர் கலாபூஷணம் மூ.சிவலிங்கம் அவர்கள் தொகுத்துள்ளார். மேலும் இதனை திரு.கெ.தவராசா அவர்கள் ஒப்புநோக்கியுள்ளார். இணுவில் சுடர்நிலவு கிரபிக்ஸ் நிறுவனத்தினர் இம்மலரினை நூலாக வடிவமைப்புச் செய் துள்ளனர். இவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்ப துடன் இறையருளை வேண்டிப் பிரார்த்திக்கிறோம்.

**சிவருசி.தர்மலிங்கம் சசிக்குமார்**

சைவநெறிக்கூடம்,

இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- முன்னுரை
- வெளியீட்டுரை

1. தோணிபுரத்தின் சிறப்பு 01
2. திருஞானசம்பந்தரின் அவதாரம் 02
3. தவஞானக்குழந்தையின் அற்புதம் 02
4. முதலாம் திருமுறையின் முதற்பதிகம் 06
5. திருக்கோலாக்காவில் பொற்றாளம் பெற்றது. 08
6. பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கப் பாடியது. 10
7. தில்லை மூவாயிரவரைச் சிவகணங்களாகத் தரிசித்தமை. 14
8. முத்துச் சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் பெற்றது. 21
9. உபநயனத்தின் போது பஞ்சாட்சரப் பதிகம் பாடியது. 25
10. திருப்பழனத்துப் பெருமானைப் புகழ்ந்து பாடியது. 28
11. கொல்லிமழவன் மகளின் முயலகன் நோய் தீர்த்தது. 30
12. பனிச்சுரம் நீக்கியது. 34
13. தொண்டர்களின் திருநீற்றை வியந்து பாடியது. 36
14. முத்துப் பந்தல் பெற்றது. 40
15. தந்தையின் வேள்விக்குப் பொன் பெற்றுக் கொடுத்தது. 44
16. யாழ்முரிப் பாடல் பாடியது. 47
17. அரவந் தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்தது. 54
18. திருமருகலில் திருச்செங்காட்டம்குடி ஈசனின் தரிசனம் பெற்றது. 57
19. திருக்கோழிலி இறைவனைப் பாடியது. 60
20. திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றது. 63




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. திருமறைக் காட்டில் திருக்கதவு மூடப் பாடியது. 65

22. திருவாய்மூரில் ஈசன் அம்பிகையுடன் ஆடிய திருநடனக் காட்சி கண்டது. 67

23. கோளறுப் பதிகம் பாடியது. 68

24. சைவப்பணிக்காகப் பாண்டிய நாடு சென்றது. 72

25. ஆலவாயில் சமணர்கள் மூட்டிய தீயை ஏவிப் பாண்டியனுக்கு வெப்பு நோயாக்கியது. 79

26. பாண்டியனின் வெப்புநோயை நீக்கியது. 82

27. அனல் வாதத்தில் வென்றது. 88

28. புனல் வாதத்தில் வெற்றியீட்டியதுடன் பாண்டியனின் கூன் நிமிரச் செய்தது. 91

29. பாண்டியனுடன் பாண்டி நாட்டுச் சிவாலய தரிசனம். 102

30. இராமேஸ்வரத்திலிருந்து திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய தலங்கள் மீது பாடியது. 103

31. பாடல் பாடி ஓடஞ் செலுத்தியது. 109

32. புத்த நந்தியின் தலையில் இடி இடிக்கச் செய்தது. 111

33. ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கியது. 113

34. எலும்பைப் பெண்ணாக்கியது. 116

35. நல்லூர் பெருமணத்தில் திருமணம் 119

36. திருமணத்திற்கு வந்த யாவரும் இறைவனாற் தோற்றுவிக்கப் பெற்ற மகாசோதியில் இணைந்தது. 121

37. மனைவியுடன் சோதியை வலம் வந்து சோதியுட் கலந்தது. 122

38. நிறைவுரை 125



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருஞானசம்பந்தர் சுவாமிகள் செய்த அற்புதங்களின் வரலாறு

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந் தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

(சேக்கிழார்)

"பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி"

## தோணிபுரத்தின் சிறப்பு
## (பன்னிரு திருப்பெயருடைய புனிதபூமி)

"பிரமனூர் வேணுபுரம் புகலி வெண்குருப் பெருநீர்த் தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னம் சிரபுரம் புறவம் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சை வயம் உள்ளிட்டங் காதியாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்ற திருக்கழுமலம்நாம் பரவுமூரே.

ஒரு பிரளய காலத்தில் உலகின் சகல பாகங்களும் கடலாற் சூழப்பட்டு அமிழ்ந்தபோது தோணி போல மிதந்து சிவ பெருமானின் பெருமையை நிலைநாட்ட அமைந்த புண்ணிய பூமி "தோணிபுரம்" என அழைக்கப்பட்டது. இறைவன் தோணியப்பர் எனப் போற்றப்பெற்றார். இத்திருவூர் மேலும் பல அற்புதங்களுடன் தொடர்புடையதால் தோணிபுரம் முதல் "சீர்காழி" என்னும் தொடரில் பன்னிரு திருப்பெயருடன் திருநகராக விளங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருஞானசம்பந்தரின் அவதாரம்

சைவசமயம் பிறசமயங்களால் நலிவடைந்தபோதும் சிவ வழிபாட்டில் வாழ்ந்த சிவபாதவிருதயர் என்னும் சிவவேதியர் சைவம் நலிவுறா வண்ணம் போற்றி வளர்க்கவெனத் தமக்கொரு சற்புத்திரனை வேண்டி இறைவனிடம் தவமிருந்தார். இறைவனின் பெருங்கருணையால் முருகனின் அம்சமாக வேதியரின் பாரியார் பகவதி அம்மையார் முன் செய்த தவப்பயனாக உரிய காலத்தில் அழகிய சற்புத்திரரை இம்மண்ணிற்கு அறிமுகஞ் செய்தார். இறை யருளும் பெற்றோரின் சீராட்டும் பாராட்டும் அனுசரணையும் அப்பிள்ளையின் மூன்று வயதில் ஞான உணர்வை நாட வைத்தது. சைவநெறி போற்றி ஆசாரசீலம் வளர்த்த சிவபாதவிருதயர் வழமை போல் சீர்காழிப் பதியுறைந்த தோணியப்பரின் தரிசனைக் காக ஒரு நாட்காலை ஆயத்தமானார். இறைவனின் நியதிப்படி திருவருளின் ஊற்றான அப்பிள்ளையும் தந்தையுடன் ஆலயஞ் செல்ல முனைந்தார். தந்தை தடுத்தபோதும் பிள்ளை விடாப்பிடி யாகத் தொடர்ந்ததால் மனமிரங்கி அழைத்துச் சென்றார்.

## முதலாவது அற்புதம் :-

இன்றுபோல் தமிழகத்தில் நீராடும் சூழல் இல்லங்களில் இல்லை. சிறப்பான ஆலயங்களின் முன்னால் வழிபட வருவோரின் நன்மை கருதிப் பொதுமக்கள் நீராடுவதற்கென்றே நீர்நிலை களான திருக்குளங்களை அமைத்திருந்தனர். ஆலய வழிபாட்டிற் கென மகனுடன் வந்த சிவபாதவிருதயர் தாம் திருக்குளத்தில் நீராட முற்பட்டார். தன் மகனைத் திருக்குளப் படிக்கட்டில் அமர்த்தி விட்டு நீராடச் சென்றார். வேதியர் தமது நீராடும் விதிமுறைப்படி நீர்க்கிரியைகள் செய்து நீரில் மூழ்கி எழும் நிலையில் இருந்தார். அச்சமயம் பாலகன் தந்தையைக் காணாது தவித்தார். எதிரே இருந்த கோயிலின் கோபுரத்திலிருந்த திருவுருவான சிவசக்தியை நோக்கி "அம்மே அப்பா" என அழுதவண்ணம் கூவி அழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது பிள்ளையின் அழுதகுரல் கேட்ட அம்மையும் அப்பனும் இடப வாகனம் மீதமர்ந்து சிறுவனை அணுகினர். உலக மாதாவான உமையவள் தமது திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்திற் சுரந்து தம்பிள்ளைக்கு ஊட்டினார். (இதன் பேறாகவே "அழுத பிள்ளை பால் குடிக்கும்" என்னும் முதுமொழி இன்று வரை ஒலிக் கிறது) உலக நாயகியான உமையவள் தமது பிள்ளை நலிந்து போன சைவம் வளரப் பாடவும் அற்புதங்கள் செய்யவும் என்றே தமது திருமுலைப்பாலுடன் சிவஞானத்தையும் கலந்து ஊட்டினார். அழுத பிள்ளை அழுகை மறக்கவும் அம்மையும் அப்பனும் மறைந் தருளவும், சிவபாதவிருதயர் நீராடியதும் மகனை அணுகவும் சிறு நொடிப்பொழுதேயானது.

(குளத்தங்கரையில் பலர் கூடியிருந்தவேளை சிறுவனைத் தவிர வெறெவரும் காணாது வந்தருளிய இறைவன் இறைவியரின் திருவிளையாடல் அற்புதமானது. தவமும் தவமுடையார்க்காகும். இறைவன் சிவப்பேறு பெறும் பக்குவநிலையுள்ளாரின் கண்களில் மட்டும் காட்சி தருவார் என்பதால் இப்பிள்ளையைத் தவிர வேறெவராலும் காண முடியவில்லை.)

சிவபாதவிருதயர் மகனை அணுகியதும் பிள்ளையின் கடைவாயில் பால் வடிந்திருப்பதை நோக்கினார். வேதியர் குலா சாரப்படி தாம் தவிர்ந்த வேறெவர் வழங்குமெதையும் அருந்தாத பண்பினர். தமது பிள்ளை யாரோ தந்த பாலை அருந்தினான் எனச் சினந்தார். ஒரு சிறு தடியை எடுத்து "உனக்குப் பால் தந்தது யார்?" என மிரட்டினார். இறைவன் இறைவியிடம் பெற்ற ஞான உணர் வால் தகப்பனின் மிரட்டலான வினாவிற்கான பதிலைப் பண்ணிசையில் தர முற்பட்டார். ஆலயக் கோபுரத்திலிருந்த திருவுருவங்களைத் தமது விரலாற் சுட்டிக்காட்டிய வண்ணம் "தோடுடைய செவியன்" என்னும் பாடலில் சிவதத்துவ உணர்வை விபரமாகக் கூறினார். சிவதத்துவ உணர்வுடைய வேதியர் தமது பிள்ளையின் தவப்பேற்றையும் இறைவனின் பெருங்கருணையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் உணர்ந்தார். அவ்விடத்திலிருந்தே இறைவனைத் துதித்தார். இறைவனால் ஆட்கொள்ளப்பட்டதால் "ஆளுடைய பிள்ளை" என்றும், இறைவனால் தரப்பட்ட ஞானசம்பந்தமான பாலை உண்டதால் "ஞானசம்பந்தன்" என்றும் பிள்ளை செய்த அற்புதத்தால் வழங்கப்பெற்ற "திரு" என்னும் சிறப்புடன் "திருஞான சம்பந்தன்" என அன்று முதல் அழைக்கப்பெற்றார்.

திருஞானசம்பந்தன் சிவபாதவிருதயரை உணரும்படி "தோடுடைய செவியன்" என்னும் பாடலை அவ்விடத்தில் பாடியதும் தாமாகவே முன்சென்று தோணியப்பரின் ஆலயத்தை நோக்கிச் சென்று அப்பதிகத்தின் மிகுதிப் பாடல்களையும் பாடினார். இவ்வாலயத்தை வணங்கி வீதியையும் வலம் வந்து பாடலின் பதிகத்தை நிறைவு செய்தார். இறைவனின் பெருமையைத் தாமே பாடியதாகப் பதினொராவது பாடலையும் சேர்த்துப் பதிகத்தை நிறைவு செய்தார்.

சிவபாதவிருதயர் தமது தவப்பயனை எண்ணி வியந்தார். கூடிநின்ற யாவரும் தேவாரம் பாடிய ஞானக்குழந்தையைப் போற்றி வணங்கினர். தந்தை மகனைத் தோள் மீதிருத்தி வீடேகினார்.

திருஞானசம்பந்தசுவாமிகள் பாடியதும் அற்புதங்கள் நிறைந்ததுமான இப்பதிகம் பிற்காலப்பகுதியிலமைந்த பன்னிரு திருமுறைப் பாடல் வரிசையில் முதலாம் திருமுறையில் முதலாம் பதிகமாக அமைந்துள்ளது. இதிற் கூறிய பாடற் பதிகங்கள் யாவும் சைவம் போற்றும் எம்மவரின் சிவபக்தியைத் தூண்டும் அன்பென்னும் சிவமாகவே அமைந்துள்ளன.

"அன்பே சிவம்"

திருஞானசம்பந்தர் முதன்முதல் பாடலைப் பாடியதும் தந்தையார் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். உமையவள் வழங்கிய ஞானப்பால் ஆலயங்கள் தோறும் யாத்திரை செய்து ஆங்காங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட வைத்தது. சம்பந்தரின் பிரயாணத் தொடரில் பாடியபடி வரலாறு தொடர்கிறது. பிற்காலத்தில் திருமுறைகளை வகுத்தவர்கள் பண் அடைவிற்கேற்ப முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளில் அமைத்துள்ளனர். எனவே இத்தொடரில் சம்பந்தரின் வரலாறு ஒழுங்கின்படி செல்கிறது. பாடல்கள் சம்பந்தரின் திருமுறைக் கிரமமாகவே மூன்று திருமுறைகளிலும் மாறி மாறியே வருகின்றன.

## தவஞானக் குழந்தையின் மழலை மொழித் தேனிசையின் பெருமை

சேக்கிழார் பெருமான் 63 நாயன்மார்களின் வரலாற்றைப் பெரிய புராணம் எனத் தொகுத்தார். அவரின் தொகுப்பு பன்னிரண்டாம் திருமுறையாகவே அமைந்துள்ளது. இப்பெரிய புராணத்தில் 4253 பாடல்கள் பொதிந்துள்ளன. தமிழ் வேதமான திருமுறைகளைப் பாடவென இறைவனால் அவதாரம் பெற்று அம்மையப்பனால் தத்தெடுக்கப்பட்டு சிவஞானம் கலந்த ஞானப் பாலூட்டப்பட்ட தவப்புதல்வனின் மழலைப் பாடலில் மயங்கியவர் சேக்கிழார். மேலும் ஞானக்குழந்தையின் மழலைமொழி தேமதுரத் தமிழோசையில் பண் கலந்த ஏழிசையாக அமைந்தது. மேலும் சம்பந்தரின் பாடல்கள் (தற்போதுள்ளபடி முதல் மூன்று திருமுறைகளிலும் 384 பதிகங்கள் கொண்ட 4159 பாடல்கள் நிறைந்தன.

திருஞானசம்பந்தரின் வரலாற்றை - திருஞானசம்பந்தர் புராணம் எனக் குறிப்பிட்டு அணி செய்ததால் தமது 4253 பாடல்களில் சம்பந்தர் வரலாற்றைப் பெரிய புராண வரலாற்றில் திருஞானசம்பந்தரின் பாடல் பகுதி என 1255 பாடல்கள் இடம்பெற வைத்த பெருமை ஆளுடையபிள்ளைக்கே அமைந்தமை சிவன் செயலாகும். இவரின் சிறப்பை அறிந்த சுந்தரர் தமது திருத்தொண்டர் புராணத்தில் பின்வருமாறு கூறி வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வம்பறா வரிவண்டு மணம் நாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்"
(திருத்தொண்டர்தொகை 5)

## முதலாம் திருமுறை முதற்பதிகம்

திருச்சிற்றம்பலம்

திருப்பிரமபுரம் பண் : நட்டபாடை

01. தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

02. முற்றலாமையிள நாகமோடேன் முளைக்கொம்பவை பூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
சுற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால்தொழுதேத்தப்
பெற்றலூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

03. நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரஎன் னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய ஓரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

04. விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தெரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண் மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழந்தபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

05. ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர் காலம்மிதுவெனப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. மறைகலந்தஒலி பாடலோடாடல ராகிமமுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரஎன் னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்துபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

07. சடைமுயங்குபுன லன்னனலன்னெரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வொடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

08. வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயலிலங்கும்முல சிற்பலஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்கும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

09. தாணுதல்செய்திறை காணியமாலொடு தண்டாமறையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாணுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

10. புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயமிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

11. அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன் றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர் ஞானசம்பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தலெளிதாமே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலக்காவில் பொற்றாளம் பெற்றது

திருஞானசம்பந்தர் சுவாமிகள் முதன்முதல் தோணி புரத்தில் சிவஞானசித்தியால் முதலாவது திருப்பதிகப் பாடலான "தோடுடைய செவியன்" என்ற தொடரில் பாடி அற்புதம் செய்ததும் தந்தையுடன் தமது இல்லமேகினார்.

தம்மை ஆட்கொண்ட தோணியப்பரையும் இறைவியான பெரியநாயகியம்மையாரையும் எப்பொழுதும் சிந்தையிலிருத்திய தால் தினமும் தோணிபுரத்திற் பாடி வழிபடும் நியதியைக் கொண்டவர். இதனால் ஆலய தரிசனங் காண தல யாத்திரை சார்பான முதலாம் யாத்திரையாகத் தோணியப்பரை வழிபட்டதும் சிறு தொலைவிலுள்ள திருக்கோலக்காவிலும் தரிசிக்கச் சென்றார். கோலக்காவில் எழுந்தருளியுள்ள இறைவனை முதன்முதல் வணங்கும்போது பாடிப் பணி செய்தார். ஆலயத்தின் சுற்றுச்சூழல் ஆலயம், இறைவன், இறைவியின் பெரும் புகழைப் போற்றி "மடையில் வாழை பாய" என்ற தொடரில் முழுப்பதிகத்தையும் உள்ளம் உருகிப் பாடினார்.

இறைவன் மீதிருந்த பக்திப் பரவசத்தால் தமது இரு பிஞ்சுக் கரங்களில் தாளம் கொட்டிய வண்ணம் பாடி மகிழ்ந்தார். கருணையுள்ளங் கொண்ட இறைவன் தமது பக்தனின் பிஞ்சுக் கையில் வலி ஏற்படாது தமது பாடும் பணிக்கு அணி செய்யத் திருவுளங் கொண்டார். இறைவன் திருவைந்தெழுத்துப் பொறித்த திருப்பொற்றாளத்தைத் திருஞானசம்பந்தருக்கருளினார். சம்பந் தப்பிள்ளையின் வாழ்நாட் பாடற் பணிக்குத் திருப்பொற்றாளம் அணிகலனாகியது.

பண் : தக்கராகம்

1. மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பெண்தான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டான் நஞ்சை உலக முய்யவே.

3. பூணற் பொறிகொ ளரவம் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணக ளானவே.

4. தழுக்கொள் பாவந் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே.

5. மயிலார் சாயல் மாதோர் பாகமா
எயிலார் சாய எரித்த எந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பவமே.

6. வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாத மடைந்து வாழ்மினே.

7. நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலால் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கல் துயர மில்லையே.

8. எறியார் கடல்சூ ழிலங்கைக் கோன்றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியால் தொழுவார் வினைகள் நீங்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. நாற்ற மலர்மே லயனு நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்
கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாத மேத்தி வாழ்மினே.

10. பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே.

11. நலங்கொள் காளி ஞான சம்பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோய் ஓங்கி வாழ்வரே.

திருச்சிற்றம்பலம்.

## அடுத்த திருயாத்திரைத் தலமாக திருநனிப்பள்ளி அமைந்தது

தாயார் பகவதி அம்மையின் பிறந்த ஊரான திருநனிப் பள்ளியில் வாழ்ந்த அந்தணர்கள் நேரில் வந்து சம்பந்தரை வணங்கித் தமது திருப்பதிக்கும் வருமாறு கேட்டனர். அதன் பேரில் தந்தையாரின் தோளின் மீதிருந்து திருநனிப்பள்ளியை நாடினார். அவ்வூர்ச் சூழல் பாலை நிலமாக இருந்ததால் இறைவனை வேண்டி "காரைகள் கூகை முல்லை" என்ற தொடரில் பதிகம் பாடினார். இறையருளும், பாடலின் அழகும் ஒன்றமையப் பாலை நிலம் நெய்தலும் முல்லையுமாக மாறியது. இவ்வற்புதத்தைக் கண்டு யாவரும் இறையருளையும், வேண்டிப் பாடிய ஞானக் குழந்தையையும் வியந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநனிபள்ளி பண் : பியந்தைக்காந்தாரம்

01. காரைகள் கூகைமுல்லை களவாகையீகை
படர் தொடரிகள்ளி கவினிச்
சூரைகள் பம்மிவிம்மு சுடுகாடமர்ந்த
சிவன்மேய சோலை நகர்தான்
தேரைகளாரைசாய மிதிகொள்ள வாளை
குதிகொள்ளவள்ளை துவள
நாரை களாரல்வாரி வயன் மேதி வைகு
நனிபள்ளி போலு நமர்காள்.

02. சடையிடை புக்கொடுங்கி யுளதங்கு வெள்ளம்
வளர்திங்கள் கண்ணியயலே
இடையிடை வைத்ததொக்கு மலர்தொத்து மாலை
யிறைவன் னிடங்கொள் பதிதான்
மடையிடை வாளைபாய முகிழ்வாய் நெரிந்து
மணநாறு நீல மலரும்
நடையுடை யன்னம் வைகு புனலம்படப்பை
நனிபள்ளி போலு நமர்காள்.

03. பெறுமலர் கொண்டு தொண்டர் வழிபாடுசெய்ய
லொழிபாடிலா தபெருமான்
கறுமலர்கண்டமாக விடமுண்டகாளை
யிடமாயகா தனகர்தான்
வெறுமலர்தொட்டுவிட்ட விசைபோன கொம்பின்
விடுபோதலர்ந்தவிரை சூழ்
நறுமலரல்லிபுல்லி யொலிவண் டுறங்கு
நனிபள்ளி போலு நமர்காள்

04. குளிர்தரு கங்கைதங்கு சடைமாடிலங்கு
தலை மாலையோடு குலவி
ஒளிதரு திங்கள் சூடி யுமைபாகமாக
வுடையானுகந்த நகர்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்தரு கொம்மலோடு குயில்பாடல் கேட்ட
பெடைவண்டு தானுமுரல
நளிர்தரு சோலைமாலை நரைகுருகு னவகு
நனிபள்ளி போலு நமர்காள்

05. தோடொரு காதனாகி யொருகா திலங்கு
சுரிசங்கு நின்று புரளக்
காடிடமாக நின்று கனலாடுமெந்தை
யிடமா யகாதனகர்தான்
வீடுடனெய்துவார்கள் விதியொன்று சென்று
வெறிநீர் தெளிப்ப விரலால்
நாடுடனாடு செம்மை பொரி வெள்ளமாரு
நனிபள்ளி போலு நமர்காள்.

06. மேகமொடோடு திங்கண் மலராவணிந்து
மலையான் மடந்தை மணிபொன்
ஆகமொர் பாகமாக வனலாடு மெந்தை
பெருமானமர்ந்த நகர்தான்
ஊகமொடாடுமந்தி யுகளுஞ் சிலம்ப
வகிலுந்தியொண் பொனிடறி
நாகமொடாரம்வாரு புனல் வந்தலைக்கு
நனிபள்ளி போலு நமர்காள்.

07. தகைமலி தண்டுசூல மனலுமிழு நாகம்
கொடுகொட்டி வீணை முரல்
வகை மலி வன்னி கொன்றை மதமத்தம் வைத்த
பெருமானுகந்த நகர்தான்
புகைமலி கந்த மாலை புனைவார்கள் பூசல்
பணிவார்கள் பாடல் பெருகி
நகைமலி முத்திலங்கு மணல்சூழ் கிடங்கை
நனிபள்ளி போலு நமர்காள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. வலமிகுவாளன் வேலன் வளை வாளெயிற்று
மதிய வரக்கன் வலியோ
குல மிகுதோள் களொல்க விரலாலடர்ந்த
பெருமானுகந்த நகர்தான்
நிலமிகு கீழுமேலு நிகராது மில்லை
என நின்ற நீதியதனை
நலமிகு தொண்டர் நாளு மடிபரவல் செய்து
நனிபள்ளி போலு நமர்காள்.

09. நிறவுரு வொன்றுதோன்றி யெரியொன்றி நின்ற
தொருநீர்மை சீர்மை நினையார்
அறவுறு வேத நாவ னயனோடு மாலு
மறியா தவண்ண னகர்தான்
புறவிரி முல்லை மௌவல் குளிர் பிண்டி புன்னை
புனை கொன்றை துன்று பொதுளி
நறவிரிபோது தாது புதுவாச நாறு
நனிபள்ளி போலு நமர்காள்.

10. அனமிகு செல்குசோறு கொணர்கென்றுகையி
லிடவுண்டு பட்ட வமணும்
மனமிகு கஞ்சி மண்டை யதிலுண்டு தொண்டர்
குணமின் றிநின்ற வடிவும்
வினை மிகு வேத நான்கும் விரிவித்தநாவின்
விடையானுகந்த நகர்தான்
நனமிகு தொண்டர் நாளுமடிபரவல் செய்யு
நனிபள்ளி போலு நமர்காள்.

11. கடல் வரையோ தமல்கு கழிகானல்பானல்
கமழ்காழி யென்று கருதப்
படுபொருளாறு நாலு முளதாகவைத்த
பதியான ஞான முனிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுபறை யொன்றவத்தர் பியன்மேலிருத்தி
னிசையாலுரைத்த பனுவல்
நடுவிருளாடு மெந்தை நனிபள்ளி யுள்க
வினைகெடுதலாணை நமதே.

திருச்சிற்றம்பலம

## திருஞானசம்பந்தர் தில்லையில் தில்லை மூவாயிரவரைச் சிவகணங்களாகத் தரிசித்தல்.

சம்பந்தர் தம்மைப் பாலைக்கொடுத்து ஆட்கொண்ட எம்பெருமானின் திருப்பேராலயமான தில்லைச் சிதம்பரத்தை ஏத்திப் போற்றிப்பாடி மகிழச் சென்றார். பல இயற்கை எழில் பொங்கும் தில்லையின் இயற்கை வளங்களையும் கொண்ட இப்பேராலயத்தின் தெற்கு வாசற்கோபுரத்தின் முன்பாக வீழ்ந்து வணங்கினார். தம்முடன் கூட வரும் தந்தையார் வீணை இசைக்கும் அடியார்கள் புடைசூழத் திருத்தலத்துட் சென்றார். அச்சமயம் தில்லைவாழ் அந்தணர்களும் மற்றும் அடியார்களும் எதிர்சென்று வரவேற்று அழைத்துச் சென்றனர்.

எம்பெருமானின் திருவாயிலினுட் சென்றதும் தில்லைக்கே பெருமையைத் தரும் நான்கு திருச்சபைகளையும் நோக்கினார்.

1. சிற்றம்பலம் - நடராசப் பெருமான் திருநடனஞ் செய்யுமிடம்.
2. பொன்னம்பலம் - சிற்றம்பலத்திற்கு முன்னே ஸ்படிக லிங்கத்திற்குத் தினமும் பூசை செய்யுமிடம்.
3. திருச்சபை - நடராசப் பெருமானின் கொடிமரத்தின் தென்பாலுள்ள ஊர்த்துவத்தாண்டவம் செய்தருளிய இடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ராச சபை - ஆயிரங்கால் மண்டபம் அமைந்துள்ளது. (இவ்விடத்தில் பிற்காலத்தில் மாணிக்க வாசகர் புத்தரை வாதில் வென்று ஊமைப் பெண்ணைப் பேச வைத்த இடம். சம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்களைச் சிவகணங் களாகக் கண்ட இடம். சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணம் என்னும் நூலை எழுத "உலகெலாம்" என அடி எடுத்துக் கொடுத்த திருச்சபை.) பல அளப்பரிய அற்புத சபைகளைக் கண்டதும் தலைமேற் கூப்பிய கைகளுடன் ஆனந்தக் கண்ணீர் சொரிய அன்புடன் என்பும் உள்ளமும் உருக ஆளானார். பதிகங்கள் பாடினார். தம்மை ஆட்கொண்ட இறைவனின் பெருங் கருணையை உளமார எண்ணிப் பரவச மடைந்தார்.

சம்பந்தர் தமது சிவஞான உணர்வால் இவ்வற்புதங்கள் செய்து உலகையெல்லாம் உய்விக்கும் எம்பெருமானின் சிவநெறி துலங்க தேவர்கள் தமக்குக் கிடைக்கும் ஆகுதிகளாய் மகிழ நாடு முழுவதும் பாவம் போக்கும் நறும்புகையை வாரிவழங்கும் பெருவேள்வியால் தம் கடமையுணர்வால் வேள்வி செய்யும் அந்தணர்களை நோக்கினார். அந்தணர் இறை பணியை ஆற்றவென்றே வேதநூல்களிலும் குருகுலமுறைப்படியும் தாம் கற்ற வேதத்தை ஓதிப் பெருவேள்வியை உலக நன்மைக்காகவும் இறைவனை மேன்மைப்படுத்தவும் செய்யும் பணியைத் தம் மனத்துள்ளிருத்தி "கற்றாங்கு எரியோம்பி" என்று தொடங்கும் பாடலைப்பாடி ஏழிசைக்கு மெருகூட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கற்றாங் கெரியோம்பிக கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே.

2. பறப்பைப் படுத்தெங்கும் சுவேட்டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மையல்தீர்வாரே.

3. மையா ரொண்கண்ணார் மாடநெடுவீதிக்
கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுள்
பொய்யா மறைபாடல் புரிந்தானுலகேத்தச்
செய்யா னுறைகோயில் சிற்றம்பலத்தானே.

4. நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைகாக்கும் பேரம் பலம்தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம்பலமேய
இறைவன் கழலேத்து மின்ப மின்பமே.

5. செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம்பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ்செல்வமே.

6. வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுட் சிற்றம்பலமேய
கருமானுரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அலையார் புனல்சூடி யாகத்தொருபாக
மலையான் மகளோடு மகிழ்ந்தானுலகேத்தச்
சிலையா லெயிலெய்தான் சிற்றம்பலந்தன்னைத்
தலையால் வணங்குவோர் தலையா னார்களே.

8. கூர்வா ளரக்கன்றன் வலியைக் குறைவித்துச்
சீரா லேமல்கு சிற்றம் பலமேய
நீரார் சடையானை நித்த லேத்துவார்
தீரா நோயெல்லாந் தீர்த்தல் திண்ணமே.

9. கோணா கணையானுங் குளிர்தா மரையானும்
காணார் கழலேத்தக் கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே.

10. பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடுங்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
நட்டப் பெருமானை நாளுந் தொழுவேமே.

11. ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே.

சம்பந்தர் உளமார, கண்ணார வழிபட்ட பேருவகையில் இறைவன் திருமுன்றில் வீழ்ந்து வணங்கியதும் தேமதுரத் தமிழோசையில் ஏழிசை வெள்ளத்தைப் பரவ விட்டார். இன்று வாழும் எம்மினிய தமிழ் வேதத்தை ஓதி உய்யும் வண்ணம் தாம்பாடி மகிழ்ந்தார். தமது அடியார் கூட்டமும் யாழிசை மீட்டும் பாணர் உட்பட யாவரும் ஆலயத்தின் நான்கு வீதிகளிலும் பசனை பாடும் பணியை ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லிறைவனின் ஞானக்குழந்தை தமது பால்மணம் மாறாத திருவாயால் அன்று வீதிவலம் வந்து திருமுறையோதி இறைவனை வழிபட்டு வழிகாட்டினார். இறைவன் காட்டிய புதுப்பாதையால் ஈழத்தில் தமிழ் வேத ஒலி பரப்பும் நற்பணியில் கந்தபுராண கலா சாரத்தையே நன்னெறி எனப்போற்றி வாழ்ந்த எமது ஆறுமுக நாவலர் பெருமான் அன்று அடியெடுத்து வைத்தார். அப்பணி யாழ் மண்ணின் எல்லா ஆலயங்களிலும் நடைமுறையில் இருந்தது. காலங்கள் செல்லச் சில ஆலயங்களில் பண்ணோடு இசைபாடித் திருமுறைகளை அலங்கரித்த பெருமை இம்மண்ணிற்கே உண்டு. இன்று பெருவிழாக்காலங்களில் திருமுறைகளைக் கூட்டாகப் பாடிப் போற்றும் சிறப்பை ஆலயங்களில் பார்த்துப் பரவசமடைகிறோம். பலநூற்றாண்டுகளுக்கு முன்பே திருஞானசம்பந்தப் பெருமான் மேற்கொண்ட இப்பணி இன்றும் தொடர வகை செய்தது சம்பந்தர் பெருமானின் ஆன்மீகப் பாதையின் வெளிச்சமாகும்.

தில்லையிலிருந்து புறப்பட்டு அயலிலுள்ள சிவாலயங்களை யும் தரிசிக்கச் சித்தங்கொண்ட சம்பந்தர் மீண்டும் தமது அடியார் கூட்டத்தினருடனும் வீணை இசைமீட்கும் பாணருடனும் தில்லை நடராசப் பெருமானைப் போற்றி வழிபட அவ்விடம் வந்தார். யாவரையும் அந்தணர்கள் உவகையுடன் வரவேற்று உபசரித்தனர். அச்சமயம் தில்லைவாழ் அந்தணர்கள் சிவகணங்களாகவே காட்சியளித்தனர். இவ்வரிய காட்சியைக் கண்ட சம்பந்தர் இறைவனின் அற்புதத்தினால் தாம் கண்ட (அந்தணர்கள் சிவகணங்களாகக்) காட்சியைத் திருநீலகண்ட யாழ்ப்பாணருக்குக் காண்பித்து இன்புற்றார். இறைவனின் பெருங்கருணை அனை வரையும் வியப்பில் ஆழ்த்தியது.

சம்பந்தர் தமது அடியார்களுடன் ஆடல்பிரானின் திருமுன் நின்று பிரானின் அழகையும் அற்புதத்தையும் கண்டு தலைமேற் குவித்த கைகளுடன் ஆடிப்பாடினார். இறைவன் மீதிருந்த தணியாத பேரன்பினால் கண்கள் ஆனந்த மழைசொரிய அன்பி னால் என்பும் உருகத் தன்னை மறந்து பாடினார். மூன்றாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறையில் அமைந்துள்ள "ஆடினாய் நறுநெய்யுடன் பால் தயிர்" என்று தொடங்கும் பதிகத்தைப்பாடி அருளினார். இதன் மூன்றாவது பாடலின் மூன்றாவது வரியில் "சீலத்தார் தொழுதேத்தும் சிற்றம்பலம்" எனத் தில்லைவாழ் அந்தணர் களைப் புகழ்ந்து பாடினார். தொடர்ந்து பண்ணோடு பாடிய பக்தி மழையில் யாவரையும் நனைய வைத்தார். வழமை போல ஆடல் பிரானின் தரிசனம் நிறைந்ததும் தமது பக்தர்களுடன் திருத் தலத்தின் நான்கு தெருவீதிகளையும் பாடிய வண்ணம் வலம்வந்து இறைவனிடம் அன்றைய பணியினின்று விடை பெற்றார்.

கோயில் (சிதம்பரம்) பண் - காந்தார பஞ்சமம்

1. ஆடினாய்நறு நெய்யொடு பால்தயிர்
 அந்தணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடினாய் இடமா நறுங்கொன்றை நயந்தவனே
 பாடினாய்மறை யோடுபல் கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
 சூடினாய் அருளாய் சுருங்கஎம் தொல்வினையே

2. கொட்டமேகம முங்குழ லாளொடு
 கூடினாய் எரு தேறினாய்நுதற்
பட்டமே புனைவாய் இசைபாடுவ பாரிடமா
 நட்டமே நவில்வாய் மறை யோர்தில்லை
நல்லவர்பிரி யாதசிற் றம்பலம்
 இட்டமா உறைவாய்இவை மேவியது என்னைகொலோ

3. நீலத்தார்கரிய மிடற்றார் நல்ல
 நெற்றி மேலுற்ற கண்ணினார் பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறணிவார் சடையார்
 சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலம்
சேர்தலால் கழற் சேவடி கைதொழக்
 கோலத்தாய் அரு ளாய்உன காரணம் கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கொம்பலைத்தழகு எய்திய நுண்ணிடைக்
கோல வான்மதி போல முகத்திரண்டு
அம்பு அலைத்த கண்ணாள் முலைமேவிய வார்சடையான்
கப்பலைத்து எழு காமுறு காளையர்
காதலால் கழற் சேவடி கைதொழ
அம்பல்துறைவான் அடியார்க்கு அடையா வினையே.

5. தொல்லையார் அமு துண்நைஞ் சுண்டதோர்
தூமணி மிடறா பகுவாய தோர்
பல்லையார் தலையிற் பலியேற்றுழல் பண்டரங்கா
தில்லையார் தொழுது ஏத்து சிற்றம்பலம்
சேர்தலால் கழற் சேவடி கைதொழ
இல்லையாம்வினை தான்எரியம் மதில் எய்தவனே

6. ஆகந்தோய்அணி கொன்றை யாய்அனல்
அங்கையாய் அம ரர்க்கம ராவுமை
பாகந்தோய் பகவா பலியேற்றுழல் பாண்டரங்கா
மாகந்தோய்பொழில் மல்கு சிற்றம்பலம்
மன்னினாய்மழு வாளினாய் அழல்
நாகந்தோய் அரையாய் அடியாரை நண்ணாவினையே

7. சாதியார்பணிங் கின்னொடு வெள்ளிய
சங்கவார்குழை யாய்திக ழுப்படும்
வேதியா விகிர்தா விழவாரணி தில்லை தன்னுள்
ஆதியாய்க்கிடம் ஆயசிற் றம்பலம்
அங்கையால் தொழ வல்லடி யார்களை
வாதியாதகலும் நலியாமலி தீவினையே

8. வேயினார்பணைத் தோளியோ டாடலை
வேண்டி னாய்விகிர் தாஉ யிர் கட்கமுது
ஆயினாய்இடு காட்டெரி யாடல் அமர்ந்தவனே
தீயினார்கணை யால் புரம் மூன்றெய்த
செம்மையால் திகழ்கின்ற சிற்றம்பலம்
மேயினார்கழலே தொழுது எய்ததும் மேலுலகே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தாரினார்விரி கொன்றையாய் மதி
தாங்குநீள்சடை யாய் தலைவா நல்ல
தேரினார்மறுகின் திருவாரணி தில்லைதன்னுள்
சீரினால் வழிபாடு ஒழியாத தோர்
செம்மையால் அழ காய சிற்றம்பலம்
ஏரினால் அமர்ந்தாய் உனசீரடி யேத்துதுமே

10. வெற்றரை யுழல்வார் துவர் ஆடைய
வேடத்தாரவர்கள் உரை கொள்ளன்மின்
மற்றவர் உலகின் அவலம்மவை மாற்றகில்லார்
கற்றவர் தொழுது ஏத்தும் சிற்றம்பலம்
காதலால் கழற்சேவடிகை தொழ
உற்றவர் உலகின் உறுதிகொள் வல்லவரே

11. நாறும்பூம்பொழில் நண்ணிய காழியுள்
நான்மறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறும் இன்தமிழால் உயர்ந்தார்உறை தில்லைதன்னுள்
ஏறுதொல் புகழ் ஏந்து சிற்றம் பலத்து
ஈசனை இசையாற் சொன்ன பத்திவை
கூறுமாறு வல்லார் உயர்ந்தாரொடும் கூடுவரே.

திருச்சிற்றம்பலம்.

## முத்துச்சிவிகை, முத்துச்சின்னம், முத்துக்குடை பெற்றது.

சம்பந்தர் இறையருளின் நியதிப்படி சிவத்திருத்தல யாத்திரைகளை மேற்கொண்டவர். சீர்காழியிலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள திருவரத்துறைக்குச் செல்ல முற்பட்டார். அன்பர்கள் தொண்டர்கள், வேதியர்கள் புடைசூழ யாவரும் (அக்காலப் பிரயாண வசதிகளற்ற சூழலில் யாவரும் பாதந்தேய நடந்தே செல்வர்) பாத யாத்திரையை மேற்கொண்டனர். சிவபாதவிருதயர் பக்தர்களிடையே தம்மைந்தரை தோள்மீதிருத்திக் கொண்டே சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவரும் நெடுந்தூரம் சென்றதால் பாலகன் தந்தையாரின் தோளிலிருந்து இறங்கி தமது மெல்லிய சிற்றடிகளை நிலத்திற் பதித்துக் குறுநடை நடந்தார். பாலகன் பாதந்தேய நடந்ததைப் பொறுக்காத பகலவன் அந்திசாயவும் காரிருள் சூழ்ந்தது. திருவரத்துறை ஈசனை நேரிற் சென்று வழிபடும் அவாவில் சம்பந்தர் தாம் நடந்து கால் வலி ஏற்பட்டதால் திருவருளை வேண்டித் திருவைந்தெழுத்தை ஓதிய வண்ணம் "மாறன்பாடி" யில் தங்கினார். யாவரும் வெகுதூரம் நடந்த களைப்பினால் அன்றிரவு அவ்விடத்திலேயே தங்கினர்.

திருநெல்வாயிலிலமைந்த திருவரத்துறையில் குடிகொண் டுள்ள இறைவன் தமது பாலகன் பக்தியுடன் குறுநடை நடந்து இயலாமையால் தங்கியிருப்பதை உணர்ந்தார். அன்றிரவு அவ்வூரிலுள்ள அனைத்து அந்தணர்களதும் கனவிற்தோன்றி "ஞானசம்பந்தன் தம்மை நாடி வருகிறான், ஆலயத்திலுள்ள முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் ஆகியவற்றை எடுத்துச் சென்று அவனுக்குக் கொடுங்கள்" என்று கூறி மறைந்தருளினார். வேதியர்கள் விழித்ததும் அதிகாலையில் திருவரத்துறை ஆலயத்தில் அனைவரும் ஒன்று கூடினர். இறைவன் கூறியபடி அங்கு பிரகாசமான முத்துச்சிவிகையையும் வெண்முத்துக்குடையையும் ஊதும் முத்தாலான ஊதுகுழலையும் கண்டு யாவரும் வியந்தனர்.

இறைவனை வியந்து வணங்கிய வேதியர்கள் தமது வேதநாதம் ஒலிக்கவும் சங்கு, துந்துபி, தாரை முதலான இசைக்கருவிகள் ஒலிக்கவும் அன்பும் ஆவலும் பொங்க முத்துச் சிவிகை ஆகியவற்றை எடுத்துக் கொண்டு மாறன்பாடிக்குச் சென்றனர். இறைவன் திருஞான சம்பந்தரின் கனவிற் தோன்றி "நாம் உமக்குக் கொடுத்துள்ள முத்துச்சிவிகை முதலானவற்றை எடுத்துச் சிவிகை மீதமர்ந்து எம்மிடம் வருவாயாக" என்று கூறியதும் மறைந்தருளினார். சம்பந்தர் உடன் துயிலெழுந்து தமது கனவைத் தந்தையாரிடம் தெரிவித்தார். யாவரும் இறையருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியந்தனர். யாவரும் காலைக் கடன்களை நிறைவு செய்தனர். அச்சமயம் திருவரத் துறையிலிருந்து வேதியர்கள், ஆலயப் பணியாளர்கள் அடியார் களடங்கிய பெருங்கூட்டத்தினர் சிவன் புகழ் பாடிய வண்ணம் அதிகாலை வேளையில் திருஞானசம்பந்தர் முன்வந்து பணிந் தனர். இறைவன் ஆணைப்படியே இவற்றை இங்கு கொண்டு வந்தோம். இதனை ஏற்றுக்கொள்ளவும் என அந்தணர்கள் அன்புடன் தெரிவித்தனர்.

இறைவனால் அனுப்பப் பெற்ற முத்துச்சிவிகை, முத்துக் குடை, முத்தான ஊது சின்னங்கள் யாவற்றையும் பரிவுடன் பெற்றதும் இறைவன் புகழை வியந்தவர், தலைமேற்கூப்பிய கரங்களுடன் இறைவனைப் புகழ்ந்து பாடிய வண்ணம் முத்துச் சிவிகையை வலம் வந்து சிவிகையில் ஏறி அமர்ந்தருளினார். சம்பந்தர் தமக்கென வழங்கிய சிவிகை முதலானவற்றைப் பெற்றதும் திருவரத்துறை இறைவனை வேண்டிப் பாடிய திருப்பதிகம் "எந்தை ஈசன் எம்பெருமான்" என்ற தொடரில் பாடப் பெற்றது. இப்பதிகம் பாடிய வண்ணம் சம்பந்தர் பக்தர்கள் புடைசூழத்திருவரத்துறைத்தலத்தை நாடினார். இவ்வாலயத்தின் திருக்கோபுரத்தைக் கண்டதும் சற்றுத் தொலைவிலேயே சம்பந்தர் சிவிகையிலிருந்து இறங்கி நடந்து கோபுர வாசலைக் கண்டு வணங்கினார். பக்தர்களின் ஆரவாரத்துடன் இறைவனைத்துதித்த வண்ணம் பலமுறை நிலத்தில் வீழ்ந்து வணங்கி எழுந்தார். திருவரத்துறையில் குடிகொண்ட இறைவனை வேண்டி சம்பந்தர் பாடிய "எந்தை ஈசன் எம்பெருமான்" என்னும் திருப்பதிகத்தை நோக்குவோம்.

திருநெல்வாயில் அரத்துறை பண் : பியந்தைக்காந்தாரம்

01. எந்தை யீசனெம் பெருமா னேறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவதன்றால்
கந்த மாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலை நெல்வாயி லரத்துறை யடிகள் தம்மருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. ஈரவார்சடை தன்மே லிளம்பிறை யணிந்த வெம்பெருமான்
சீருஞ் செல்வமு மேத்தாச்சிதடர்க டொழுச் செல்வ தன்றால்
வாரி மாமலருந்தி வருபுனனிவா மல்கு கரைமேல்
அருஞ்சோலைநெல் வாயிலரத்துறை யடிகடம் மருளே.

03. பிணி கலந்தபுன் சடைமேற் பிறையணி சிவனெனப்பேணிப்
பணி கலந்துசெய் யாதபாவிக டொழுச் செல்வ தன்றால்
மணி கலந்துபொன் னுந்தி வருபுன னிவாமல்கு கரைமேல்
அணி கலந்தநெல் வாயிலரத்துறை யடிகடம் மருளே.

04. துன்னவாடை யொன்றுடுத்துத் தூயவெண் ணீற்றினராகி
உன்னி நைபவர்க்கல்லா லொன்றுங்கை கூடுவதன்றால்
பொன்னு மாமணி யுந்திப் பொருபுன னிவாமல்கு கரைமேல்
அன்ன மாருநெல் வாயி லரத்துறை யடிகடம் மருளே.

05. வெரு குரிஞ்சுவெங் காட்டி லாடிய விமலனென் றுள்கி
உருகி நைபவர்க் கல்லா லொன்றுங்கை கூடுவ தன்றால்
முரு குரிஞ்சுபூஞ் சோலை மொய்ம்மலர் சுமந்திழி நிவாவந்
தரு குரிஞ்சு நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே.

05. உரவு நீர்சடைக் கரந்த வொருவ னென்றுள் குளிர்ந்தேத்திப்
பரவி நைபவர்க் கல்லால் பரிந்துகை கூடுவதன்றால்
குரவநீடுயர் சோலைக்குளிர்புன னிவாமல்கு கரைமேல்
அரவமாறுநெல் வாயிலத்துறை யடிகடம் மருளே.

07. நீல மாமணி மிடற்று நீறணி சிவனெனப் பேணும்
சீல மாந்தர்கட் கல்லாற் சென்றுகை கூடுவதன்றால்
கோல மாமலருந்திக்குளிர்புன னிவாமல்கு கரைமேல்
ஆலுஞ்சோலை நெல்வாயிலரத்துறை யடிகடம் மருளே.

08. செழுந்தண் மால்வரை யெடுத்த செருவலியிராவண னலற
அழுந்தவூன்றிய விரலான் போற்றியென் பார்க்கல்ல தருளான்
கொழுங்க னிசுமந் துந்திக் குளிர்புன னிவாமல்கு கரைமேல்
அழுந்துஞ்சோலை நெல் வாயிலரத்துறை யடிகடம் மருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. நுணங்கு நூலயன் மாலுமிருவரு நோக்கரியானை
வணங்கி நைபவர்க் கல்லால் வந்து கைகூடுவ தன்றால்
மணங்கமழ்ந்து பொன் னுந்தி வருபுன னிவாமல்கு கரைமேல்
அணங்குஞ் சோலை நெல் வாயிலரத்துறை யடிகடம் மருளே.

10. சாக்கி யப்படு வாருஞ் சமணப்படு வார்களு மற்றும்
பாக்கியப்பட கில்லாப் பாவிக டொழச் செல்வ தன்றால்
பூக்கமழ்துபொன் னுந்திப் பொருபுன னிவாமல்கு கரைமேல்
ஆர்க்குஞ் சோலைநெல் வாயிலரத்துறை யடிகடம் மருளே.

11. கறையினார்பொழில் சூழ்ந்த காழியுண் ஞானசம் பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த வரத்துறை யடிகடம் மருளை
முறைமையாற் சொன்ன பாடல் மொழியு மாந்தர்தம் வினை போய்ப்
பறையு மையுற வில்லைப் பாட்டிவை பத்தும் வல்லார்க்கே.

திருச்சிற்றம்பலம்

## உபநயனத்தின் போது பாடியது

திருஞானசம்பந்தர் தமது ஞான உணர்வால் இறைவனை வேண்டிப் பதிகங்கள் பாடியும் அற்புதங்கள் செய்தும் தெய்வீக மானவராக இருந்தபோதும் ஏழு வயதை எட்டியதும் தமது குல மரபுப்படி உபநயனஞ் செய்யத் தந்தையார் ஏற்பாடு செய்தார். ஞானக்குழந்தைக்குச் சிறப்பான விழாவாக ஏற்பாடு செய்த சிவ பாதவிருதயர் நால்வேதங்களிலும் தலைசிறந்த பிராமணோத்தமர் களை அழைத்திருந்தார். அவர்களுள் சகல கிரியைகளிலும் வல்லவரான முதியவேதியர் முன்னின்று செயற்பட்டார். சகல விதிகளுக்கமைவான சடங்குகளுஞ் செய்து முடிந்ததும் உபதேசஞ் செய்யப்பட்டது. நான்மறையோர் தமது திறமைக்கேற்ப நால் வேதங்களிலிருந்த சிறப்பான அம்சம்களையும் மந்திரங்களையும் ஓதுவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவற்றையும் செவிமடுத்த சம்பந்தர் அவர்கள் எதிரில் நின்று எண்ணிறைந்த புனித வேதத்தின் தத்துவங்களையும் அவற் றின் அங்கமான கலைகளையும் உரிய முறைப்படி ஓதியருளினார். இதைக்கேட்ட வேதியர்கள் தமது பணிக்கமைவான தத்துவக் கருத்துகளிலுள்ள சந்தேகங்களையும் கேட்டறிந்தனர். சம்பந்தர் அவர்களின் சந்தேகத்தை நீக்கியருளினார். மேலும் அவர்கள் தெளியும் வண்ணம் எல்லாவேத மந்திரங்களுக்கும் இறைவனின் திருவைந்தெழுத்தே காரணமானது என்று கூறி "துஞ்சலும் துஞ்ச லில்லாத போழ்தினும்" என்னும் பஞ்சாட்சரத் திருப்பதிகத்தைப் பாடினார். அப்பதிகத்தில் "வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே" என்னும் தமது பதிகத்தின் இரண்டாவது பாடலில் பாடினார். இதனைக் கேட்டதும் மறையோர் யாவரும் பெருமகிழ்வுற்று சம்பந்தரைப் போற்றியும் தோணியப்பரை வழிபட்டும் மேலும் பல இசைப்பாடல்களைப்பாடி இன்புற்றனர்.

தமது குலவிருதுப்படி செய்யப்பட்ட உபநயன விழாவின் போது நான்மறை (வடமொழி) யோதும் வேத விற்பன்னர்களின் நால்வேத மந்திரங்களிலும் தமிழ் மறையான அஞ்செழுத்து மந்திரம் என்பதைப் பஞ்சாட்சரப் பதிகத்தின் மூலம் போதிய விளக்கம் தந்து அன்று நிலைநாட்டித் தமிழ்வேதத்தின் மகிமையை விளக்கியவர் திருஞானசம்பந்தர். இத்தமிழ் வேதமான பஞ்சாட் சரத் திருப்பதிகம் திருஞானசம்பந்தர் பாடிய மூன்றாம் திருமுறை யில் இடம்பெற்றுள்ளது.

பஞ்சாட்சரத் திருப்பதிகம் பண் - காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

1. துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்றுஅடி வாழ்ந்த வந்தகூற்று
அஞ்ச வுதைத்தனன் அஞ்செ ழுத்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே.

3. ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்
தேனை வழிதிறந்து ஏத்து வார்க்கிடர்
ஆன கொடுப்பன அஞ்செ ழுத்துமே.

4. நல்லவர் தீயவர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே.

5. கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே.

6. தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையி னும்துணை அஞ்செ ழுத்துமே.

7. வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செ ழுத்துமே.

8. வண்டமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டுதுதித்த பின்னவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே.

10. புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே.

11. நற்றமிழ் ஞானசம்பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே.

திருச்சிற்றம்பலம்

## திருப்பழனம் - இறைவனைப் புகழ்ந்து பாடியது

திருஞானசம்பந்தர் தமது ஆலய தரிசனச் சுற்றுலாவின் போது திருப்பழன திருத்தலத்தை நாடினார். ஆலயத்துட் சென்றதும் மூல மூர்த்தியான முக்கட் பரமேட்டியான தெய்வங் களுக்கெல்லாம் தலைவரான சிவபெருமானை உள்ளம் நெகிழ மனமுருகக் கண்குளிரக் கண்டார். சம்பந்தரின் கண்வலையில் எட்டாத அற்புதத் தோற்றத்தைக் கண்டவரும் பக்தி மேலிட இறைவனின் பொலிவையும் அவரின் காட்சிதர வரும் கோலத்தை யும் கண்ட களிப்பில் பாடிய பதிகம் "வேதமோதி வெண்ணூல் பூண்டு" என்னும் உள்ளங்கவரும் இனிய தேவாரப் பதிகமாகும். இப்பதிகம் முதலாந் திருமுறையில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பழனம் பண் : தக்கேசி

1. வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளை எருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரித்தோலார்
நாதாஎனவும் நக்கா எனவும் நம்பாஎனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.

2. கண்மேற்கண்ணுஞ் சடைமெற்பிறையுமுடையார் காலனைப்
புண்ணாறுதிர மெதிராறோடப் பொன்றப்புறந்தாளால்
எண்ணாதுதைத்த எந்தைபெருமா னிமவான் மகளோடும்
பண்ணார் களிவண் டறைபூஞ்சோலைப் பழனநகராரே.

3. பிறையும்புனலுஞ் சடைமேலுடையார் பறைபோல் விழிகட்பேய்
உறையுமயான மிடமாவுடைய ருலகர்தலைமகன்
அறையுமலர்கொண் டடியார்பரவி ஆடல்பாடல்செய்
பறையுஞ்சங்கும் பலியுமோவாப் பழனநகராரே.

4. உரமன்னுயர்கோட் டுலறுகூகை யலறுமயானத்தில்
இரவிற்பூதம் பாடஆடி யெழிலாரலர் மேலைப்
பிரமன்றலையி னறவமேற்ற பெம்மானெமையாளும்
பரமன் பகவன் பரமேச்சுவரன் பழனநகராரே.

5. குலவெஞ்சிலையான் மதில்மூன்றெரித்த கொல்லேனுடையணாணல்
கலவமயிலுங்குயிலும் பயிலுங் கடல்போற்காவேரி
நலமஞ்சுடைய நறுமாங்கனிகள் குதிகொண்டெதிருந்திப்
பலவின் கனிகள் திரைமுன் சேர்க்கும் பழனநகராரே.

6. வீளைக்குரலும் விளிசங்கொலியும் விழவினொலியோவா
மூளைத்தலைகொண் டடியாரேத்தப் பொடியா மதிளெய்தார்
ஈளைப்படுகி விலையார் தெங்கிற் குலையார் வாழையின்
பாளைக்கமுகின் பழம்வீழ்சோலைப் பழனநகராரே.

7. பொய்யாமொழியார் முறையாலேத்திப் புகழ்வார் திருமேனி
செய்யார்கரிய மிடற்றார்வெண்ணூல் சேர்ந்த அகலத்தார்
கையாடலினார் புனலால்மல்கு சடைமேற்பிறையோடும்
பையாடரவ முடனேவைத்தார் பழனநகராரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மஞ்சோங்குயர முடையான் மலையை மாறாயெடுத்தான்தோள்
அஞ்சோடஞ்சு மாறுநான்கு மடரவூன்றினார்
நஞ்சார்சுடலைப் பொடி நீறணிந்த நம்பான் வம்பாரும்
பைந்தாமரைகள் கழனிசூழ்ந்த பழனநகராரே.

9. கடியார் கொன்றைச் சுரும்பின்மாலை கமழ்புன்சடையார்விண்
முடியாப்படிமூ வடியாலுலக முழுதுந்தாவிய
நெடியான் நீள்தா மரைமேலயனும் நேடிக்காணாத
படியார் பொடியா டகலமுடையார் பழனநகராரே.

10. கண்டான்கழுவா முன்னேயோடிக் கலவைக்கஞ்சியை
உண்டாங்கவர்க ளுரைக்குஞ்சிறு சொல் லோரார் பாராட்ட
வண்டாமரையின் மலர்மேல்நறவ மதுவாய் மிகவுண்டு
பண்டான்கெழும வண்டியாழ் செய்யும் பழனநகராரே.

11. வேய்முத்தோங்கி விரைமுன்பரக்கும் வேணுபுரந்தன்னுள்
நாவுய்த்தனைய திறலால்மிக்க ஞானசம்பந்தன்
பேசற்கினிய பாடல்பயிலும் பெருமான் பழனத்தை
வாயிற்பொலிந்த மாலைபத்தும் வல்லார் நல்லாரே.

திருச்சிற்றம்பலம்.

## கொல்லிமழவன் மகளின் முயலகன் நோய் தீர்த்தமை

திருஞானசம்பந்தர் தமது அடுத்த திருத்தலயாத்திரையில் திருப்பாச்சிலாச்சிரமம் என்னும் திருத்தலத்தை அடைந்தார். அந்த நகரின் சிற்றரசனான கொல்லிமழவன் என்பவனின் மகள் முயலகன் என்னும் கொடிய நோயினால் பீடிக்கப்பட்டிருந்தாள். மகளை நோய் பெரிதும் வாட்டியதால் சிவபக்தனான கொல்லி மழவன் மணிமந்திர சிகிச்சை மூலம் குணப்படுத்த முயன்று ஏமாந்தான். இதனால் தமது பக்தி மேலீட்டினால் திருப்பாச்சிலாச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமத்திற் குடிகொண்ட இறைவனையே தஞ்சமடைந்தான். தமது மகளை இச்சிவாலயத்தின் திருமுன்றலில் கிடத்தி வைத்து இறைவனை வேண்டினான்.

இச்சமகாலத்தில் திருஞானசம்பந்தர் தமது சிவாலயச் சுற்றுலாவில் இவ்வாலயத்திற்கு வருவதை உணர்ந்தான். மகளை அவ்விடத்திலேயே விட்டகன்று தமது பணியாளர்கள் மூலம் அந்நகரத்தையும் வீதிகளையும் மகரதோரணங்களால் அலங்கரித் தான். அவ்வூருக்கருகாமையில் சம்பந்தர் வரும்போது ஓடிச் சென்று அவர் வந்த சிவிகையின் முன் வீழ்ந்து வணங்கி எழுந்ததும் தலை மேற்கூப்பிய கைகளுடன் திருப்பாச்சிலாச்சிரம சிவாலயத் திற்கு எழுந்தருளுமாறு வேண்டினான். சம்பந்தர் அவ்வாலயஞ் சென்று இறைவனை வணங்கியதும் திருமுன்றலில் நோய் காரணமாக உணர்வற்றிருந்த பெண்ணை நோக்கினார்.

அச்சமயம் கொல்லிமழவன் திருஞானசம்பந்தரை வணங் கித் தமது மகள் முயலகன் என்னும் நோயினால் பீடிக்கப்பட்டா ளென்றும் தாம் சிகிச்சை முறை செய்தும் பயனில்லாதால் இவ்விடத்தில் கிடத்தியுள்ளதையுஞ் சொன்னான். இதைக் கேட்டதும் திருஞானசம்பந்தர் அப்பெண்ணின் நோயைக் குண மாக்க எண்ணி இறைவன்மீது "துணிவளர்திங்கள்" என்று தொடங்கும் பதிகத்தைத் தொடங்கி "மணிவளர்கண்டரோ மங்கையை வாட மயல் கொள்வதோ இவர் மாண்பு" என இறுதியில் வைத்து பிணிதீர்க்கும் திருப்பதிகத்தைப் பாடினார்.

இறைவனின் பெருங்கருணையால் அப்பெண்ணின் நோய் அகன்றது. அப்பெண் பல்லோர் கூடி நின்ற சமூகத்தில் சட்டென்று எழுந்து தந்தையினருகே சென்றாள். இதனால் இறையருளை வியந்து இன்புற்ற கொல்லிமழவன் மகளையும் அழைத்துச் சென்று திருஞானசம்பந்தரின் திருப்பொற்பாதங்களில் வீழ்ந்து வணங் கினர். யாவரும் இறையருளால் திருஞானசம்பந்தர் செய்த அற்புதத்தை வியந்து ஆரவாரஞ் செய்தனர். திருஞானசம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவருக்கும் அருள் செய்து ஆசீர்வதித்தார். "துணிவளர் திங்கள்" என்று தொடங்கும் இப்பதிகம் முதலாம் திருமுறையில் இடம் பெறுகிறது.

44. திருப்பாச்சிலாச்சிராமம் பண் : தக்கராகம்

1. துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்ச்சடைசுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ் செய்து பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்
மாண்பே.

2. கலைபுனை மானுரி தோலுடையாடை கனல்சுட ராலிவர் கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர் தம்மடிகள் ளிவரென்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்தமர் பாச்சிலாச்சிர மத்துறைகின்ற
இலைபுனை வேலரோ ஏழையைவாட இடர் செய்வதோ இவரீடே.

3. வெஞ்சுடராடுவர் துஞ்சிருள்மாலை வேண்டுவர் பூண்பது
வெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக நண்ணுவர் நம்மை நயந்து
மஞ்சடை மாளிகை சூழ்தருபாச்சி லாச்சிர மத்துறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடிவாடச்சிதை செய்வதோ இவரீடே.

4. கனகமலர்க் கொன்றை அலங்கலிலங்கக் கனல்தரு தூமதிக்கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய புநிதர்கொ லாமிவ ரென்ன
வனமலி வண்பொழில் சூழ்தரு பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர் மாண்பே.

5. மாந்தர்தம்பால் நறு நெய்மகிழ்ந்தாடி வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தை முழாக்குழல் தாளமொர்வீணை முதிரவோர்வாய் மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர் பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
சாந்தணிமார்பரோ தையலை வாடச் சதுர்செய்வதோ இவர்சார்வே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நீறுநெய்பூசி நிறைசடைதாழ நெற்றிக்கண் ணாலுற்று நோக்கி
ஆறதுசூடி ஆடரவாட்டியை விரற் கோவணவாடை
பாறருமேனியர் பூதத்தர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுவேறிய ரேழையைவாட இடர் செய்வதோ இவரீடே.

7. பொங்கிள நாகமொரேகவடத்தோ டாமை வெண்ணூல் புனை கொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய குழகர்கொலா மிவரென்ன
அங்கிளமங்கையோர் பங்கினர் பாச்சிலாச்சிரமத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச்சதிர்செய்வதோ இவர்சார்வே.

8. ஏவலத்தால்விச யற்கருள் செய்து இராவணனை யீடழித்து
மூவரிலும் முதலாய் நடுவாய மூர்த்தியை அன்றிமொழியாள்
யாவர்களும்பர வும்மெழிற் பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கள் தேவரோ சேயிழைவாடச்சிதைசெய்வதோ இவர்சேர்வே.

9. மேலது நான்முக னெய்தியதில்லை கீழது சேவடி தன்னை
நீலது வண்ணனு மெய்தியதில்லை யென்னிவர் நின்றது மல்லால்
ஆலதுமாமதி போய்தொழிற்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப் பழிசெய்வதோ இவர்பண்பே

10. நாணொடுகூடிய சாயினரேனும் நகுவ ரவரிதுபோதும்
ஊணொடுகூடிய வுட்குநகையா லுரைகளவைகொள வேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
பூண்நெடுமார்பரோ பூங்கொடிவாடப் புனை செய்வதோ இவர்பொற்பே

11. அகமலியன்பொடு தொண்டர் வணங்க ஆச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவை யேத்தச் சாரகி லாவினைதானே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனிச்சுரம் நீக்கியது

திருஞானசம்பந்தர் தமது சிவாலய யாத்திரையில் "திருக் கொடிமாடச் செங்குன்றூர்" என்னும் திருத்தலத்தை அடைந்தார். அக்காலம் பனிக்காலமாக இருந்தது. அதிகாலை பனியின் கடுங் குளிர் யாவரையும் வாட்டியது. சம்பந்தருடன் கூடிவந்த அடியார்கள் யாவரும் அவ்விடத்திற் தங்கியிருந்து இறைவனை வழிபட்டனர். பனி மற்றும் குளிர் காற்றினால் யாவரும் பாதிக்கப்பட்டதால் அனைவரையும் பனிச்சுரம் தொற்றிக் கொண்டது. யாவரும் தமது நோய் பற்றிச் சம்பந்தரிடம் முறையிட்டனர். இச்சுரம் இந்த மண்ணில் இக்காலத்திலான இயல்பு நிலையாகும். இதனால் எமக்கொரு தீங்கும் நேராது என்று கூறிவிட்டு இறைவனை வேண்டி "அவ்வினைக்கிவ்வினை" என்று தொடங்கி (முன்செய்த) செய் வினை வந்தெம்மைத் தீண்டப் பெறாதிருநீலகண்டம்" என்று கூறித் திருநீலகண்டத் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

சம்பந்தர் இப்பதிகத்தின் பாடல்களின் இறுதியில் ஆண்ட வனைத் துதித்து நோய் அணுகாது ஆணையிட்டதால் இக்குளிர்ச் சுரமானது அந்த நாட்டிலிருந்து விட்டகன்றது. இதன் மகிமையால் சம்பந்தர் தமது அடியார்களுடன் அத்திருவூரில் சில நாட்கள் தங்கிச் சென்றனர்.

"அவ்வினைக்கிவ்வினை" என்னும் பதிகத்தைத் திருக்கொடி மாடச் செங்குன்றூரில் பாடினார். இப்பதிகம் முதலாம் திரு முறையில் இடம்பெறுகின்றது.

திருநீலகண்டம்

பொது பண் : வியாழக்குறிஞ்சி

1. **அவ்வினைக்கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்**
**உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே**
**கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்**
**செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினை யாலெயில் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

3. முலைத்தட மூழ்கிய போகங்களுமற் றெவையு மெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைதலைச் சூலமுந் தண்டும் மழுவு மிவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

4. விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன் மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

5. மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடியேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

6. மறக்கு மனத்தினை மாற்றியெம் மாவியை வற்புறுத்திப்
பிறப்பிற் பெருமான் திருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமையேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

7. கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துதும் நாமடியோம்
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

8. நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய அடியுமுடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி யுடை யொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றை புரிசடை யீரடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம்.

10. பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவி யுண்டாகி லிமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன் செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே.

திருச்சிற்றம்பலம்

## திருவலஞ்சுழி தொண்டர்கள் பூசியிருந்த திருநீற்றை வியந்தது

திருஞானசம்பந்தர் தமது பக்தித் தரிசனைக்காகத் திரு வலஞ்சுழி திருத்தலத்தை அடைந்தார். அச்சமயம் அச்சிவாலய வாசலில் சம்பந்தரின் வருகைக்காகக் காத்திருந்த சிவனடியார்கள் கூட்டமாக ஆரவாரமாக வந்து பெருவரவேற்புடன் கோயிலி னுள்ளே அழைத்துச் சென்றனர். யாவரும் அன்பே சிவம் என்றும் புனிதமான அன்பு மேவ அழைத்த போது அனைவரதும் நெற்றியில் துலங்கிய திருநீற்றின் ஒளி வெண்முகில் கூட்டம் போலக் காணப்பட்டது. சிவந்த சிவப்பொலிவுடைய புனித மண்ணில் சிவசின்னமாம் திருநீற்றின் ஒளியை வியந்து "என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே" என்றும் திருப்பதிகத்தைப்பாடி அனை வருடன் தாமும் சிவபக்தியில் மூழ்கினார்.

திருவலஞ்சுழி பண் - நட்டராகம்

01. என்னபுண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்னநீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுகாவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடுமதனாலே.

02. விண்டொழிந்தன நம்முடைவல்வினை
விரிகடல்வரு நஞ்சம்
உண்டிறைஞ்சுவா னவர்தமைத்தாங்கிய
விறைவனை யுலகத்தில்
வண்டு வாழ்குழன் மங்கையொர் பங்கனை
வலஞ்சுழி யிடமாகக்
கொண்டநாதன் மெய்த் தொழில்புரி தொண்டரோ
புனிதிருந்த மையலே.

03. திருந்தலார்புரந் தீயெனச் செறுவன
விறலின் கணடியாரைப்
பரிந்து காப்பன பத்தியில் வருவன
மத்தமாம் பிணிநோய்க்கு
மருந்து மாவன மந்திரமாவன
வலஞ்சுழி யிடமாக
இருந்த நாயக னிமையவரேத்திய
விணையடித்தலந்தானே.

04. கறைகொள் கண்டத்தர் காய்கதிர் நிறத்தன
ரறத்திற முனிவர்க்கன்
நிறைவராலிடை நீழலிருந்துகந்
தினிதருள் பெருமானார்
மறைகளோதுவர் வருபுனல் வலஞ்சுழி
யிடம் மகிழ்ந்தருங் கானத்
தறைகழல்சிலம் பார்க்க நின்றாடிய
வற்புதமறியோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. மண்ணர் நீரர்விண் காற்றினராற்றலா
மெரியுரு வொரு பாகம்
பெண்ணரா ணெனத் தெரிவரு வடிவினர்
பெருங்கடற் பவளம்போல்
வண்ணராகிலும் வலஞ்சுழி பிரிகிலார்
பரிபவர் மனம்புக்க
எண்ணராகிலு மெனைப்பல வியம்புவ
ரிணையடி தொழுவாரே.

06. ஒருவரா லுவ மிப்பதையரியதோர்
மேனியர் மடமாதர்
இருவராதரிப் பார்பல பூதமும்
பேய்களு மடையாளம்
அருவாததோர் வெண்டலை கைப்பிடித்
தகந்தொறும் பலிக்கென்று
வருவரேலவர் வலஞ்சுழியடிகளே
வரிவளை கவர்ந்தாரே.

07. குன்றியூர்குட மூக்கிடம் வலம்புரங்
குலவிய நெய்த்தானம்
என்றிவ் வூர்களி லோமென்று மியம்புவ
ரிறையவர் பணிகேட்பார்
அன்றியூர்தமக் குள்ளனவறிகிலோம்
வலஞ்சுழி யரனார்பால்
சென்றவூர்தனிற் றலைப்படலாமென்று
சேயிழை தளர்வாமே.

08. குயிலினேர் மொழிக் கொடியிடை வெருவுறக்
குலவரைப் பரப்பாய
கயிலையைப் பிடித்தெடுத்தவன் கதிர்முடி
தோளிருபது மூன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலினேரன சாயலோட மர்ந்தவன்
வலஞ்சுழி யெம்மானைப்
பயிலவல்லவர் பரகதிகாண்பவ
ரல்லவர் காணாரே.

09. அழலதோம்பிய வலர்மிசை யண்ணலு
மரவணைத்து யின்றானும்
கழலுஞ் சென்னியுங் காண்பரி தாயவர்
மாண்பமர் தடக்கையில்
மழலை வீணையர் மகிழ்திருவலஞ்சுழி
வலங்கொடு பாதத்தால்
கழலு மாந்தர்க டொல்வினையதனோடு
துன்பங்கள் களைவாரே.

10. அறிவிலாதவன் சமணர்கள் சாக்கியர்
தவம் புரிந்தவஞ் செய்வார்.
நெறிய லாதன கூறுவர் மற்றவை
தேறன் மின் மாறாநீர்
மறியுலாந்திரைக் காவிரி வலஞ்சுழி
மருவிய பெருமானைப்
பிறிவிலாதவர் பெறுகதிபேசிடி
லள வறுப்பொண்ணாதே.

11. மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய
மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம்பந்தன்வாய்
நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்திசை கற்றுவல்லார் சொலக்
கேட்டுகந்தவர் தம்மை
வாதியாவினை மறுமைக்கு மிம்மைக்கும்
வருத்தம் வந்தடையாவே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்துப்பந்தல் பெற்றது

திருஞானசம்பந்தர் தமது சிவாலயத் தரிசனை உலாவில் சற்றுத்தொலைவிலிருந்த பட்டீச்சரத்தை நாடினார். அச்சமயம் பல அடியார்களும் உடன்சென்றனர். இவர்கள் சிவனருளை வியந்து பாடிச் சென்றனர். அச்சமயம் வெய்யிலின் வெப்பத்தால் அடியவர்கள் யாவரும் வாட்டமுற்றனர். அடியார்கள் நிலத்தில் அடியெடுத்து வைக்க முடியாத வெப்பத்தால் ஒரு நிழலில் தங்கினர். வெய்யிலின் தாக்கத்தை உணர்ந்த சம்பந்தர், இறைவனை எண்ணித் திருவைந்தெழுத்தை ஓதி யாவரையும் இறை நாமத்தை ஓத வைத்தார்.

சிவடியார்களதும் சம்பந்தரினதும் அயராத பக்தியை மெச்சிய இறைவன் ஒரு பூதத்தின் மூலம் முத்துப் பந்தலொன்றை மேலாகப்பிடித்து காட்சி தந்தது. அப்பந்தலின் கால்கம்புகளைப் பக்தர்கள் பெருமகிழ்வுடன் தாங்கி வந்தனர். பட்டீச்சரத்திறைவனின் பெருங்கருணையை வியந்த சம்பந்தர் "பாடல் மறை சூடல் மதி" என்னும் திருப்பதிகத்தைப்பாடி ஆலயதரிசனையுடன் பாடல் பதிகமும் இனிதாய் அமைந்தது.

திருப்பட்டீச்சரம் பண் : சாதாரி

திருச்சிற்றம்பலம்

1. பாடல்மறை சூடன்மதி பல்வளையொர்
பாகம் மதில் மூன்றொர் கணையால்
கூடஎரி யூட்டி எழில் காட்டி நிழல்
கூட்டு பொழில் சூழ் பழையையுள்
மாடமழ பாடியுறை பட்டிசர
மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி
காட்டிவினை வீடுமவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நீரின்மலி புன்சடையர் நீளரவு
கச்சையது நச்சிலையதோர்
கூரின்மலி சூலமது ஏந்திஉடை
கோவணமும் மானின் உரிதோல்
காரின்மலி கொன்றைவிரி தார்கடவுள்
காதல்செய்து மேயநகர் தான்
பாரின்மலி சீர்பழைசை பட்டிசரம்
ஏத்தவினை பற்றழியுமே.

3. காலைமட வார்கள்புனல் ஆடுவது
கௌவைகடி யார்மறு கெலாம்
மாலை மணம் நாறுமழை யாறைமழ
பாடியழ காயமலிசீர்ப்
பாலையன நீறுபுனை மார்பன்உறை
பட்டிசர மேபரவுவார்
மேலை யொரு மால்கடல்கள் போல்பெருகி
விண்ணுலகம் ஆளு மவரே.

4. கண்ணின்மிசை நண்ணிஇழி விப்பமுகம்
ஏத்துகமழ் செஞ்சடையினான்
பண்ணின்மிசை நின்றுபல பாணிபட
ஆடவல பால்மதியினான்
மண்ணின்மிசை நேரின்மழ பாடிமலி
பட்டிசர மேமருவுவார்
விண்ணின் மிசை வாழும் இமை யோரொடுஉடன்
ஆதல்அது மேவல் எளிதே.

5. மருவமுழவு அதிரமழ பாடிமலி
மத்தவிழவு ஆர்க்கவரைஆர்
பருவமழை பண்கவர்செய் பட்டிசர
மேயபடர் புன்சடையினான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெருவமத யானையுரி போர்த்து உமையை
அஞ்சவரு வெள்விடையினான்
உருவம்எரி கழல்கள்தொழ உள்ளம்உடை
யாரைஅடை யாவினைகளே.

6. மறையினொலி கீதமொடு பாடுவன
பூதமடி மருவிவிர வார்
பறையினொலி பெருகநிகழ் நட்டம் அமர்
பட்டிசர மேயபனிகூர்
பிறையினொடு மருவியதொர் சடையினிடை
யேற்றபுனல் தோற்ற நிலையாம்
இறைவனடி முறைமுறையின் ஏத்துமவர்
தீத்தொழில்கள் இல்லர்மிகவே.

7. பிறவிபிணி மூப்பினொடு நீங்கி இமை
யோர்உலகு பேணலுறுவார்
துறவியெனும் உள்ளம் உடையார்கள்கொடி
வீதியழ காயதொகுசீர்
இறைவன்உறை பட்டிசரம் ஏத்தி எழு
வார்கள் வினை யேதும் இலவாய்
நறவவிரை யாலும் மொழி யாலும் வழி
பாடுமற வாத அவரே.

8. நேசமிகு தோள்வலவன் ஆகியிறை
வன்மலையை நீக்கியிடலும்
நீசன்விறல் வாட்டிவரை யுற்றதுண
ராதநிரம் பாமதியினான்
ஈசன் உறை பட்டிசரம் ஏத்தியெழு
வார்கள்வினை யேதும் இலவாய்
நாசமற வேண்டுதலின் நண்ணல் எளி
தாம் அமரர் விண்ணுலகமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. தூயமலரானும்நெடி யானும்அறி
யார்அவன் தோற்றநிலையின்
ஏயவகை யானதனை யார்அதுஅறி
வார்அணிகொள் மார்பின் அகலம்
பாயநல நீறதுஅணி வான்உமைத
னோடும் உறை பட்டிசரமே
மேயவனது ஈரடியும் ஏத்தஎளி
தாகும் நல மேலுலகமே.

10. தடுக்கினை இடுக்கிமட வார்களிடு
பிண்டமது உண்டு ழல்தரும்
கடுப்பொடி உடற்கவசர் கத்துமொழி
காதல்செய்தி டாதுகமழ்சேர்
மடைக்கயல் வயற்கொண்மழ பாடிநகர்
நீடுபழை யாறையதனுள்
படைக்கொரு கரத்தன்மிகு பட்டிசரம்
ஏத்தவினை பற்றறுதலே.

11. மந்தமலி சோலைமழ பாடிநகர்
நீடுபழை யாறையதனுள்
பந்தமுயர் வீடுநல பட்டிசர
மேயபடர் புன்சடையனை
அந்தண் மறை யோர்இனிது வாழ்புகலி
ஞானசம் பந்தன் அணியார்
செந் தமிழ்கள் கொண்டினிது செப்பவல
தொண்டர்வினை நிற்பதிலவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தையின் வேள்விக்கு உலவாக்கிழி பெற்றது

திருவாவடுதுறையில் திருஞானசம்பந்தர் இறை தரிசனைக் காகச் சென்றிருந்த போது தந்தையார் சிவபாதவிருதயர் தாம் இறைவனை வேண்டி வேள்வி செய்வதற்கான பொருளுதவியை நாடினார். திருஞானசம்பந்தர் இறைவனிடம் "இடரினும் தளரினும் எனதுறுநோய்" என்னும் தொடரில் பதிகம் பாடினார். அச்சமயம் ஏற்கெனவே முத்துப்பந்தரைத் தாங்கி வந்த பூதம் திருவாவடுதுறை ஈசனின் ஆணைப்படி ஆலயப் பலிபீடத்தின் உச்சியில் ஆயிரம் பொற்காசுகளைக் கொண்ட பொன்முடிப்பை வைத்து அகன்றது. அப்பூதம் சம்பந்தரின் அருகே சென்று "இதுபொற்கிழி எடுக்க எடுக்கக் குறையாத ஆயிரம் பொற்காசுகளைக் கொண்ட "உலவாக்கிழி" பொற்காசுகள் பெருகும். இது சிவபெருமானால் உமக்கு அருளப் பெற்றதாகும் எனக்கூறி மறைந்தது.

அச்சமயம் சம்பந்தர் இறைவனின் கருணையை வியந்து திருமுன் வீழ்ந்து வணங்கித் தலைமேற்குவித்த கரங்களுடன் புகழ்ந்து பாடி வணங்கியவாறு அதனை நன்றியுடன் எடுத்தார். அருகே நின்ற தந்தையிடம் இது எடுக்க எடுக்கப் பொன்குறையாத உலவாக்கிழியாகும் என்று கொடுத்தார். இப்பொற்கிழி இறை வனால் தரப்பட்டதாகும். இப்பெரு நிதியில் இறைவனுக்கு உகந்த சிறப்பான வேள்வியைச் செய்யுமாறு கொடுத்தார். இறைவனின் திருவருட் சித்தத்தை யாவரும் போற்றினர்.

திருவாவடுதுறை பண் - காந்தார பஞ்சமம்

1. இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உன்கழல் விடுவேன் அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே.
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

3. நனவிலும் கனவிலும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே.
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

4. தும்மலொடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாது என்நாக்
கைமல்கு வரிசிலைக் கணைஒன்றினால்
மும்மதிள் எரிஎழ முனிந்தவனே.
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

5. கையது வீழினும் கழிவு றினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாய சென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய்உன் அடியலால் ஏத்தாது என்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

7. வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாஉன் அடியலால் அரற்றாது என்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழல்எழ விழித்தவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

8. பேரிடர் பெருகிஓர் பிணிவரினும்
சீருடைக் கழல்அலால் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

9. உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மல ரடியலால் உரையாதென்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே.
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாஉன் னடியலால் அரற்றாது என்நாப்
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே.
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

11. அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படை எம்இறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலையிலரே.

திருச்சிற்றம்பலம்

## யாழ்முரிப்பாடல் பாடியது

திருஞானசம்பந்தர் பாடிய வண்ணம் அற்புதங்களையும் செய்து வருவதை ஏற்கெனவே அறிந்தவர் திருநீலகண்ட யாழ்ப்பாணர். இவர் தமது யாழ் வசிக்கும் திறமையைச் சம்பந்தரின் ஆசியுடன் அவர் பாடும் போது வாசித்து இன்பங் கண்டவர். நெடுநாட்களாக இணைந்து வாசிக்கும் சிறப்பைத் தமது தாயாரின் பிறந்த இடமான தருமபுரத்தில் தமது சுற்றத்தாரும் அறியும் வண்ணம் அப்பதிக்கு எழுந்தருமாறு திருநீலகண்ட யாழ்ப்பாணர் சம்பந்தரை வேண்டினார். யாவரும் தருமபுரத்தை அடைந்ததும் யாழ்ப்பாணர் தமது சுற்றத்தவரை நோக்கி "இப்பெருமான் அருளிச் செய்யும் திருப்பாக்களின் இசையை யான் யாழில் வாசிக்கும் பேறுபெற்றேன் எனக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் கேட்டதும் சுற்றத்தவர்கள் நீங்கள் செய்யும் இச்சிறப்பினால் உலகமெல்லாம் இசை ஓங்குக" என்றனர். இவ்வுரையைக் கேட்டதும் யாழ்ப்பாணர் நடுநடுங்கித் திருஞான சம்பந்தரின் காலில் வீழ்ந்து வணங்கி பெருமானே உங்கள் பெருமையை உணராத எம்மவர் முன் இசைக்கும் அடங்காத தங்கள் திருப்பதிகத்தின் மகிமையை இவர்களுக்கு உணர்த்த வேண்டும். அதற்கேற்ப இசையிலும் அடங்காத திருப்பாடலைப் பாடியருள வேண்டுமெனப் பணித்தார்.

அவ்வாறே ஞானசம்பந்தர் "மாதர் மடப்பிடியும்" எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். இப்பாடலின் இசையைப் பாணர் தமது யாழில் வாசிக்க முயன்றார். பாடலுக்கான இசை அமைய வில்லை. தான் செய்த தவறுக்காக இசையை மீட்க முடியாத இந்த யாழ் இனி உதவாது எனக்கூறித் தமது யாழை உடைக்க ஓங்கினார். அச்சமயம் சம்பந்தர் அந்த யாழை பாணரிடம் இருந்து வாங்கிக் கொண்டார். "நீர் எதற்காக இதனை உடைக்க முன் வந்தீர்" உமாதேவியாருடன் சிவபெருமான் அளித்த திருவருளின் பெருமையை இந்த யாழில் அடக்க முடியுமா? இறையருளின் பெருமையை உணர்ந்து இயன்றளவு உமது இசையை யாழில் வாசிக்குமாறு அதனைப் பாணரின் கையில் தந்தருளினார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் மிகுந்த பயபக்தியுடன் சம்பந்தரிடம் தமது யாழை வாங்கினார். இறைவனை வணங்கியவாறு அகந்தை யற்ற புனிதராக வெகுநிதானமாக யாழில் இசைக்கும் பணியை ஏற்றார். இந்த யாழ்முரிப் பாடற்பதிகம் முதலாம் திருமுறையில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தருமபுரம் பண் : யாழ்மூரி

1. மாதர்மடப்பிடியும் மட அன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மகள் துணை யென மகிழ்வர்
பூதஇ னப்படை நின்றிசை பாடவு மாடுவர்
அவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் கும மலர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயில் தரும்பு ரம்பதியே.

2. பொங்குந டைப்புகலில் விடை யாமவர் ஊர்திவெண்
பொடி யணி தடங் கொள்மார் புபூணநூல் புரள
மங்குலி டைத்தவழும் மதிசூடுவ ராடுவர்
வளங் கிளர் புனலர வம்வைகிய சடையர்
சங்குக டற்றிரையா லுதையுண்டுச ரிந்திரிந்
தொசிந் தசைந் துசே ரும் வெண்மணற் குவைமேல்
தங்குக திர்ம்மணிநித்தில மெல்லிரு ளொல்கநின்
றிலங் கொளிந் நலங்கெழில் தருமபு ரம்பதியே.

3. விண்ணுறு மால்வரைபோல் விடையேறுவ ராறுசூ
டுவர் வரி கரியொளி கொள்தோடு நின்றிலங்க
கண்ணுற நின்றொளிருங் கதிர் வெண்மதிக் கண்ணியர்
கழிந்தவ ரிழிந்திடும் முடைதலை கலனாப்
பெண்ணுற நின்றவர்தம் முரு வம்மயன் மால்தொழவ்
வரி வையைப் பிணைந் திணைந் தணைந்ததும் பிரியார்
தண்ணிதழ் முல்லையொடெண் ணிதழ் மௌவல்ம ருங்கலர்
கருங் கழிந் நெருங்குநல் தருமபு ரம்பதியே.

4. வாருறு மென்முலைநன் னுதலேழையொ டாடுவர்
வளங் கிளர் விளங்குதிங் கள் வைகிய சடையர்
காருற நின்றலரும் மலர்க் கொன்றையங் கண்ணியர்
கடுவ் விடை கொடி வெடி கொள்காடுறை பதியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாருற விண்ணுலகம் பர வப்படு வோரவர்
படு தலைப் பலி கொளல் பரிபவந் நினையார்
தாருறு நல்லரவம் மலர் துன்னிய தாதுதிர்
தழை பொழில் மழைந் நுழை தருமபு ரம்பதியே.

5. நேரும வர்க்குணரப் புகி லில்லைநெ டுஞ்சடைக்
கடும் புனல் படர்ந் திடம் படுவ்வதோர் நிலையா
பேரும வர்க்கெனையா யிர முன்னைப்பி றப்பிறப்
பிலா தவருடல் தடர்த் தபெற்றியா ரறிவார்
ஆரம வர்க்கழல்வா யதோர் நாகமழஃகுறவ்
வெழுஃகொழும் மலர்கொள்பொன் னிதழிநல் லலங்கல்
தாரம வர்கிமவான் மகளூர்வது போர்விடை
கடிபடு செடி பொழில் தருமபு ரம்பதியே.

6. கூழையங் கோதைகுலா யவள் தம்பினை புல்கமல்
குமென் முலைப் பொறி கொள்பொற் கொடியிடைத் துவர்வாய்
மாழையொண் கண்மடவா ளையொர் பாகம கிழ்ந்தவர்
வலம் மலி படை விடை கொடி கொடும் மழுவ்வாள்
யாழையும் மெள்கிடவே ழிசை வண்டுமு ரன்றினந்
துவன் றிமென் சிறஃகறை யுறந்நறவ்வி ரியுந்நல்
தாழையு ஞாழலுந்நீ டிய கானலி ளள்ளலி
சைபுள் ளினந் துயில் பயில் தருமபு ரம்பதியே.

7. தேமரு வார்குழலன் னநடைப்பெடை மான்விழித்
திருந் திழை பொருந் துமே னிசெங்கதிர் விரியத்
தூமரு செஞ்சடையில் துதை வெண்மதி துன்று கொன்
றைதொல் புனல் சிரங் கரந் துரித்ததோ லுடையர்
காமரு தண்கழிநீ டிய காலை கண்டகங்
கடல் லடை கழி யிழி யமுண்டகத் தயிலே
தாமரை சேர்குவளைப் படு கிற்கமு நிர்மலர்
வெறி கமழ் செறிவ் வயல் தருமபு ரம்பதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. தூவண நீறகலம் பொலி யவ்விரை புல்கமல்
குமென் மலர் வரை புரை திரள் புயம் அணிவர்
கோவண மும்மழையின் னதளும்முடை யாடையர்
கொலைம்மலி படை யோர்சூ லமேந்திய குழகர்
பாவண மாவலறத் தலை பத்துடை யவ்வரக்
கனவ் வலி யோர்கவ் வைசெய் தருள்புரி தலைவர்
தாவண ஏறுடையெம் மடி கட்கிடம் வன் தடங்
கடல் விடுந் தசிங் கரைத் தருமபு ரம்பதியே.

9. வார்மலி மென்முலைமா தொரு பாகம தாகுவர்
வளங் கிளர் மதி யரவம் வைகிய சடையர்
கூர்மலி சூலமும் வெண்மழு வும்மவர் வெல்படை
குனிசிலை தனிம் மலை யதேந்திய குழகர்
ஆர்மலி யாழிகொள்செல் வனு மல்லிகொள் தாமரைம்
மிசை யவன் னடிம்முடி யளவுதா மறியார்
தார்மலி கொன்றையலங் கலு கந்தவர் தங்கிடந்
தடங் கடல் விருந்தினரைத் தருமபு ரம்பதியே.

10. புத்தர்கள் தத்துவர்மொய்த் துறி புல்கிய கையர்பொய்ம்
மொழிந் தழிவில்பெற் றியுற் றநற்றவர் புலவோர்
பக்தர்க ளத்தவ மெய்ப் பய னாகவு கந்தவர்
நிகழ்ந் தவர் சிவந் தவர் சுடலைப்பொடி யணிவர்
முத்தன வெண்ணகையொண் மலை மாதுமை பொன்னணி
புணர்ம் முலை யிணை துணை யணைவதும் பிரியார்
தத்தரு வித்துருளுந் திய மாங்கட லோதமவர்
தடர்ந்திடுந் தடம் பொழில் தருமபு ரம்பதியே.

11. பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலீ
பொருஉ புனல் திருஉ வமர் புகல்லியென் றுலகில்
தன்னொடு நேர்பிறவில்பதி ஞான சம் பந்தன்ஃ
துசெந் தமிழ்த் தடங் கடல் தருமபு ரம்பதியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னெடு வார்சடையிற் பிறை யும்மர வும்முடை
யவன் பிணை துணை கழல கள்பேணுத லுரியார்
இன்னெடு நன்னுலகெய் துவரெய்திய போகமும்
உறு வர்கள ளிடர் பிணி துயரணைவ் விலரே.

திருச்சிற்றம்பலம்

தருமபுரத்தை விட்டகன்றதும் சம்பந்தர் திருநள்ளாறு சென்று எம்பெருமானையும் எம்பெருமாட்டியையும் யாழ்ப்பாணர் முதலான அடியார்களுடன் சென்று வணங்கினார். அவ்விடத்தில் பாணரின் யாழிசை நன்கு துலங்கவென "போகமார்ந்த பூண் முலையாள்" என்னும் பாடற்பதிகத்தை கைத்தாளமிட்டுப் பாடினார். பாணரும் இப்பாடலுக்குக்களித்த இசையைப் பாடி மகிழ்வித்தார். இப்பாடல் மதுரையில் வரும் அனல் வாதத்தின் போது இட்ட திருப்பாடலாகும்.

திருநள்ளாறு பண் : பழந்தக்ககாரம்

1. போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும்பொன் னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள்ளேற் றண்ணல்பர மேட்டி
ஆக மார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயதுநள் ளாறே.

2. தோடுடைய காதுடையன் தோலுடையன் தொலையாப்
பீடுடைய போர்வடையன் பெண்ணுமோர்பா லுடையன்
ஏடுடைய மேலுலகோ டேழ்கடலுஞ் சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயதுநள் ளாறே.

3. ஆன்முறையா லாற்றவெண்ணீ றாடியணி யிழையோர்
பான்முறையால் வைத்தபாதம் பத்தர்பணிந் தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ் சூலமும்பற் றியகை
நான்மறையான் நம்பெருமான் மேயதுநள் றாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. புல்கவல்ல வார்சடைமேற் பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோடுடன் சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற் பாதநிழற் சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயதுநள் ளாறே.

5. ஏறுதாங்கி யூர்தி பேணியேர்கொளிள மதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோ ராடரவஞ் சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பினில் நிறைகொன்றை
நாறு தாங்கு நம்பெருமான் மேயதுநள் ளாறே.

6. திங்களுச்சி மேல்விளங்குந் தேவனிமை யோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவ னென்றடியே யிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடியார் கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே.

7. வெஞ்சுடர்தீ யங்கையேந்தி விண்கொண்முழ வதிர
அஞ்சிடத்தோ ராடல்பாடல் பேணுவதன்றியும் போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடி திகழ்தருகண் டத்துள்ளே
நஞ்சடைந்த நம்பெருமான் மேயதுநள் ளாறே.

8. சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத்தீ யம்பினால்
கட்டுமாடிச் சுண்ணவெண்ணீ றாடுவதன் றியும்போய்ச்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பால்மதியஞ் சூடி
நட்டமாடு நம்பெருமான் மேயதுநள் ளாறே.

9. உண்ணலாக நஞ்சுகண்டத் துண்டுடனே யொடுக்கி
அண்ணலாகா வண்ணனீழ லாரழல் போலுருவம்
எண்ணலாகா வுள்வினையென் றெள்கவலித் திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயதுநள் ளாறே.

10. மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர்குண மிலிகள்
பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறிசெல் லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதிகளும் முடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயதுநள் ளாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தண்புனலும் வெண்பிறையுந் தாங்கியதாழ் சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம்பந் தன்நல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்துமிவை வல்லார்
உண்புநீக்கி வானவரோ டுலகிலுறை வாரே.

திருச்சிற்றம்பலம்

## அரவம் தீண்டி இறந்த வணிகனை உயிர்ப்பித்தது

திருஞானசம்பந்தர் தமது சிவாலய தரிசனைக்காக திருமருகல் திருத்தலத்தை நாடினார். திருமருகல் திருத்தலத்தருகேயிருந்த திருமடத்தில் வழிப்போக்கனான வணிகனொருவன் ஒரு கன்னிப் பெண்ணை அழைத்து வந்து தங்கியிருந்தான். அன்றிரவு அவன் அரவந்தீண்டிக் குற்றுயிராய்க் கிடந்தான். அச்சமயம் கூடவந்த பெண் அரவு தீண்டியவனை அரவணைக்கவோ முடியவில்லை. அவள் அவனையே திருமணஞ் செய்ய இருந்தவள். திருமணமாகுமுன் அவனைத் தீண்டுவதற்கு அவர்களின் குல ஆசாரமும் அவளின் கற்பு நெறியும் தடுத்தன. இதனால் அப் பெண் கதறி அழுதாள். விஷகடி பார்க்கும் இருவர் வந்து தம் மாலானவற்றைச் செய்தும் பயனில்லை அவள் விடியும் வரை அருகே நின்று புலம்பினாள்.

அவள் அருகிருந்த சிவாலயத்தின் வாசலில் நின்று தன் அவல நிலையைக் கூறி அழுதாள். அச்சமயம் ஆலயத்தை வழிபட வந்த திருஞானசம்பந்தர் அவளின் பரிதாப நிலையைக்கூறுமாறு கேட்டார். அவளின் தந்தை இறந்தவரின் மாமனாவார். அவனுக்கு தமது மூத்த நான்கு சகோதரிகளைத் திருமணஞ் செய்வதாகக் கூறிப் பலமுறை ஏமாற்றினார். இறந்தவரின் பரிதாப நிலைக்காகத் தான் அவனுடன் திருமணஞ் செய்ய எண்ணிப் பெற்றோரின் அனுமதியின்றி வந்ததாகவும், அன்றிரவு வணிகன் அரவம் தீண்டி மாண்டதாகவும் தம்மை இறைவனே காப்பாற்ற வேண்டுமெனவும் பேரழுகையுடன் தெரிவித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமயம் சம்பந்தர் அவளுக்கு ஆறுதல் கூறிவிட்டு மருகல் பெருமானை வேண்டி வணிகனின் விஷம் நீக்குமாறு பரிந்து "சடையாய் எனுமால்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். உடனே வணிகனின் விஷம் நீங்கியது. அவன் எழுந்து நின்றான். சம்பந்தரின் அடியார்கள் உட்பட அங்கு கூடியிருந்த அனைவரும் "ஹரஹர" என ஆரவாரஞ் செய்தனர். வணிகனும் கன்னிப் பெண்ணும் ஆனந்தக் கண்ணீர் மல்க தலை மேற்கூப்பிய வண்ணம் சம்பந்தரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். ஞான சம்பந்தர் அவர்களின் உண்மை நிலையை உணர்ந்து அவ்விடத் திலேயே அவர்களுக்குத் திருமணஞ் செய்து வாழ்த்தி வழியனுப் பினார். சம்பந்தர் நல்லருள் புரிந்த இறைவனை மேலும் வணங்கிச் சில நாட்கள் அப்பதியிற் தங்கிச் சென்று தமது தெய்வீக உலா வைத் தொடர்ந்தார்.

திருமருகல் பண் - இந்தளம்

01. சடையாயெனு மால்சர ணீயெனுமால்
விடையாயெனு மால்வெருவா விழுமால்
மடையார்குவ ளைமல ரும்மருகல்
உடையாய்தகு மோவிவ ளுண்மெலிவே

02. சிந்தாயெனு மால்சிவ னேயெனுமால்
முந்தாயெனு மால்முதல் வாவெனுமால்
கொந்தார்குவ ளைகுல வும்மருகல்
எந்தாய்தகு மோவிவ ளேசறவே.

03. அறையார்கழ லும்மழல் வாயரவும்
பிறையார்சடை யும்முடை யாய்பெரிய
மறையார்மரு கண்மகிழ் வாயிவளை
இறையார்வளை கொண்டெழில் வல்வினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. ஒலிநீர்சடை யிற்கரந் தாயுலகம்
பலிநீதிரி வாய்பழி யில்புகழாய்
மலிநீர்மரு கண்மகிழ வாயிவளை
மெலிநீர்மைய ளாக்கவும் வேண்டினையே

05. துணிநீலவண் ணம்முகி றோன்றியன்ன
மணிநீலகண் டமுடை யாய்மருகல்
கணிநீலவண் டார்குழ லாளிவடன்
அணிநீலவொண் கண்ணயர் வாக்கினையே.

06. பலரும்பர வப்படு வாய்சடைமேல்
மலரும்பிறை யொன்றுடை யாய்மருகல்
புலருந்தனை யுந்துயி லாள்புடைபோந்
தலரும்படு மோவடி யாளிவளே.

07. வழுவாள்பெரு மான்கழல் வாழ்கவெனா
எழு வாணினை வாளிர வும்பகலும்
மழுவாளுடை யாய்மருகற் பெருமான்
தொழுவாளிவ ளைத்துய ராக்கினையே.

08. இலங்கைக்கிறை வன்விலங் கல்லெடுப்பத்
துலங்கவ் விர லூன்றலும் தோன்றலனாய்
வலங்கொண்மதில் சூழ்மரு கற்பெருமான்
அலங்கல்லிவ ளையல ராக்கினையே.

09. எரியார் சடை யும்மடியும் மிருவர்
தெரியாததொர் தீத்திர ளாயவளே
மரியார்பிரி யாமரு கற்பெருமான்
அறியாளிவ ளையயர் வாக்கினையே.

10. அறிவில்சம ணும்மலர் சாக்கியரும்
நெறியல்லன செய்தனர் நின்றுழல்வார்
மறியேந்துகை யாய்மரு கற்பெருமான்
நெறியார்குழ லிநிறை நீக்கினையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வயஞானம்வல் லார்மரு கற்பெருமான்
உயர்ஞான முணர்ந்தடி யுள்குதலால்
இயல்ஞானசம் பந்தன் பாடல் வல்லார்
வியன்ஞானமெல் லாம்விளங் கும்புகழே.

திருச்சிற்றம்பலம்

## திருமருகலில் திருச்செங்காட்டங்குடி ஈசனைத் தரிசித்தது

திருஞானசம்பந்தர் திருமருகலிலிருந்து இறைவனை வழிபட்டுச் சில நாட்கள் தங்கியிருந்தார். அவரைத் தரிசிக்கவென இப்பதிக்கு வந்த சிறுத்தொண்டர் நாயனார் திருச்செங்காட்டங்குடி மேவும் கணபதீச்சரத்திற்கு வருமாறு அழைத்தார். அச்சமயம் சம்பந்தர் சிறுத்தொண்டரையும் அழைத்துக்கொண்டு மருகற் பதியுட் சென்றார். அவர்களுக்குத் திருச்செங்காட்டங்குடி ஈசன் தமது காட்சியைக் காண்பித்தார். இதனைக் கண்ணுற்ற சம்பந்தர் ஆனந்தக்கண்ணீர் சொரியத் தலைமேற்கூப்பிய கைகளுடன் வணங்கியதுடன் இருபதிகளின் அற்புதத்தைச் சிறுத்தொண்டருக்குக் காண்பித்தார். தமது பக்திப் பரவசமாக உள்ளமுருகி "அங்கமும் வேதமும்" என்னும் தொடரில் பதிகம் பாடினார். இப்பதிகம் முதலாம் திருமுறையில் அமைந்தது.

திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும் பண் : நட்டபாடை

1. அங்கமும் வேதமும் ஓதுநாவர்
அந்தணர் நாளு மடி பரவ
மங்குல் மதிதவள் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர்கொள்செய் காட்டங்குடி யதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நெய்தவழ் மூவெரி காவலோம்பு
நேர்புரி நூன்மறை யாளரேத்த
மைதவழ் மாட மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செய்தவ நான்மறை யோர்களேத்துஞ்
சீர்கொள்செவ் காட்டங்குடி யதனுள்
கைதவழ் கூரெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

3. தோலோடு நூலிழை சேர்ந்தமார்பர்
தொகுமறையோர்கள் வளர்த்த செந்தீ
மால்புகை போய்விம்மு மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேல்புல்கு தண்வயற் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கால்புல்கு பைங்கழ லார்க்க ஆடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

4. நாமரு கேள்வியர் வேள்வியோவா
நான்மறை யோர்வழி பாடுசெய்ய
மாமரு வும்மணிக் கோயில்மேய
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
தேமரு பூம்பொழிற் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காமரு சீர்மகிழ்ந் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

5. பாடல்முழவும் விழவுமோவாப்
பன்மறை யோரவர் தாம்பரவ
மாட நெடுங்கொடி விண்தடவு
மருகல் நிலாவிய மைந்தசொல்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேடக மாமலர்ச் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காடக மேயிட மாகஆடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

6. புனையழ லோம்புகை யந்தணானர்
பொன்னடி நாடொறும் போற்றிசைப்ப
மனைகெழு மாடம் மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சினைகெழு தண்வயற்சோலை சூழ்ந்த
திருச்செங் காட்டங் குடியதனுள்
கனைவளர் கூரெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

7. பூண்டங்கு மார்பி லிலங்கைவேந்தன்
பொன்னெடுந் தோள்வரை யாலடர்த்து
மாண்டங்கு நூன்மறை யோர்பரவ
மருகல் நிலாவிய மைந்தசொல்வாய்
சேண்டங்கு மாமலர்ச் சோலை சூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங்குடியதனுள்
காண்டங்கு தோள்பெயர்த் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

8. அந்தமு மாதியும் நான்முகனு
மரவணை யானு மறிவரிய
மந்திர வேதங்க ளோதுநாவர்
மருகல் நிலாவிய மைந்த சொல்வாய்
செந்தமி ழோர்கள் பரவியேத்துஞ்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கந்த மகிற்புகை யேகமழும்
கணபதி யீச்சரங் காமுறவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. இலைமரு தேயமு காகநாளு
மிடுதுவர்க் காயொடு சுக்குத்தின்னும்
நிலையமண் தேரரை நீக்கிநின்று
நீதரல் லார்தொழு மாமருகல்
மலைமகள் தோள்புணர் வாயருளாய்
மாசில் செங்காட்டங் குடியதனுள்
கலைமல்கு தோலுக்குத் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

10. நாலுங் குலைக்கமு கோங்குகாளி
ஞானசம்பந்தன் நலந்திகமும்
மாலின் மதிதவழ் மாடமோங்கு
மருகலில் மற்றதன் மேல்மொழிந்த
சேலுங் கயலும் திளைத்த கண்ணார்
சீர்கொள்செங்காட்டங் குடியதனுள்
சூலம்வல் லான்கழலேத்து பாடல்
சொல்லவல்லார்வினை யில்லையாமே.

திருச்சிற்றம்பலம்

## திருக்கோளிலி

தமது திருவவதாரத்தின் நோக்கில் நாடெல்லாம் மலிந்த சிவாலய தரிசனை மூலம் மக்களின் துன்ப துயர குறை குற்றங்களைப் போக்கிய சிவபதியான திருவாரூர் பதிகள் பலவும் அற்புதமானவை. முதலில் இப்பதிகளில் வணங்கிய சம்பந்தர் இறைவனின் பெருமையை வியந்து மீண்டும் இப்பதியை நாடினார்.

திருவலிவலம் திருப்பதி ஆகிய தலங்களில் பாடி வழிபட்டார். தொடர்ந்து பல்வேறு துன்பங்களையும் அடைந்த அடியார்களின் துன்பங்களை நீக்குபவரும் சுந்தரரின் வேண்டுதலுக்காக இறைவனிடம் பெற்ற நெல்மூடைகளை எடுத்துக் குறிப்பிட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திற் சேர்த்த அருளாளர் கோளிலி எம்பெருமானாவார். கோளிலி எம்பெருமானின் அற்புதங்களை வியந்து அடிபணிந்து "நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே" என்ற தொடரில் பாடி இன்புற்றார். இத்திருப்பதிகம் முதலாம் திருமுறையில் அமைந்துள்ளது.

திருக்கோளிலி

பண் : பழந்தக்கராகம்

1. நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே யரன்நாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே.

2. ஆடரவத் தழகாமை அணிகேழற் கொம்பார்ந்த
தோடரவத் தொருகாதன் துணைமலர்நற் சேவடிக்கே
பாடரவத் திசைபயின்று பணிந்தெழுவார் தம்மனத்தில்
கோடரவந் தீர்க்குமவன் கோளிலியெம் பெருமானே.

3. நன்றுதரு நாண்மலரால் நல்லிருக்கு மந்திரங்கொண்
டொன்றிவழி பாடுசெய் லூற்றவன்ற ணோாங்குயிர்மேல்
கன்றிவரு காலனுயிர் கண்டவனுக் கன்றளித்தான்
கொன்றைமலர் பொன்றிகழுங் கோளிலியெம் பெருமானே.

4. வந்தமண லாலிங்க மன்னியின்கட் பாலாட்டும்
சிந்தைசெய்வோன் தன்கருமந் தேர்ந்து சிதைப் பான் வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ் சண்டீச னென்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான் கோளிலியெம் பெருமானே.

5. வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலும்நற் பூசனையாய்
நஞ்சமுது செய்தருளு நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபதி மீந்துகந்தாள்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. தாவியவ னுடனிருந்துங் காணாத தற்பரனை
ஆவிதனி லஞ்சொடுக்கி யங்கணனென் றாதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே.

7. கல்நவிலு மால்வரையான் கார்திகழு மாமிடற்றான்
சொன்னவிலு மாமறையான் தோத்திரஞ்செய் வாயினுளான்
மின்னவிலுஞ் செஞ்சடையான் வெண்பொடியா னங்கையினில்
கொன்னவிலுஞ் சூலத்தான் கோளிலியெம் பெருமானே.

8. அந்தரத்தில் தேரூரு மரக்கன்மலை யன்றெடுப்பச்
சுந்தரத்தன் திருவிரலா லூன்றவவ னுடல்நெரிந்து
மந்திரித்த மறைபாடவாளவனுக் கீந்தானும்
கொந்தரத்த மதிச்சென்னிக் கோளிலியெம் பெருமானே.

9. நாணமுடை வேதியனு நாராணனு நண்ணவொண்ணாத்
தாணுவெனை யாளுடையான் றன்னடியார்க் கன்புடைமை
பாணனிசை பத்திமையாற் பாடுதம் பரிந்தளித்தான்
கோணலிளம் பிறைச்சென்னிக் கோளிலியெம் பெருமானே.

10. தடுக்கமருஞ் சமணரொடு தர்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண்வரு மொழிகேளா தீசனையே ஏத்துமின்கள்
நடுக்கமிலா அமருலகந் நண்ணலுமா மாமண்ணல்கழல்
கொடுக்ககிலா வரங்கொடுக்குங் கோளிலியெம் பெருமானே.

11. நம்பனைநல் யடியார்க ணாமுடைமா டென்றிருக்கும்
கொம்பனையாள் பாகனெழிற் கோளிலியெம்பெருமானை
வம்பமருந் தண்காழிச் சம்பந்தன் வண்டமிழ்கொண்
டின்பமர வல்லார்க ளெய்துவர்க ளீசனையே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவீழிமிழலையில் படிக்காசு பெறுதல்.

சிவாலயச் சுற்றுலாவில் திருஞானசம்பந்தரும் திருநாவுக் கரசரும் திருவீழிமிழலையில் தங்கியிருந்த வேளை வானம் பொய்த்ததால் பயிர் விளைச்சலின்றி நாடு முழுவதும் பெரும் பஞ்சமேற்பட்டது. யாவரும் பசியால் வாடினர். அடியார்களுக்கும் உணவு தருவாரில்லை யாவரதும் நன்மை கருதிய இரு நாயன்மார் களும் இறைவனை வேண்டித் துதித்தனர். இருவரதும் பக்தியை மெஞ்சிய இறைவன் அன்றிரவு இருவரதும் கனவில் தோன்றி எமது சிவபக்தர்களின் பசி போக்குவதன் பேரில் இவ்வாலயத்தின் கிழக்கு வாசலிலும் மேற்கு வாசலிலும் அமைந்த பீடங்களில் தினமும் ஒவ்வொரு பொற்காசு வைத்து வழங்குவோம். அதைக் கொண்டு உங்கள் அடியார்களின் பசியைத் தீருங்கள். பஞ்ச காலம் முடிந்ததும் படிக்காசு வழங்குவது நிறுத்தப்படும் என்றருளினார்.

மறுநாட்காலை இருவரும் சென்று பார்த்தனர். இறைவனின் திருவருளை வியந்தவாறு அதனை எடுத்துக் கடைகளில் பொருட்களை வாங்கி அடியார்களுக்கு அன்னப்பணியாற்றினார். திருநாவுக்கரசர் பாடிப்பணிதலுடன் உழவாரத் தொண்டு செய்வ தால் மாற்றுக்குறையாத பொற்காசு கிடைத்ததும் விரைவில் பொருட்களை வாங்கி மதிய வேளைக்கு முன்பே அன்னப்பணி அப்பரின் மடத்தில் நடைபெற்றது.

சம்பந்தரின் பொற்காசு தரக்குறைவால் வட்டம் தருமாறு கேட்டு பொருட்கள் பெறத் தாமதமானது என அறிந்த சம்பந்தர் இறைவனை வேண்டித் தமது குறையை நீக்குமாறு பதிகம் பாடினார். சம்பந்தர் திருவீழிமிழலையில் "வாசி தீரவே காசு நல்குவீர்" என்னும் தொடரில் இருவரி கொண்ட பாடற் பதிகத்தைப் பாடினார். மறுநாட் தொடக்கம் மாற்றுக் குறையாத பொற்காசு கிடைத்தது. அடியார்களுக்கு உரிய நேரத்தில் சிறப்பான அன்ன தானப் பணி செய்தனர். "வாசி தீரவே" என்ற பதிகம் முதலாம் திருமுறையில் அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிருக்குக்குறள் பண் - குறிஞ்சி

1. வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏச வில்லையே

2. இறைவ ராயினீர், மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே.

3. செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையீர்
பைகொ ளரவினீர் உய்யநல்குமே.

4. நீறுபூசினீர் ஏறதேறினீர்
கூறு மிழலையீர் பேறு மருளுமே.

5. காமன் வேவவோர் தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர் சேமநல்குமே.

6. பிணிகொள் சடையினீர் மணிகொள் மிடறினீர்
அணிகொள் மிழலையீர் பணிகொண்டருளுமே.

7. மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே.

8. அரக்கன் நெரிதர இரக்க மெய்தினீர்
பரக்கு மிழலையீர் கரக்கை தவிர்மினே

9. அயனு மாலுமாய் முயலுமுடியனீர்
இயலு மிழலையீர் பயனுமருளுமே

10. பறிகொள் தலையினார் அறிவ தறிகிலார்
வெறிகொள் மிழலையீர் பிறிவ தரியதே

11. காழி மாநகர் வாழி சம்பந்தன்
வீழி மிழலை மேல் தாழு மொழிகளே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமறைக்காட்டில் திருக்கதவு திறந்ததும் அடைத்ததும்

அப்பரும் சம்பந்தரும் திருமறைக்காட்டீசரை வணங்கச் சென்றனர். இவர்களைக் கண்டதும் அங்கு கூடியிருந்த பக்தர்கள் இருவரையும் வணங்கி வரவேற்றுக் குதூகலமடைந்தனர். யாவரும் ஆலயத்தினுட்செல்ல எண்ணினர். ஆலயத்தின் முன் வாசற் கதவு மூடப்பட்டிருந்தது. அச்சமயம் அவ்வூர் மக்கள் அன்று இவ்வாலயக் கதவு வேதங்களால் பூசிக்கப்பட்டுத் திருக்காப்பிடப்பட்டது. இது வரை திறக்கப்படுவதில்லை. உள்ளே செல்ல வேறொரு வாச லமைத்து அதனூடாகவே ஆலயத்தினுட் செல்வது வழக்கம் என்றனர்.

இதைக்கேட்டதும் ஞானசம்பந்தர் அப்பரை நோக்கி நாம் நேர் வாசலினாற் செல்ல வேண்டும். முதலில் நீர் இத்திருக்கதவை திறக்கப் பாடும் என்றார். அச்சமயம் அப்பர் இறைவனை வேண்டி "பண்ணினேர் மொழி" என்னும் தொடரில் பதிகம் முழுவதையும் பாடிய பின் கதவு தானாகவே திறந்தது அடியவர்கள் யாவரும் இறையருளை வியந்து, ஆரவாரஞ் செய்தனர். நாயன்மார்களான அப்பரும் சம்பந்தரும் முன் செல்ல அடியார்கள் யாவரும் குதூகலத்துடன் ஆலயத்துட்சென்று வழிபட்டனர். யாவரும் வெளிவந்ததும் அப்பர் சம்பந்தரை நோக்கி திருக்கதவை அடைக்கப் பாடுமாறு கேட்டார். அச்சமயம் சம்பந்தர் "சதுரம்மறை" என்ற தொடரில் முதற் பாடலைப் பாடியதும் திருக்கதவு மூடிக் கொண்டது. அன்று முதல் திருமறைக்காட்டு ஆலயத்தின் முன் வாசற் கதவு பக்தர்களின் வழிபாட்டிற்கென நாள்தோறும் திறந்தும் மூடவும் இறையருள் நல்கியது. திருஞானசம்பந்தர் பாடிய "சதுரம் மறை" என்னும் பாடல் இரண்டாம் திருமுறையில் உள்ளது. தொடர்வது "சதுரம் மறை" என்னும் பதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. சதுரம்மறை தான்றுதி செய்து வணங்கும்
மதுரம்பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
இது நன்கிறை வைத்தருள் செய்க வெனக்குன்
கதவந்திருக் காப்புக்கொள் ளுங்கருத்தாலே.

02. சங்கந்தர ளம்மவை தான்கரைக் கெற்றும்
வங்கக்கடல்சூழ் மறைக் காட்டுறை மைந்தா
மங்கையுளம் பாகமு மாகவி தென்கொல்
கங்கைசடை மேலடை வித்த கருத்தே.

03. குரவங்குருக் கத்திகள் புன்னைகண் ஞாழல்
மருவும்பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
சிர மும்மல ருத்திகழ் செஞ்சடை தன்மேல்
அரவம் மதி யோடடை வித்த லழகே.

04. படர்செம்பவ ளத்தொடு பண்மலர் முத்தம்
மடலம் பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
உடலம்முமை பங்கம தாகியு மென்கொல்
கடனஞ்சமு தாவது வுண்ட கருத்தே.

05. வானோர்மறை மாதவத் தோர்வழிபட்ட
தேனார்பொழில் சூழ்மறைக் காடுறை செல்வா
ஏனோர்தொழு தேத்த விருந்தநீ யென்கொல்
கானார்கடு வேடுவனான கருத்தே.

06. பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலராய்வழி பாடுசெய் மாமறைக் காடா
உலகேமுடை யாய்கடை தோறுமுன் னென்கொல்
தலைசேர் - பலி கொண்டதி லுண்டது தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. வேலாவல யத்தயலேமிளிர் வெய்தும்
சேலார்திரு மாமறைக் காட்டுறை செல்வா
மாலோடய னிந்திர னஞ்சமு னென்கொல்
காலார்சிலைக் காமனைக் காய்ந்த கருத்தே.

08. கலங்கொள்கட லோத முலாவு கரைமேல்
வலங்கொள்பவர் வாழ்த்திசைக் கும்மறைக் காடா
இலங்கையுடை யானடர்ப் பட்டிட ரெய்த
அலங்கல்விர லூன்றி யருள்செய்த வாறே.

09. கோனென்றுபல் கோடி யுருத்திரர் போற்றும்
தேனம்பொழில் சூழ்மறைக் காட்டுறை செல்வா
ஏனங்கழு கானவ ருன்னைமு னென்கொல்
வானந்தல மண்டியுங் கண்டிலா வாறே.

10. வேதம்பல வோமம் வியந்தடி போற்ற
ஓதம்முல வும்மறைக் காட்டி லுறைவாய்
ஏதில்சமண் சாக்கியர் வாக்கிவை யென்கொல்
ஆதரொடு தாமலர் தூற்றிய வாறே.

11. காழிந்நக ரான்கலை ஞான சம்பந்தன்
வாழிம்மறைக் காடனை வாய்ந்தறி வித்த
ஏழின்னிசை மாலையீ ரைந்திவை வல்லார்
வாழியுல கோர்தொழ வானடைவாரே.

திருச்சிற்றம்பலம்.

## திருவாய்மூரில் சிவபெருமான் அம்பிகையுடன் ஆடல் காட்சி தந்தது.

திருமறைக்காட்டில் அப்பரும் சம்பந்தரும் தங்கியிருந்த வேளை இருவரும் ஒரு நாள் உறங்கி விட்டனர். அப்பர் தூங்கும் போது இறைவன் தோன்றி நாம் திருவாய்மூரில் இருப்போம் அவ்விடம் வருவாயாக எனக்கூறிச் சென்றார். இதையறிந்த அப்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனெழுந்து கூடத்தங்கிய சம்பந்தருக்கும் தெரிவிக்காது சிவ பெருமானைத் தொடர்ந்தார். இறைவன் அண்மையிற் செல்வது போல காட்டித் தூரத்தூர நடந்து சென்றார். அப்பரும் ஆர்வத்துடன் அவர் பின்னே தொடர்ந்து சென்றார்.

சற்று நேரத்தில் துயிலெழுந்த சம்பந்தர் "அப்பர் எங்குற்றார்" எனக் கேட்டார் அடியார்கள் அப்பர் வாஞ்சையுடன் திருவாய் மூருக்குச் சென்றாரெனச் செப்பினர். அது கேட்டதும் சம்பந்தர் தமது காலைக்கடனை முடித்ததும் திருவாய்மூரைச் சென் றடைந்தார். அப்பதியில் சிவபெருமான் அம்பிகையுடன் சேர்ந்து ஆடல் காட்சியைக் காண்பித்தார். இறைவன் இறைவியின் இளநடை போடும் அரிய ஆடற்காட்சியைக் கண்டுகளித்த சம்பந்தர் அவர்களைப் புகழ்ந்து "தளிர் இளர் வளரெனத்" தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி இறைவனைத் தொழுது வணங்கினார். தொடர்ந்து அங்கு சில நாட்கள் தங்கியதும் அப்பரும் சம்பந்தரும் திருமறைக்காட்டை வந்தடைந்தனர்.

## சம்பந்தர் திருமறைக்காட்டில் கோளறு பதிகம் பாடியது

திருநாவுக்கரசருடன் திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டில் தங்கியிருந்து இறைவழிபாட்டையும் சைவசமய வளர்ச்சியையும் ஞானநோக்கில் கலந்துரையாடி இன்புற்றிருந்த வேளை பாண்டிய நாட்டிலிருந்து பாண்டிமா தேவியும் மந்திரி குலச்சிறையாரும் அனுப்பிய ஒற்றர்கள் தெரிவித்ததற்கமையச் சம்பந்தர் பாண்டிய நாடு செல்ல எண்ணினார். அச்சமயம் அப்பர் சம்பந்தரை நோக்கி அங்குள்ள சமணர்கள் கொடியவர்கள். சிறு பிள்ளையாகிய உம்மீது தீங்குகள் செய்வார்கள் இப்போது நாளும் கோளும் உகந்ததல்ல என்று தடை செய்தார். அச்சமயம் சம்பந்தர் "நாம் போற்றுவது சிவபெருமானின் திருவடிகளையே யாகும். நாளும் கோளும் நம்மை என்ன செய்யும். பரமன் தொண்டில் நமக்குப் பழுது ஏதும் வராது" என்று கூறி இறைவனை வேண்டி "வேயுறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழி பங்கன்" என்று தொடங்கும் கோளறு திருப்பதிகத்தைப் பாடினார். இதைக் கேட்டதும் அப்பர் தடைசெய்யாது விலகினார். வேயுறு தோழி பங்கன் என்னும் பாடல் இரண்டாம் திருமுறை 229 ஆம் பதிகமாக அமைந்தது.

பொது பண் : பியந்தைக்காந்தாரம்

01. வேயுறுதோளி பங்கன் விடமுண்டகண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறுதிங்கள் கங்கை முடிமேலணிணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்ரண்டு முடனே
ஆசறு நல்ல நல்லவவை நல்ல நல்ல
வடியார் ரவர்க்கு மிகவே.

02. என்பொடுகொம்பெடாமை மிவைமார்பிலங்க
வெருதேறியே ழையுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஒன்ப தொடொன்றொடேழு பதினெட்டோடாறு
முடனாய நாள் களவைதாம்
அன்பொடு நல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

03. உருவளர் பவுளமேனி யொளிநீறணிந்து
வுமையோடும் வெள்ளைவிடைமேல்
முருகலர்கொன்றை திங்கள் முடிமேலணிந்தே
னுளமேபுகுந்த வதனால்
திருமகள் கலையதூர்தி செயமா துபூமி
திசை தெய்வமான பலவும்
அருநெதிலநல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. மதிநுதன் மங்கையோடு வடபாலிருந்து
மறையோ துமெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
கொதியுறு காலனங்கி நமனோடுதூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுணநல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

05. நஞ்சணி கண்டனெந்தை மடவாடனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்
வெஞ்சினவவுணரோடு முருமிடியுமின்னு
மிகையான பூதமவையும்
அஞ்சிடுநல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

06. வாழ்வரிய தளதாடை வரிகோவணத்தர்
மடவாடனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தெ
னுளமேபுகுந்த வதனால்
கோளரியுழுவையோடு கொலையானைகேழல்
கொடுநாகமோடு கரடி
ஆளரிநல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

07. செப்பிளமுலை நன்மங்கை யொரு பாகமாக
விடையேறு செல்வனடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமேலணிந்தெ
னுளமே புகுந்தவதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெப்போடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படிநல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

08. வேள்பட விழிசெய் தன்று விடைமேலிருந்து
மடவாடனோடு முடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடிவந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்றனோடு
மிடரானவந்து நலியா
ஆழ்கடனல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

09. பலபலவேட மாகும் பரனாரிபாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமகளோ டெருக்கு முடி மேலணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
மலர்மிசையோனு மாலு மறையோடு தேவர்
வரு காலமான பலவும்
அலைகடன்மேரு நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.

10. கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு - மதியு நாக முடிமேலணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
புத்தரொட மணைவாதி லழிவிக்கு மண்ண
றிருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல வவை நல்ல நல்ல
வடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெறுன்னி
வளர்செம் பொனெங்கு நிகழ
நான்முகனாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ணமுரைசெய்
ஆன சொன்மாலை யோது மடியார்கள் வானி
லரசாள்வ ராணை மமதே.

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டை அடைதல்.

நீடிய காலமாகச் சிறப்புடன் போற்றப்பட்ட சைவசமயம் பிற்காலத்தில் வந்த சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களால் நலிவடைந்தது. சமணர்கள் தங்கள் வளர்ச்சிக்காக பாண்டிய மன்னனையே வசீகரித்து மதம் மாற்றினர். மன்னனின் அனுசரணையுடன் சமண சமயம் கோலோச்சவும் சைவம் பின் தள்ளப்பட்டது. பாண்டிய மன்னனான கூன்பாண்டியன் சமண சமயக் காவலனாக விளங்கினார். பரம்பரை பரம்பரையாக சைவசமயத்தையே மூச்சாகக் கொண்ட பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசியும் பாண்டியனின் முதன் மந்திரியான குலச் சிறையாரும் சைவசமயத்தையே போற்றி வாழ்ந்தனர். தமது சமயம் நலிவுற்ற போதும் சிவபிரானின் தளராத பக்தியால் தமது சைவம் உய்யுமென நற்காலத்தை எதிர்பார்த்திருந்தனர்.

தமிழகத்தில் நலிவுற்ற சைவசமயத்தை வளர்க்கவென்றே அவதரித்தவர் திருஞானசம்பந்தர். இவருக்கு இறைவன் இட்ட பணி நலிவுற்ற சைவசமயத்தை நிலைநாட்டுவதேயாகும். இதற்காகவே மூன்று வயதில் சிவஞானப் பாலூட்டி யாவற்றையும் உணர வைத்தார். சம்பந்தர் தமது பிறந்தகமான சோழ வள நாட்டிலுள்ள சிவாலயங்கள் தோறும் பண்ணிசை பாடிப் பல அற்புதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து தமிழ் மக்களை விழிப்படையச் செய்தார். பாலகனாக இருந்த போதும் சிவநெறியையே போற்றியும் அதன் பெறுபேறு களையும் அடையச் செய்தவர் அசாதாரணமான கெடுதிகளி லிருந்தும் மக்களை விடுவித்தவர்.

பாண்டிய நாட்டின் அண்மையிலுள்ள சிவமயமான புண்ணிய பதிகளில் அற்புதங்கள் செய்து உலாவந்து சைவ மக்களுக்கு அபயமளித்தார். திருஞானசம்பந்தரின் சைவப் பற்றையும் பாடல் பாடிச் செய்த அற்புதங்களையும் கலங்கரை விளக்காக நோக்கித் தமது பாண்டிய நாட்டை உய்விக்கக் கனவு கண்டவர்கள் பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும் இதனால் திருஞானசம்பந்தரின் பெருமையைத் தமது கவலைக் கான அருமருந்தாக உபயோகிக்கச் சித்தங் கொண்டனர்.

மன்னனும் மக்களும் சமண சமயத்தில் அமிழ்ந்தாலும் தாம் சிவனருளையே துணையாகக் கொண்டு அனைவருடன் தமது பாண்டிய நாட்டையே சிவபதியாக்க முன் வந்தனர். இதன் நோக்கில் தமக்கிசைவான இரு ஒற்றர்களை ஞானசம்பந்தரிடம் தூதனுப்பினர். தூதுவர் மூலம் சம்பந்தர் பாண்டிய நாட்டின் நிலையை உணர்ந்தார். சைவம் வளர உதவ உறுதி பூண்ட பாண்டிமாதேவி மற்றும் குலச்சிறையாரின் அழைப்பை ஏற்றுப் பாண்டிய நாட்டிற்குச் செல்லச் சம்பந்தர் சித்தங் கொண்டார். சம்பந்தரின் சகாவான அப்பர் தடைசெய்தாலும் சிவனருளை நம்பிப் பாண்டிய நாட்டிற்குச் செல்கிறார். சம்பந்தருடன் அன்பர் களான திருக்கூட்டமும் உடன் செல்கிறது.

சம்பந்தர் புறப்படுமுன் திருமறைக்காட்டு ஈசனை வணங்கி அவனருள் பெற்று கூடி நின்ற அப்பரிடம் ஆசியும் பெற்று தமது பல்லக்கிலேறிச் சிவசிந்தனையுடன் கொடி, குடை, ஆலவட்டம் அணி செய்ய முத்துச் சின்னங்கள் முழங்கத் திருக்கூட்டத்தினரின் பிரார்த்தனை ஒலியின் மத்தியில் பாண்டி நாட்டை அடைந்தனர். இவ்வாறு சம்பந்தர் மதுரையின் எல்லையை அடைந்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ள சமணர்கள் பயந்த நிலையில் தமது சமயப் பிரமுகர்களுக்கெல்லாம் தெரிவித்தனர் அனைவரும் அச்ச நிலையை அடைந்தனர். ஏற்கெனவே இவர்கள் தீய கனவுகளைக் கண்டஞ்சினர். இதேசமயம் பாண்டிமாதேவியும் குலச்சிறை நாயனாரும் சுபசகுனங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

சம்பந்தர் வருவதை அறிந்ததும் மங்கையர்கரசியார் குலச்சிறையார் மூலம் நகரவீதிகளை எல்லாம் அலங்கரிக்கச் செய்தார். குலச்சிறையார் சம்பந்தரையும் திருக்கூட்டத்தினரையும் முன் சென்று வணங்கி வரவேற்றார். யாவரும் ஆலவாய் அரனிடம் சென்று வழிபட முற்பட்டனர். அச்சமயம் பாண்டிமாதேவியினதும் குலச்சிறையாரதும் சைவப்பண்பையும் பணியையும் மெச்சிய திருஞானசம்பந்தர் "மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை" என்று தொடங்கும் பதிகத்தில் இருவரையும் மெச்சிப்பாடினார். (இப்பதிகம் மூன்றாம் திருமுறையில் அமைந்துள்ளது.) பாண்டி மாதேவியும் வணங்கி நின்றார். குலச்சிறையாருடன் ஆலவாய் ஆலய வழிபாட்டின் பின் பாண்டிமாதேவியின் பெருவிருப்பின் பேரில் சம்பந்தரும் திருக்கூட்டத்தினரும் உரிய திருமடத்தில் தங்க வைக்கப்பட்டு அரிய விருந்தும் அளித்து இன்புற்றனர்.

திருஆலவாய் பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

1. மங்கையர்கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநா யகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவா யாவதும் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வெற்றவே அடியார் அடிமிசை வீழும்
விருப்பினன் வெள்ளை - நீறு அணியும்
கொற்றவன் றனக்கு மந்திரி யாய
குலச்சிறை குலாவிநின்று ஏத்தும்
ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன்
உலகினில் இயற்கையை ஒழித்திட்
டற்றவர்க்கு அற்ற சிவனுறை கின்ற
ஆலவா யாவதும் இதுவே.

3. செந்துவர் வாயாள் சேலனகண்ணாள்
சிவன்திரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டிமாதேவி
பணிசெயப் பாரிட நிலவும்
சந்தமார் தரளம் பாம்புநீர் மத்தம்
தண்ணெருக் கம்மலர் வன்னி
அந்திவான் மதிசேர் சடைமுடி யண்ணல்
ஆலவா யாவதும் இதுவே.

4. கணங்களாய் வரினும் தமியராய் வரினும்
அடியவர் தங்களைக் கண்டால்
குணங்கொடு பணியும் குலச்சிறை குலாவும்
கோபுரம் சூழ்மணிக் கோயில்
மணங்கமழ் கொன்றை வாளரா மதியம்
வன்னிவன் கூவிள மாலை
அணங்குவீற் றிருந்த சடைமுடி அண்ணல்
ஆலவா யாவதும் இதுவே.

5. செய்யதா மரைமேல் அன்னமே அனைய
சேயிழை திருநுதற் செல்வி
பையரா அல்குல் பாண்டிமா தேவி
நாள்தொறும் பணிந்துஇனிது ஏத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யவேல் சூலம் பாசம்அங் குசமான்
விரிகதிர் மழுவுடன் தரித்த
ஐயனார் உமையோடு இன்புறுகின்ற
ஆலவா யாவதும் இதுவே.

6. நலமில ராக நலமதுஉண் டாக
நாடவர் நாடறி கின்ற
குலமில ராகக்குலமதுஉண் டாக
தவம்பணி குலச்சிறை பரவுக்
கலிமலி கரத்தன் மூவிலை வேலன்
கரியுரி மூடிய கண்டன்
அலைமலி புனல்சேர் சடைமுடி அண்ணல்
ஆலவா யாவதும் இதுவே.

7. முத்தின்தாழ் வடமும் சந்தனக் குழம்பும்
நீறும் தன் மார்பினில் முயங்கப்
பத்தியார் கின்ற பாண்டிமா தேவி
பாங்கொடு பணிசெய் நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே
சுடர்மர கதமடுத் தாற்போல்
அத்தனார் உமையோடு இன்புறு கின்ற
ஆலவா யாவதும் இதுவே.

8. நாவணங்கு இயல்பாம் அஞ்செழுத் தோதி
நல்லராய் நல்லியல் பாகும்
கோவணம் பூதி சாதனம் கண்டால்
தொழுதெழு குலச்சிறை போற்ற
ஏவணங்கு இயல்பாம் இராவணன் திண்தோள்
இருபது நெரிதர ஊன்றி
ஆவணங் கொண்ட சடைமுடி யண்ணல்
ஆலவா யாவதும் இதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மண்ணெலா நிகழ மன்னனாய் மன்னும்
மணிமுடிச் சோழன்றன் மகளாம்
பண்ணினேர் மொழியாள் பாண்டிமாதேவி
பாங்கினால் பணிசெய்து பரவ
விண்ணுளார் இருவர் கீழொடு மேலும்
அளப்பரி தாம்வகை நின்ற
அண்ணலார் உமையோடு இன்புறு கின்ற
ஆலவா யாவதும் இதுவே.

10. தொண்டராய் உள்ளோர் திசைதிசை தோறும்
தொழுதுதன் குணத்தினைக் குலாவக்
கண்டு நாள்தோறும் இன்புறு கின்ற
குலச்சிறை கருதி நின்ற ஏத்தக்
குண்டராய் உள்ளார் சாக்கியர் தங்கள்
குறியின்கண் நெறியிடை வாரா
அண்டநா யகன்றான் அமர்ந்துவீற் றிருந்த
ஆலவா யாவதும் இதுவே.

11. பன்னலம் புணரும் பாண்டிமா தேவி
குலச்சிறை யெனும்இவர் பணியும்
அந்நலம் பெறுசீர் ஆலவாய் ஈசன்
திருவடி ஆங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள் ஞான
சம்பந்தன் செந்தமிழ் இவைகொண்டு
இன்னலம்பாட வல்லவர் இமையோர்
ஏத்த வீற் றிருப்பர் இனிதே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தரின் வருகையை அறிந்த சமணர்கள் யாவரும் ஒன்றுகூடித் தமது கவலையையிட்டுப் பாண்டிய மன்னனிடஞ் சென்றனர். பாண்டியனிடம் சைவப் பிராமணச் சிறுவன் தமது கூட்டத்துடன் வந்துள்ளான். இவன் எம்முடன் வாதிட்டு எமக்கு இடையூறு செய்யவுள்ளான். இவர்களைக் கண்டதால் எமக்குத் தீட்டு ஏற்பட்ட "கண்டு முட்டு" என்றனர். அச்சமயம் அரசன் நீங்கள் சொல்வதைக் கேட்டதால் எனக்குக் "கேட்டு முட்டு" என்றான். மேலும் சமணர்கள் இக்கூட்டத்தினரை நம்மால் விரட்டி அனுப்ப முடியாது. எமது மந்திர வலிமையால் தீ வளர்த்து மடத்தை எரித்தால் அவர்கள் பயந்து ஓடிவிடுவார்கள் என்றனர். அது கேட்டதும் பாண்டியன் அவர்களுக்கு அனுமதி யளித்தான்.

இச்சம்பவத்தால் மன்னன் கவலையுடன் எவருடனும் பேசாது தமது பள்ளியறையை நாடினான். அச்சமயம் பாண்டி மாதேவி கணவனின் கவலையைக் கேட்டறிந்தாள். சமணர் களுக்கும் சம்பந்தருக்குமிடையே விவாதம் நடந்தால் வெல்பவர் பக்கம் சார்வது நியாயமும் நீதியுமாகுமெனத் தேற்றினாள். பின் அந்தப்புரஞ் சென்ற பாண்டிமாதேவி குலச்சிறையாருடன் உரையாடிய போது கொடிய சமணர்கள் சிறுபாலகனான சம்பந்தருக்கு ஏதும் தீது செய்வார்களோ என ஏங்கினார்.

இதே சமயம் அரசனிடம் அனுமதி பெற்ற சமணர்கள் மந்திரம் மூலம் தீ வளர்க்க இயலாததால் மடத்திற்குத் தாமே தீ மூட்டினர். இதனைக் கண்டஞ்சிய சிவனடியார்கள் சம்பந்தரிடம் முறையிட்டனர். அச்சமயம் சிவனருளை முன்னிறுத்திய சம்பந்தர் "செய்யனே திரு ஆலவாய்" என்று தொடங்கும் பதிகத்தைப்பாடி நிறைவில் பையவே சென்று பாண்டியர்க்காகவே" என்று பாடி தீக்கு ஆணையிட்டார். "செய்யனே திரு" இப்பாடல் மூன்றாம் திருமுறை பதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

1. செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்சல் என்றருள் செய்எனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வும்சுடர்
பைய வேசென்று பாண்டியற்கு ஆகவே.

2. சித்த னேதிரு ஆலவாய் மேவிய
அத்த னேஅஞ்சல் என்றருள் செய்யெனை
அத்த ராம்அம ணர்கொளு வும்சுடர்
பத்தி மன்தென்னன் பாண்டியற்கு ஆகவே.

3. தக்கன் வேள்வி தகர்த்தருள் ஆலவாய்ச்
சொக்க னேஅஞ்சல் என்றருள் செய்எனை
எக்க ராம்அம ணர்கொளு வும்சுடர்
பக்கமேசென்று பாண்டியற் காகவே.

4. சிட்ட னேதிரு ஆலவாய்மேவிய
அட்ட மூர்த்திய னேஅஞ்சல் என்றருள்
துட்ட ராம்அம ணர்கொளு வும்சுடர்
பட்டி மன்தென்னன் பாண்டியற்கு ஆகவே.

5. நண்ண லார்புர மூன்றுஎரி ஆலவாய்
அண்ண லேஅஞ்சல் என்றருள் செய்எனை
எண்ணி லாஅம ணர்கொளு வும்சுடர்
பண்ணி யற்றமிழ் பாண்டியற்கு ஆகவே.

6. தஞ்சம் என்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்சல் என்றருள் ஆலவாய் அண்ணலே
வஞ்சம் செய்துஅம ணர்கொளு வும்சுடர்
பஞ்ச வன்தென்னன் பாண்டியற்கு ஆகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. செங்கண் வெள்விடை யாய்திரு ஆலவாய்
அங்க ணாஅஞ்சல் என்றருள் செய்எனைக்
கங்கு லார்அமண் கையர் இடும்கனல்
பங்க மில் தென்னவன் பாண்டியற்கு ஆகவே.

8. தூர்த்தன் வீரம் தொலைத்தருள் ஆலவாய்
ஆத்த னேஅஞ்சல் என்றருள் செய்எனை
ஏத்தி லாஅம ணர்கொளு வும்சுடர்
பார்த்தி வன்தென்னன் பாண்டியற்கு ஆகவே.

9. தூவி னானயன் தானறி யாவகை
மேவி னாய்திரு ஆலவா யாய்அருள்
தூவி லாஅம ணர்கொளு வும்சுடர்
பாவி னான்தென்னன் பாண்டியற்கு ஆகவே.

10. எண்தி சைக்கு எழில் ஆலவாய் மேவிய
அண்ட னேஅஞ்சல் என்றருள் செய்எனைக்
குண்ட ராம்அம ணர்கொளு வும்சுடர்
பண்டி தென்னன் பாண்டியற்கு ஆகவே.

11. அப்பன் ஆலவாய் ஆதி அருளினால்
வெப்பம் தென்னவன் மேலுற மேதினிக்கு
ஒப்ப ஞானசம் பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லார் தீதிலாச் செல்வரே.

திருச்சிற்றம்பலம்

சம்பந்தரின் பணிப்பின் பேரில் சமணர்கள் மூட்டிய தீ மன்னனிடம் மெல்லெனச் சென்று வெப்புநோயாக்கியது. இதனால் மன்னன் தாங்கொணாத வேதனையுற்றான் அரண்மனை வைத்தியர்கள் பலவாறு முயற்சித்தும் பலனில்லை. சமணர்கள் மயிற் பீலியை பிரம்பிற் கட்டி அதனால் மன்னனின் உடலைத் தடவினர். மயிற் பீலி வெம்மையால் முற்றாக எரிந்தது. தமது கமண்டலத்தில் உள்ள நீரினை உடல் முழுவதும் சொரிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் வெம்மை கூடுதலாகப் பரவியது. அச்சமயம் மன்னன் அவர்களை அங்கிருந்து ஓடுமாறு கூறினான். இச்செய்தி பாண்டிமாதேவிக்கும் எட்டியது. பாண்டிமாதேவியும் குலச்சிறை யாரும் மன்னனிடம் வந்து நிலைமையை உணரச் செய்தனர். அச்சமயம் பாண்டியன் திருஞானசம்பந்தரை அழைத்து வந்து காண்பிக்குமாறு கூறினான்.

மன்னனின் சம்மதத்துடன் பாண்டிமாதேவி தமது பல்லக் கிலும் குலச்சிறையார் தமது குதிரை மீதும் சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தை அடைந்து அவரை வீழ்ந்து வணங்கித் தமது நிலையை வெளியிட்டனர். சமணர்கள் திருமடத்திற்கு இட்ட தீ மன்னனிடம் சென்று வெப்பு நோயாக வாட்டுவதால் மன்னன் நோயிலிருந்து விடுபடவும் தாமும் சமணர்களின் கொடுவினை யிலிருந்து தவறவும் சமணர்களுடன் வாதிட்டுச் சைவத்தை நிலை நாட்டுமாறும் பணிவுடன் வேண்டினர். சம்பந்தர் இருவரையும் அஞ்சவேண்டாமென ஆறுதல் கூறினார்.

சம்பந்தர் சமணர்களின் தீமையைக் கண்டிக்கவும், வாதிட்டு வெல்லவும் எல்லாம் வல்ல ஆலவாய் அரனை வேண்டி வழிபடச் சென்றார். அங்கு தமது நிலையை உணர்த்தி "காட்டுமாது உரித்து" மற்றும் "வேதவேள்வியை" என்றும் தொடங்கும் திருப்பதிகங் களைப் பாடினார். இறைவனிடம் வழிபட்டதும் முத்துச் சிவிகை யிலேறித் தமது சிவசின்னங்கள் தரித்த அடியார்கள் புடைசூழப் பாண்டிய மன்னனின் அரண்மனையை அடைந்தார்.

சம்பந்தரின் வரவைக் குலச்சிறையார் பாண்டியனிடம் தெரிவித்தார். மன்னன் அதைக்கேட்டதும் துயரம் சிறிது நீங்கப் பெற்று தமது திருமுடியருகே சம்பந்தருக்குப் பொற்பீடம் இடச் செய்து திருஞானசம்பந்தரை வரவேற்று அழைத்து வந்து அமரச் செய்யுமாறு ஏவினான். மன்னனின் ஏவலை ஏற்ற குலச்சிறையார் சம்பந்தரை வரவேற்க வெளிச் சென்றார். அச்சமயம் சமணர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகுண்டெழுந்து இது தகுமோ என்றனர். அது கேட்ட மன்னன் நீங்களும் சம்பந்தரும் உங்கள் தெய்வீக வலிமையால் வெப்பு நோயைத் தீருங்கள் என்றார்.

அச்சமயம் திருஞானசம்பந்தரைக் குலச்சிறையாரும் பாண்டிமாதேவியும் அழைத்து வந்தனர். உள்ளே வந்த சம்பந்தரைப் பாண்டியன் தனது தலைமேல் இருகரங்களையும் கூப்பி வணங்கி உரிய ஆசனத்தில் அமருமாறு சைகை காட்டினான். சம்பந்தர் அமர்ந்ததும் சமணர்கள் அஞ்சினர். பாண்டியன் சம்பந்தரை தங்கள் ஊர் யாதெனக் கேட்டான்.

திருஞானசம்பந்தர் "பிரமனூர் வேணுபுரம்புகலி" என்ற தொடரில் பதிகம் பாடி சமணரை வாதுக்கு அழைத்தார். இதைக் கேட்ட சமணர் கூட்டம் அவர்களைச் சூழ்ந்து கோபக்கனல் வீசி எதிர்த்தனர். அதே நிலையில் மங்கையர்க்கரசியார் சிறு பாலகரான சம்பந்தர் மீது சமணர்கள் தீங்கு செய்வார்களோ என அஞ்சினார். இதைக்கேட்டதும் சம்பந்தர் "மானினேர்விழி மாதராய்" என்று தொடங்கும் பாடலைப் பாடினார். இவ்வாறு இருபகுதி யினரும் வாதிட நோயால் வாடிய மன்னன் தனது நோயை முதலில் வெவ்வேறு வகையில் தீருங்கள் நோய் தீர்த்தவர்கள் பக்கஞ் சேர்வேன் என்றான்.

திருஆலவாய் பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

1. மானினேர்விழி மாதராய்வழு
திக்குமாபெருந் தேவிகேள்
பானல் வாயொரு பாலன்ஈங்கு இவன்
என்றுநீ பரிவு எய்திடேல்
ஆனை மாமலை ஆதியாய
இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கு எளி யேன்அலேன் திரு
ஆலவாய அரன் நிற்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆகமத்தொடு மந்திரங்கள்
அமைந்தசங்கத பங்கமாப்
பாகத்தொடு இரைத்துரைத்த
சனங்கள் வெட்குறு பக்கமா
மாகதக்கரி போல்திரிந்து
புரிந்து நின்றுணும் மாசுசேர்
ஆகதர்க்கெளி யேனல்லேன்திரு
ஆலவாய அரன் நிற்கவே.

3. அத்தகுபொருள் உண்டு இல்லையும்
என்றுநின்றவர்க்கு அச்சமா
ஒத்தொவ்வாமை மொழிந்து வாதில்
அழிந் தெழுந்த கவிப்பெயர்ச்
சத்திரத்தின் மடிந்தொடிந்து
சனங்கள் வெட்குற நக்கமே
சித்திரர்க்கெளி யேனலேன் திரு
ஆலவாய அரன் நிற்கவே.

4. சந்துசேனனும் இந்துசேனனும்
தருமசேனனும் கருமைசேர்
கந்துசேனனும் கனகசேனனும்
முதலதாகிய பெயர்கொளா
மந்திபோல்திரிந்து ஆரியத்தொடு
செந்தமிழ்ப்பயன் அறிகிலா
அந்தகர்க்குளளி யேன்அலேன்திரு
ஆலவாய அரன் நிற்கவே.

5. கூட்டின்ஆர்கிளி யின்விருத்தம்
உரைத்ததோர்ஒலி யின்தொழில்
பாட்டுமெய்சொலிப் பக்கமேசெலும்
எக்கர்தங்களைப் பல்லறம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியேவரு மாடெலாங்கவர்
கையரைக்கசி வொன்றிலாச்
சேட்டைகட்கெளி யேனலேன்திரு
ஆலவாய அரன் நிற்கவே.

6. கனக நந்தியும் புட்ப நந்தியும்
பவண நந்தியும் குமணமா
கனகநந்தியும் குனக நந்தியும்
திவண நந்தியும் மொழிகொளா
அனக நந்தியர் மதுவொழிந்தவ
மேதவம்புரி வோம்எனும்
சின கருக்கெளி யேனலேன்திரு
ஆலவாய அரன் நிற்கவே.

7. பந்தணம்மவை யொன்றிலம்பரி
வொன்றிலம்மென வாசக
மந்தணம்பல பேசி மாசறு
சீர்மையின்றிய நாயமே
அந்தணம்மரு கந்தணம் மது
புத்தணம்மது சிந்தணச்
சிந்தணர்க்கெளி யேனலேன்திரு
ஆலவாய அரன் நிற்கவே.

8. மேலெனக்குஎதிர் இல்லையென்ற
அரக்கனார்மிகை செற்றதீப்
போலியைப்பணி யக்கிலாதொரு
பொய்த்தவங்கொடு குண்டிகை
பீலிகைக்கொடு பாய்இடுக்கி
நடுக்கியே பிறர் பின்செலும்
சீலிகட்கு எளி யேனலேன் திரு
ஆலவாய அரன் நிற்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பூமகற்கும் அரிக்கும் ஓர்வரு
புண்ணியன்னடி போற்றிலார்
சாமவத்தையி னார்கள் போல்தலை
யைப்பறித்தொரு பொய்த்தவம்
வேமவத்தைசெ லுத்திமெய்ப்பொடி
யட்டிவாய்ச கதிக்குநேர்
ஆமவர்க் கெளியேனலேன் திரு
ஆலவாய அரன் நிற்கவே.

10. தங்களுக்கும்அச் சாக்கியர்க்கும்
தரிப்பொணாதநற் சேவடி
எங்கள் நாயகன் ஏத்தொழிந்திடுக்
கேமடுத்தொரு பொய்த்தவம்
பொங்குநூல்வழி யன்றியேபுல
வோர்களைப் பழிக்கும் பொலா
அங்கதர்க்குஎளி யேனலேன்திரு
ஆலவாய அரன் நிற்கவே.

11. எக்கராம்அமண் கையருக்கு எளி
யேன்அலேன்திரு ஆலவாய்ச்
சொக்கன்என்னுள் இருக்கவே துளங்
கும்முடித் தென்னன் முன்னிவை
தக்கசீர்ப்புகலிக் குமன்தமிழ்
நாதன்ஞானசம் பந்தன்வாய்
ஒக்கவே உரை செய்தபத்தும்
உரைப்பவர்க்கு இடர் இல்லையே.

திருச்சிற்றம்பலம்

இதைக்கேட்டதும் சமணர்கள் பாண்டியனின் இடது பக்க உடலைத் தாம் தீர்ப்பதாகக் கூறிச் செயற்பட்டனர். இதனால் நோய் இருமடங்காகியது. நோயின் வெம்மை தாங்காத மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தரை நோக்கினான். திருஞானசம்பந்தர் ஆலவாய் அரனை வேண்டி "மந்திரமாவது நீறு" என்னும் தொடரில் பதிகம் பாடி திருநீற்றால் பாண்டியனின் வலது பக்க உடல் முழுவதும் பூசினார். வலது பக்க நோய் குணமடைந்தது. இடது பக்கம் மேலும் அதிகரித்தது. அச்சமயம் பாண்டியன் சமணர்களை விலகிச் செல்லுமாறு பணித்தான். சம்பந்தரையே இடப்பக்க உடலையும் குணமாக்குமாறு வேண்டினான். சம்பந்தர் உள்ளம் நெகிழ இறைவனை வேண்டி மீண்டும் திருநீறு கொண்டு மேனி முழுவதும் தடவினார். நோய் விலகியது கண்டதும் பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும் சம்பந்தரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி இன்புற்றனர். நோயினால் வாடிய மன்னன் இறையருளினால் தம்மைக் குணப்படுத்தியதை உணர்ந்ததும் படுக்கையிலிருந்து துள்ளி எழுந்தான். சம்பந்தரின் பாதங்களில் வீழ்ந்து வணங் கினான். மந்திரமாவது என்னும் பதிகம் 242 இரண்டாம் திருமுறை

திருவாலவாய் பண் - காந்தாரம்

01. மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

02. வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு வுண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே.

03. முத்தி தருவது நீறு முனிவர ணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவாலவாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. காணவினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவாலவாயான் திருநீறே.

05. பூசவினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக்கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவாலவாயான் திருநீறே.

06. அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானமளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவாலவாயான் திருநீறே.

07. எயிலது வட்டது நீறு விருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே.

08. இராவணன் மேலது நீறு வெண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவமறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யாலவாயான் திருநீறே.

09. மாலொ டயனறியாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம்மால வாயான் றிருநீறே.

10. குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங்கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருதவினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்துமால வாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ஆற்ற லடல்விடை யேறு மால்வாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயினதீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

திருச்சிற்றம்பலம்

இதனைக் கண்டஞ்சிய சமணர்கள் வலுவிழந்த நிலையில் வேறு வகையான வாதுக்கழைத்தனர். இதனை யாவரும் ஏற்கவும் அனல்வாதம் (தீ மூலம் உண்மை நிலை அறிதல்) புனல்வாதம் (நீர் மூலம் நிரூபிப்பது) முதலில் அனல்வாதம் ஆரம்பமானது. அனல் வாதத்தில் சமணர்களின் கோரிக்கைப்படி பெருந்தீ வளர்த்து அத்தீயினுள் திருஞானசம்பந்தரின் சைவநெறிக் கொள்கையின் பெருமையையும் சமணர்களின் சமண சமயக் கொள்கையையும் தனித்தனியே ஏட்டில் எழுதி அதனைத் தீயிலிடுவது இவற்றுள் நெருப்பில் எரியாது இருக்கிறதோ அந்த ஏட்டிற்குரியவர் வெற்றி பெற்றவராவர் என முடிவு செய்யப்பட்டது.

## அனல்வாதம்

யாவரும் ஏற்றுக் கொண்டபடி இருசமயத்தவரின் வாதம் நடைபெறுவதன் பேரில் அரசனின் முன்பாக ஏவலாளரின் உதவியால் விறகுகள் அடுக்கிப் பெருந்தீ வளர்க்கப்பட்டது. தீச் சுவாலை மேலோங்கிய வேளை திருஞானசம்பந்தர் தாம் இதுவரை பாடிய பாடல்கள் அடங்கிய கட்டுக்களை அவிழ்த்து "எங்கள் நாதனே பரம்பொருள்" என்று கூறிய வண்ணம் ஏடுகளைக் கட்டி கயிறு சார்த்தி ஏடுகளில் ஒன்றைத் தெரிவு செய்யும் முறையாக முதன் முதல் சம்பந்தர் அன்று ஆரம்பித்தார். (ஏட்டுக் கட்டடுக்கில் இறையருளை வேண்டி கயிற்றை சார்த்தவும் தெரிவாகும் ஏடு சித்திகளைக் கொடுக்கும். இவ்வழக்கம் நீடிய காலம் தொடர்கிறது. இறைவனே வேண்டியதைத் தெரிவு செய்தார் என்பது ஐதீகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பேரில் சம்பந்தர் கயிறு சார்த்தி எடுத்த ஏட்டில் “போகம் ஆர்த்த பூண் முலையாள்” என்னும் திருநள்ளாற்றுப் பதிகம் தேர்வானது. இப்பதிக ஏட்டினை எடுத்து இறைவன் இறைவியை வேண்டி தீயிலிடும் போது “தளிர் இள வளர் ஒளி” என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். நள்ளாறர் தம் நாமமே மிளிர் இள வளர்நெறி இடில் இவை பழுதில்லை மெய்மையே” என்று கூறித் தீயிலிட்டார். இப்பதிகத்தைப் பாடியதும் ஏடு இறைவன் இறைவியின் பசுமையான பேரருள் (வழமையாகக் காய்ந்த வெண் மஞ்சள் நிறமுடைய ஏடு தீயிலிட்ட போது இறையருளால்) இளந் தளிரின் பசுமை கொண்ட பிரகாசிக்கும் ஏடாக இருந்தது. சம்பந்தர் ஏற்கெனவே நெருப்பில் ஏடு தங்க வேண்டிய காலக்கெடுவரை காத்திருந்தே பசுமையான ஏட்டை எடுத்தார். இது சைவ சமயத்தின் பெருமையை உலகோர் யாவரும் அறியும் வண்ணம் எம் பெருமான் காட்டிய அற்புதமாகும். யாவரும் வியந்தனர். பாண்டிய மன்னனும் பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும் சம்பந்தரைப் போற்றி வணங்கினர்.

திருநள்ளாறு பண் : சாதாரி

திருச்சிற்றம்பலம்

1. தளிர்இள வளர்ஒளி தனதுஎழில் தருதிகழ் மலைமகள்
குளிர்இள வளர்ஒளி வனமுலை யிணையவை குலவலின்
நளிரிள வளர்ஒளி மருவுநள் ளாறர்தம் நாமமே
மிளர்இள வளர்எரி யிடில்இவை பழுதிலை மெய்ம்மையே

2. போதமர் தருபுரி குழல்எழில் மலைமகள் பூணணி
சீதம தணிதரு முகிழிள வனமுலை செறிதலின்
நாதம தெழில்உரு அனையநள் ளாறர்தம் நாமமே
மீதமது எரியினில் இடில்இவை பழுதிலை மெய்ம்மையே

3. இட்டுறு மணியணி யிணர்புணர் வளரொளி எழில்வடம்
கட்டுறு கதிரிள வனமுலை இணையொடு கலவலின்
நட்டுறு செறிவயல் மருவுநள் ளாறர்தம் நாமமே
இட்டுறும் எரியினில் இடில்இவை பழுதிலை மெய்ம்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மைச்சணி வரியரி நயனிதொல் மலைமகள் பயனுறு
கச்சணி கதிரிள வனமுலை யவையொடு கலவலின்
நச்சணி மிடறுடை அடிகள் நள்ளாறர்தம் நாமமே
மெச்சணி எரியினில் இடில்இவை பழுதிலை மெய்ம்மையே.

5. பண்ணியல் மலைமகள் கதிர்விடு பருபணி யணிநிறக்
கண்ணியல் கலசம தனமுலை யிணையொடு கலவலின்
நண்ணிய குளிர்புனல் புகுது நள்ளாறர்தம் நாமமே
விண்ணியல் எரியினில் இடில்இவை பழுதிலை மெய்ம்மையே

6. போதுறு புரிகுழல் மலைமகள் இளவளர் பொன்னணி
சூதுறு தளிர்நிற வனமுலை யவையொடு துதைதலின்
தாதுறு நிறமுடை யடிகள் நள்ளாறர்தம் நாமமே
மீதுறும் எரியினில் இடில்இவை பழுதிலை மெய்ம்மையே.

7. கார்மலி நெறிபுரி சுரிகுழல் மலைமகள் கவினுறு
சீர்மலி தருமணி யணிமுலை திகழ்வொடு செறிதலின்
தார்மலி நகுதலை யுடையநள் ளாறர்தம் நாமமே
ஏர்மலி யெரியினில் இடில்இவை பழுதிலை மெய்ம்மையே.

8. மன்னிய வளரொளி மலைமகள் தளிர்நிற மதமிகு
பொன்னியல் மணியணி கலசம தனமுலை புணர்தலின்
தன்னியல் தசமுகன் நெரியநள் ளாறர்தம் நாமமே
மின்னியல் எரியினில் இடில்இவை பழுதிலை மெய்ம்மையே.

9. கான்முக மயிலியல் மலைமகள் கதிர்விடு கனமிகு
பால்முகம் இயல்பணை இணைமுலை துணையொடு பயில்தலின்
நான்முகன் அரிஅறிவரிய நள்ளாறர்தம் நாமமே
மேன்முக எரியினில் இடில்இவை பழுதிலை மெய்ம்மையே

10. அத்திர நயனிதொல் மலைமகள் பயனுறும் அதிசயம்
சித்திர மணியணி திகழ்முலை யிணையொடு செறிதலின்
புத்தரொ டுஅமணர்பொய் பெயருநள் ளாறர்தம் நாமமே
மெய்த்திரள் எரியினில் இடில்இவை பழுதிலை மெய்ம்மையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. சிற்றிடை அரிவைதன் வனமுலை இணையொடு செறிதரும்
நற்றிறம் உறுகழு மலநகர் ஞானசம்பந்தன்
கொற்றவன் எதிரிடை எரியினில் இடஇவை கூறிய
சொல்தெரி ஒருபதம் அறிபவர் துயரிலர் தூயரே.

திருச்சிற்றம்பலம்

அடுத்து சமணர்கள் தமது சமய உண்மைகளை ஏட்டி லெழுதித் தீயிலிடும் போது இந்த ஏடு தீயில் உய்யுமோ என்ற கவலையுடன் இட்டனர். இவ்வேடு தீயிலிடும் பஞ்சு போல சிறு நொடியில் எரிந்து பொசுங்கியது. யாவரும் நோக்கும் வண்ணம் யாவும் எரிந்து சாம்பலானது. மன்னன் சமணர்களின் தோல்வி யைக் கண்டு ஏளனஞ் செய்தான். மேலும் சமணர்கள் தோற்றதை உறுதி செய்து இவ்விடம் விட்டு ஓடிச் செல்லுங்கள் என்றான்.

அச்சமயம் நாங்கள் முன்கூறிய படி இருவாதங்கள் (அனல்வாதம், புனல்வாதம்) செய்வதாகக் கேட்டிருந்தோம். அடுத்த புனல் வாதத்தையும் நோக்குவோம் என்றனர். சம்பந்தர் அதற்கும் இசைவு தந்தார். அச்சமயம் சமணர்கள் புனல் வாதத்திலும் தோற்றால் என்ன தண்டனை எனக் குலச்சிறையார் கேட்டார். தாம் புனல் வாதத்தில் வெல்லும் ஆவல் கொண்டிருந்த தால் நாம் தோற்றால் மன்னனே கழுவேற்றட்டும் என்றனர். சமணர்களின் கோரிக்கைப்படி புனல் வாதம் தொடங்க இருந்தது.

## புனல்வாதம்

அவ்விடத்திடத்திலிருந்து சற்றுத் தூரத்திலிருந்த வைகை நதியில் புனல் வாதம் நடைபெற இருந்ததால் அனைவரும் அங்கு செல்ல ஏற்பாடானது. திருஞானசம்பந்தர் முத்துச் சிவிகையில் அடியார்கள் புடை சூழ முன்னே சென்றார். மந்திரி குலச்சிறை யாரைத் தொடர்ந்து பாண்டியனும் தத்தமது குதிரைகளிற் சென்றனர். பாண்டிமாதேவியும் தோழியர் புடைசூழப் பல்லக்கில் சென்றார். இவ்வாறு யாவரும் வைகையாற்றங்கரையை அடைந் ததும் போட்டி ஆரம்பமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டி விதிகளுக்கமைய இருபகுதியினரும் தத்தமது சமய உண்மைகளை ஏட்டில் எழுதி ஆற்றில் இட வேண்டும். எவரது ஏடு ஆற்றுடன் அடித்துச் செல்லாது எதிர் நீச்சலடித்து எதிரே செல் கிறதோ அவர்கள் வெற்றிக்குரியவராவார். இதற்கமைவாகச் சமணர்கள் தமது சமயத்தின் மூல மந்திரங்களான "அத்தி நாத்தி" (அத்தி - உள்ளது, நாத்தி - இல்லாதது) என்ற பதங்களைத் தமது நீதி நூல்களிலிருந்து எடுத்து எழுதி ஏட்டை வைகை நதியில் இட்டனர். அந்த ஏடானது சில நொடிகளில் நூறுவிற்கிடை (ஒரு பொருளின் கண்ணிற்குத் தெரியாத தூரம்) சென்று மறைந்தது இதனால் தோற்ற அவமானம் தென்பட்டாலும் அதை மறைப் பவரைப் போலச் சம்பந்தரை நோக்கி உமது ஏட்டையும் நீரில் இடும் எனக் கூறினர்.

திருஞானசம்பந்தர் இறைவனின் பெருங்கருணையை வேண்டிய வண்ணம் "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்னும் திருப்பாடலை ஏட்டில் எழுதி வைகையிலிட்டார். இறை வனின் பேரருளால் அவ்வேடு எதிர் நீச்சலடித்து வேகமாகச் சென்றது. இப்பாடலில் வேந்தனும் ஓங்குக என்றெழுதப் பட்டிருந்தது. இதனால் நீரின் பாய்ச்சலுக்கு எதிர்நீச்சலடித்து ஏடு முன்னேறவும் ஏற்கெனவே முதுகு கூனாக இருந்த பாண்டியனின் முதுகும் நிமிர்ந்து ஓங்கியது. அநபாய சோழனின் செங்கோல் ஓங்கியது போலவே கூன்பாண்டியனின் கூன்முதுகும் ஓங்கியதால் மன்னன் திருஞானசம்பந்தரின் பாடலையும் தெய்வீக அற்புதத்தை யும் கண்டு களிபேருவகையடைந்தான்.

பொது திருப்பதிகம் பண் - கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

1. வாழ்க அந்தணர் வானர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதுஎல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அரிய காட்சிய ராய்த்தமது அங்கைசேர்
எரியர் ஏறுகந்து ஏறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கையர் ஆயினும்
பெரியர் ஆர்அறிவார் அவர் பெற்றியே.

3. வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தியா எழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யார்அவர் எவ்வகை யார்கொலோ

4. ஆட்பால் அவர்க்குஅருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில்அள வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையும் குறுகாமை எந்தை
தாள்பால் வணங்கித் தலைநின்று இவைகேட்க தக்கார்.

5. ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள்சோதி
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம்பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்துசார் மின்களே.

6. ஆடும் எனவும் அருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும் எனவும் புகழல்லது பாவம்நீங்கக்
கேடும் பிறப்பும் மறுக்கும் எனக்கேட்டீ ராகில்
நாடும் திறத்தார்க்கு அருளல்லது நாட்ட லாமே.

7. கடி சேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படி சேர்ந்த பால்கொண்டு அங்குஆட்டிடத் தாதைபண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண்மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக்கேட்டும் அன்றே.

8. வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பாராழி வட்டம் பகையால் நலிந்தாட்ட வாடிப்
பேராழி யானதுஇடர் கண்டு அருள்செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடம் கொண்டவர்க்குப்
போராழி ஈந்த புகழும் புகழுற்ற தன்றே.

10. மாலா யவனும் மறைவல்ல நான்முகனும்
பாலாய தேவர்பகரில் அமுதூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க்கு அரிதாய் எழுந்த
ஆலாலம் உண்டு அங்கு அமரர்க்கு அருள் செய்தாமே.

11. அற்றன்றி அந்தண் மதுரைத் தொகையாக்கி னானும்
தெற்றென்று தெய்வம் தெளியார் கரைக்கு ஓலை தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வில் ஊரவும் பண்பு நோக்கில்
பற்றொன்று உயர்த்த பெருமான் பெருமானும் அன்றே.

12. நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தனல்ல
எல்லார்க ளும்பரவும் ஈசனை யேத்துபாடல்
பல்லார்க ளும் மதிக்கப் பாசுரம் சொன்ன பத்தும்
வல்லார்கள் வானோர்உல காளவும் வல்லர் அன்றே.

திருச்சிற்றம்பலம்

வைகை நதியில் எதிர் நீச்சலடித்த ஏட்டினை எடுப்பதற்காகக் குலச்சிறையார் தமது குதிரை மீது விரைந்தார். பிடிக்க முடியாத நிலையைக் கண்ட சம்பந்தர் "வன்னியும் மத்தமும்" என்ற தொடரில் அமைந்த திருவேடகத் திருப்பதிகத்தைப் பாடி யருளினார். ஏடு ஆற்றிடையே ஓரமாக ஒதுங்கியது. குலச்சிறையார் ஆற்றில் இறங்கி அத்திருவேட்டினை எடுத்து இறைவனைத் துதித்த வண்ணம் தமது தலைமேல் வைத்து வணங்கினார். தம்பணியாகச் சென்றவர் சிவசிந்தனையுடன் சம்பந்தரிடம் திருவேட்டினைக் கையளித்தார். சம்பந்தர் அத்திருவேட்டினை யாவரிடமும் காண் பித்துச் சைவசமயப் பெருமையை வியந்தார். யாவரும் சிவஞானக் குழந்தையைப் போற்றினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வன்னியு மத்தமு மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமலர் அவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலர் ஏடகத்து ஒருவனே.

2. கொடிநெடு மாளிகை கோபுரம் குளிர்மதி
வடிவுற அமைதர மருவிய ஏடகத்து
அடிகளை அடிபணிந்து அரற்றுமின் அன்பினால்
இடிபடும் வினைகள்போய் இல்லைய தாகுமே.

3. குண்டலம் திகழ்தரு காதுடைக் குழகனை
வண்டலம் பும்மலர்க் கொன்றைவான் மதியணி
செண்டலம் பும்விடைச் சேடனூர் ஏடகம்
கண்டுகை தொழுதலும் கவலைநோய் கழலுமே.

4. ஏலமார் தருகுழல் ஏழையோடு எழில்பெறும்
கோலமார் தருவிடைக் குழகனார் உறைவிடம்
சாலமா தவிகளும் சந்தனம் சண்பகம்
சீலமார் ஏடகம் சேர்தலாம் செல்வமே.

5. வரியணி நயனிநன் மலைமகள் மறுகிடக்
கரியினை யுரிசெய்த கறையணி மிடறினன்
பெரியவன் பெண்ணினோடு ஆண்ஆலி யாகிய
எரியவன் உறைவிடம் ஏடகக்கோயிலே

6. பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவிய ஏடகத்து
ஐயனை அடிபணிந்து அரற்றுமின் அடர்தரும்
வெய்யவன் பிணிகெட வீடெளி தாகுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தடவரை எடுத்தவன் தருக்கிறத் தோள்அடர்
படவிரல் ஊன்றியே பரிந்தவற்கு அருள்செய்தான்
மடவரல் எருக்கொடு வன்னியும் மத்தமும்
இடமுடைச் சடையினன் ஏடகத்து இறைவனே.

8. பொன்னுமா மணிகளும் பொருதுரைச் சந்தகில்
தன்னுளார் வைகையின் கரைதனில் சமைவுற
அன்னமா மயனுமால் அடிமுடி தேடியும்
இன்னவாறு எனவொணான் ஏடகத்து ஒருவனே.

9. குண்டிகைக் கையினர் குணமலாத் தேரர்கள்
பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள் பணிகிலர்
வண்டிரைக் கும்மலர் கொன்றையும் வன்னியும்
இண்டைசேர்க் குஞ்சடை ஏடகத்து எந்தையே.

10. கோடுசந் தனம்அகில் கொண்டிழி வைகைநீர்
ஏடுசென்று அணைதரும் ஏடகத்து ஒருவனை
நாடுதென் புகலியுள் ஞானசம் பந்தன்
பாடல்பத்து இவை வல்லார்க்கு இல்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்.

## திருநீறணிந்த பாண்டியன்

சமணசமயத்தின் மாயையால் சம்பந்தர் தங்கிய மடத்திற்குத் தீயிட ஆணையிட்ட பாண்டியன் தமது வெப்பு நோயைத் தீர்த்த சம்பந்தர் சைவசமய ஆற்றலினால் இறையருட் சித்தப்படி சமணசமயத்தின் போலியையும் சைவசமயத்தின் சிறப்பையும் உணர்ந்தான். ஏற்கெனவே தாம் புனல் வாதத்தில் தோற்றால் தம்மைக் கழுவேற்றுமாறு சமணர்கள் கூறியதால் பாண்டிய நாட்டிலுள்ள அனைத்து எண்ணாயிரம் சமணர்களையும் கழுவேற்றுவித்தான். அச்சமயம் திருஞானசம்பந்தர் மன்னனுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநீறு வழங்கினார். மன்னன் உள்ளம் நிறைந்த சிவ சிந்தனையுடன் திருநீற்றை வாங்கித் தனது அங்கமெல்லாம் அணிந்து திருநீற்றின் சிவப்பொலிவுடன் பிரகாசித்தான். உட னிருந்த பாண்டிமாதேவியும் மந்திரி குலச்சிறையாரும் சம்பந்தர் தந்த திருநீற்றை அணிந்து சைவசமயத்தின் பெருமையை நிலை நாட்டினர். பார் போற்றும் சைவசமயப் புகழை மெச்சிய, ஏற்கெனவே சமண சமயப்படு குழியில் வீழ்ந்த, பாண்டிய மக்கள் யாவரும் இறையருளை வியந்து திருநீற்றின் பெருமையை உலகறியச் செய்து சைவசமயத்தின் அற்புதத்தை நிலை நாட்டினர். அன்று முதல் பிற சமயங்கள் அருகவும் சைவசமயம் யாவராலும் போற்றப்படும் பெருமையை தமிழகத்தில் நிலை நிறுத்திய பெருமை இறைவன் இறைவியால் சிவஞானப் பாலூட்டிப் பெற்ற திருஞானசம்பந்தப் பெருமானுக்கே சமர்ப்பணம்.

பாண்டிய மன்னன், பாண்டிமாதேவி, குலச்சிறையார் யாவரும் வைகை நதிக்கு வந்த ஒழுங்கின் படி பின் தொடர திருஞானசம்பந்தர் தமது சிவிகையிலேறி ஆலவாய் அரனில் ஆலயத்தை வந்தடைந்தனர். சம்பந்தர் சிவிகையிலிருந்து இறங்கி ஆலயத்துட்சென்று அரனை வணங்கியவாறு “வீடலாய வாயிலாய்” என்ற தொடரில் பதிகம் பாடி இன்புற்றார். பாண்டிய மன்னன் தான் சமணர்களின் மாய வலைக்குள் சிக்குண்டு தவித்த போது திருஞானசம்பந்தரை இங்கு வரச் செய்து தன்னைக் கொடிய நோயிலிருந்து காப்பாற்ற ஆட்கொண்டதை வியந்தும் தமது முன்செய்த தீவினையை மன்னித்து அருளுமாறு வேண்டித் துதித்தான்.

யாவரும் இறையருளை வியந்தனர். திருஞானசம்பந்தர் தமது அடியார்களுடன் தமது திருமடத்தை நாடினார். மன்னனும் பாண்டிமாதேவியும் மந்திரியான குலச்சிறையாரும் ஞான சம்பந்தரை வணங்கி அவரைத் திருமடத்திற்கு வழியனுப்பியதும் தத்தமது வதிவிடஞ் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தர் இறைவனின் திருவுளப்படி அதே திருமடத்தில் சிலகாலம் தங்கியிருந்தார். சைவசமயம் நலிவுறா வண்ணம் சமணர்களிடமிருந்து காப்பாற்றிச் சைவசமயத்தை நிலைக்கச் செய்து முன்னர் சமண சமயப் படுகுழியில் ஆழ்ந்தோரைக் கரை சேர்த்துத் திருநீறணியச் செய்து சைவத்தை நிலைநாட்ட அருளிய சிவபிரானைத் துதித்த வண்ணம் இன் புற்றார். இத்திருமடத்தில் தங்கியிருந்த காலத்தில் சைவநெறியை மேலும் துலக்க வல்ல பல திருப்பதிகங்களைப் பாடியருளினார்.

## சமணப்பள்ளிகள் அழித்தல்

இச்சமகாலத்தில் மதுரையில் வாழ்ந்த சிவபக்தர்கள் சமணர் கள் தங்கியிருந்த பாழிகளையும் அவர்களின் தெய்வப் பள்ளி களையும் அடி அத்திவாரத்துடன் அகழ்ந்து அப்புறப்படுத்தி விட்டு அவ்விடத்தைத் தூய்மையாக்கினர். மேலும் ஆங்காங்கே சிவ சிந்தனையை ஊட்டும் சிவசின்னங்களை நிலை நிறுத்தினர். சமணப் படுகுழியில் ஆழ்ந்து பாரிய நோயால் தாக்கப்பட்டு வேதனையுற்ற கூன்பாண்டியன் தமது நோய் மாறியும், கூன்முதுகு நேராக நிமிர்ந்தும் உய்த்ததால் தினமும் பாண்டிமாதேவியுடனும் குலச்சிறையாருடனும் வந்து சம்பந்தரைத் தரிசித்து வேண்டிய பணி விடைகள் செய்வதை நியதியாகக் கொண்டான்.

## சிவபாதவிருதயரின் வருகையும் தோணியப்பரைப் பாடியதும்

நலிவுற்ற சைவசமயம் மீண்டெழும் அரிய நோக்கில் இறைவனை வேண்டித் தவமிருந்து பெற்ற ஞானக்குழந்தையின் தந்தையான சிவபாதவிருதயர் தமது மகன் சமய விருத்திக்காக மதுரைக்கு வந்து நீடிய நாட்கள் தங்கியதை அறிந்தார். தாம் இறைவனிடம் கேட்டிருந்த படி சமணம் அழியவும் திருநீற்றின் வெண்ணொளி பிரகாசிக்கும் சைவம் மலரவும் ஆண்டி முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் வரை சிவனடியார்களாகத் திகழும் மதுரையை அடைந் தார். சைவம் வளர நல்லருள் புரிந்து யாவரையும் அருளாட்சி செய்யும் திருஆலவாயிலுறைந்த மதுரைச் சொக்கநாதப் பெரு மானையும் கண்ணழகி மீனாட்சி அம்பாளையும் உளமார வழிபட்டு இன்புற்றார்.

வெளியே வந்ததும் திருஞானசம்பந்தர் அடியார்கள் புடை சூழத் தங்கியுள்ள திருமடத்தைச் சிவபக்தர்களின் துணையுடன் கேட்டறிந்தார். நல்லதொரு பாற்பசு தன் கன்றினைக் கண்டதும் நாடி ஓடுவது போல மகனை நாடிச் சென்றார். தந்தையும் மகனும் ஒருவரை ஒருவர் கண்டதும் சம்பந்தர் சீர்காழிப்பதியிலுறை தோணியப்பரின் நினைவை எடுத்துரைத்தார். தம்மை அறியாப் பருவத்தில் ஆட்கொண்ட எம்பெருமானையும் எம்பெருமாட்டி யையும் அவர்களின் பெருங்கருணையையும் போற்றி "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடி மகிழ்ந்தார்.

திருக்கழுமலம் பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

1. மண்ணில்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லைக்
கண்ணின்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

2. போதையார் பொற்கிண்ணத்து அடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தொண்டணை செய்தொழில் துயரறுத்து உய்யலாம்
வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்துணை நெற்றியான்கழுமல வளநகர்ப்
பெண்துணை யாகஓர் பெருந்தகை இருந்ததே.

4. அயர்வுளோம் என்றுநீ அசைவுஒழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை யவளொடும்
கயல்வயல் குதிகொளும் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை இருந்ததே.

5. அடைவிலோம் என்றுநீ அயர்வுஒழி நெஞ்சமே
விடையமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழும்
கடையுயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடைநடை யவளொடும் பெருந்தகை இருந்ததே.

6. மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேரல்குல திருந்திழை யவளொடும்
பெற்றெனை யாளுடைப் பெருந்தகை இருந்ததே.

7. குறைவளை வதுமொழி குறைவொழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை யவளொடும்
கறைவளர் பொழிவணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே.

8. அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
கருக்குவாள் அருள்செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்குநீ ரவளொடும் பெருந்தகை இருந்ததே.

9. நெடியவன் பிரமனும் நினைப்பரி தாய்அவர்
அடியொடு முடியறி யாஅழல் உருவினன்
கடிகமழ் பொழில்அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை யவளொடும் பெருந்தகை இருந்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. தாருறு தட்டுடைச் சமணர்சாக் கியர்கள்தம்
ஆருறு சொற்களைந்து அடியிணை அடைந்துய்மின்
காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்
பேரறத் தாளொடும் பெருந்தகை இருந்ததே.

11. கருந்தடந் தேன் மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையொடு இருந்தஎம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவார் அவர்கள்போய் விண்ணுலகு ஆள்வரே.

திருச்சிற்றம்பலம்

சனகர் முதலானவர்களுக்கு அறப்பொருளை விளக்கி உரைத்தவரும் அகப்பொருள் இலக்கணத்தை முதற்சங்கப் புலவர்களுக்கு அருளியவருமான ஆலவாய் சொக்கநாதப் பெருமானையும் பெருமாட்டியையும் பலமுறை வீழ்ந்து வணங்கிய திருஞானசம்பந்தர் மதுரையிலிருந்து சிவாலய தரிசனை உலா விற்குச் செல்ல முற்பட்டார். அச்சமயம் மன்னனும் பாண்டிமா தேவியும், குலச்சிறையாரும் சம்பந்தரைப் பிரிந்திருக்க முடியாத நிலையில் பின் தொடர்ந்தனர். தொடர்ந்து செல்ல முடியாதவாறு பிரிவை ஆற்றாத கவலையால் கண்ணீர் மல்க, கால்கள் தடுமாறு, ஊன் உருக, புத்திபேதலிக்க செய்வதறியாது மயங்கி வீழ்ந்தனர். அச்சமயம் ஞானசம்பந்தர் அவர்களைத் தேற்றினார். நான் உங்கள் பிரிவை விரும்பவில்லை உங்கள் பாண்டிய நாட்டிலுள்ள திருத்தல யாத்திரையில் கலந்து கொள்ளுங்கள் என அருளினார். மன்னனும், தேவியும் குலச்சிறையாரும் தமது உறவுகளும் படைகளும் புடைசூழ சம்பந்தருடன் கூடச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாண்டி நாட்டுச் சிவாலய தரிசனம்

சைவம் வளர்க்கும் சிவப்பணிக்கென்றே அவதரித்து அறியாப் பருவத்தே இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு சிவப் பணியேற்றவர். திருஞானசம்பந்தர் தாம் அவதரித்த சோழவள நாட்டில் சிவப்பணி செய்தாலும் தமது அவதாரத்தின் நோக்கமாக நலிவுற்ற சைவ சமயத்தைப் பிற சமய இருளிலிருந்து ஓங்கி வளர்க்கவென பாண்டி நாட்டின் மதுரையை நாடியவர். இவரின் பணி துலக்கவென மாறாத சைவப் பற்றுதியுடன் கணவனான அரசன் சமணப் படுகுழியில் வீழ்ந்த போதும் சிவநெறியையே சிந்தித்து சித்தத்தைச் சிவன்பால் வைத்து தமது உயிருக்கு உயிரான கணவனையும் நாட்டு மக்களையும் துயரக்கடலிலிருந்து மீட்கலாம் எனத் திடசங்கற்பம் பூண்டவர் பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசியார். இவருக்கு உறுதுணையாகப் பாண்டி நாட்டு மந்திரி குலச்சிறையாரும் நிதானபுத்தியுடன் சைவம் மலர வேண்டு மென்ற அவாக்கொண்டு பாண்டிமாதேவியின் எண்ணக்கருவை வளர்க்க உதவியவர்.

இறையருளும் ஞானசம்பந்தரின் அவதார நோக்கமும் சிவ சிந்தனையைச் சிக்கெனப் பிடித்த அன்பர்களின் வேண்டுதலும் கைகூடியது. திருஞானசம்பந்தரின் சிவப்பணி பாண்டிய மண்ணில் முற்று முழுதாக மதுரையில் நிறைவடைந்ததும், தம் பணியை நிறைவு செய்ய அருளிய சொக்கநாதப் பெருமானிடம் விடை பெற்றதும் சம்பந்தர் முதலாவது சைவப்பணிக்கான யாத்திரையை மேற்கொண்டார். பாண்டிய மன்னன் பாண்டிமாதேவி, குலச்சிறை யார் மற்றும் சிவனடியார்கள் யாவரும் உடன்வர முதலில் திருப் பரங்குன்றத்தை அடைந்தனர். திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளி யுள்ள இறைவனை யாவரும் உளமார வழிபட்டனர். தொடர்ந்து பாண்டி நாட்டிலுள்ள அத்தனை சிவாலயங்களையும் தரிசித்த தொடரில் இராமேஸ்வரத்தை வந்தடைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமேஸ்வரத்தில் இராமபிரான் இலங்கையின் மன்னன் இராவணனையும் நாட்டையும் அழித்த பாவம் போக்கவென்று நிறுவிய இத்தலத்தில் இதுவரை தாம் செய்த பழியைத் தீர்க்க இப்பதிக்கு வரும் யாவரும் தம்மாலியன்ற தானதருமஞ் செய்யும் நியதியுண்டு. இதற்கமைவாக மன்னனும் தேவியும் இத்தலத்திற் கூடியுள்ள யாவருக்கும் வேண்டியன தந்து சிறப்பித்தனர். தொடர்ந்து யாவரும் கடற்கரை நகரில் தங்கியிருந்தனர்.

## இலங்கையின் புராதன சிவாலயங்கள் பாடல் பெற்றது

திருஞானசம்பந்தர் தமது சைவசமய மறுமலர்ச்சிப் பணிக் காகப் பாண்டிய நாட்டிற்கு வந்து மதுரையில் சமணர்களையும் சமணப்பள்ளிகள் முதலான சமண ஞாபகச் சின்னங்களையும் அழித்தவர். தமது அவதாரத்தின் நோக்கமாகப் பாண்டிய நாட்டில் யாவரையும் சைவசமயம் நிலைபெறச் செய்து யாவருக்கும் திருநீறணிவித்துச் சைவத்தை நிலை நாட்டியவர்.

பாண்டிமாதேவி மற்றும் குலச்சிறையாரின் வேண்டுதலுக் காகச் சமணர்களைத் தருக்கில் வென்று நோயுற்ற பாண்டியனின் நோயையும் ஏற்கெனவே இருந்த முதுகின் கூரையும் திருநீற்றின் பெருமையுடன் தமது திருவருட் பாடலால் குணமாக்கினார். இதனால் மன்னனும் தேவியும் மந்திரியும் சைவசமய பக்தி காரணமாகத் திருஞானசம்பந்தரை அன்பினால் சிக்கெனப் பிடித்தனர். அவரை விட்டுப் பிரியும் நிலையில் மயங்கி வீழ்ந்தனர். அவர்களை அரவணைப்பதன் பேரில் அவர்களுக்கு ஆதரவாகப் பாண்டிய நாட்டுச் சிவாலயங்களிலும் யாவரும் ஒன்றிணைந்து தரிசித்தனர்.

இதே சுற்றுலா வரிசையில் நிறைவாக இராமேஸ்வரத்தில் தரிசித்தனர். பூர்த்தியான தரிசனை மையமானதால் யாவரும் இராமேஸ்வரக் கடற்கரையோரம் சிவ சிந்தனையில் மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சமயம் திருஞானசம்பந்தரின் திருநோக்கும் ஈழ மக்களின் முற்தேட்டமும் எம்மக்களின் சைவபக்திக்கு வழிகாட்டும் இறை யருளும், ஈழநாட்டின் புராதன சிவாலயங்களான திருக் கோணேஸ் வரம், மாதோட்டத்துத் திருக்கேதீஸ்வரம் ஆகிய திருத்தலங்கள் திருஞானசம்பந்தரின் திருவுள்ளத்தில் பதிந்தன. தமது சைவப் பணியில் பாண்டிய மன்னரைப் பிரியாது நிலை கொண்ட அன்பு போல மொழியாய் சைவசமயத்தால் பிரிக்க முடியாத தொப்புள் கொடி உறவுடைய ஈழ மக்களின் புராதன சிவாலயங்களைத் தமது ஞான உணர்வாய் நினைந்து இவ்விரு ஆலயங்களின் சகல சிறப்புக்களையும் இறைவன் இறைவியின் அருட்பெருமையைத் தமது மழலை மொழிப் பாடலில் பாடி மகிழ்ந்தார். அப்பெருமை யால் இவ்விரு ஆலயங்களும் சைவ சமயத்தின் பெருமையை நிலை நாட்டுகின்றன. திருகோணமலையின் திருக்கோணேஸ்வரப் பெருமான் மீது பாடிய பாடல் பதிகம்

திருகோணமலை பண் : புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

1. நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீறு அணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பரும் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

2. கடிதென வந்த கரிதனை உரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநு தலவளொடும் உடனாய்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலம் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந் தாரே.

3. பனித்து இளம் திங்கள் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளம் துவர்வாய்க் காரி கைபாக
மாகமுன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபேர் உருவ விழித்தழல் நாகம்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

4. பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன்தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றும் செழுங்கடல் தரளம்
செம்பொனும் இப்பியும் சுமந்து
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

5. தாயினும் நல்ல தலைவர்என்று அடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றுஅகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்த வற்கு அருளும்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

7. எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வம் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

8. அருவரா தொருகை வெண்டலை யேந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம்ஒள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

9. நின்றுணும் சமணும் இருந்துணும் தேரும்
நெறியலா தனபுறம் கூற
வென்று நஞ்சு உண்ணும் பரிசினர் ஒருபால்
மெல்லிய லொடும்உட னாகித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்றும்ஒண் பௌவ மவ்வலும் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றும்ஒண் கானல் வாசம்வந்து உலவும்
கோணமா மலையமர்ந் தாரே.

10. குற்றமிலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமும் ஆகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே

திருச்சிற்றம்பலம்

திருக்கேதீச்சரம் பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

01. விருதுகுன்றமா மேருவினாணர வாவனலெரியம்பாப்
பொருதுமூ வெயில் செற்றவன் பற்றி நின்றுறை பதியெந்நாளும்
கருதுகின்றவூர் கனைகடற்கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங்கை தொழக்கடுவினை யடையாவே.

02. பாடல்வீணையர் பலபலசரிதைய ரெருதுகைத்தரு நட்டம்
ஆடல்பேணுவ ரமரர்கள் வேண்ட நஞ்சுண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது விருங்கடற் கரையினி லெழிறிகழ் மாதோட்டம்
கேடிலாதகே தீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே.

03. பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ்சடையின ரறை கழல்சிலம் பார்க்கச்
சுண்ணமாதரித் தாடுவர்பாடுவ ரகந்தொறுமிடு பிச்சைக்
குண்ணலாவதோ ரிச்சை யினுழல்பவ ருயர்தரு மாதோட்டத்
தண்ணனண்ணுகே தீச்சரமடைபவர்க் கருவினை யடையாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. பொடிகொண் மேனியர் புதிய தளரையினர் விரிதரு கரத்தேத்தும்
வடிகொண் மூவிலை வேலினர் நூலினர்மறி கடன் மாதோட்டத்
தடிகளாதரித் திருந்த கேதீச்சரம் பரிந்த சிந்ததையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார் தம்மேல் மொய்தெழும் வினை
போமே

05. நல்லராற்றவும் ஞானநன்குடையர்தம் மடைந்தவர்க்கருளீய
வல்லர்பார்மிசை வான்பிறப்பிலர் மலிகடன் மாதோட்டத்
தெல்லையில்புக ழெந்தைகேதீச்சர மிராப்பகனினைந்தேத்தி
அல்லலாசறுத் தரனடியிணை தொழு மன்பராமடியாரே.

06. பேழை வார்சடைப் பெருந்திருமகடனை பொருந்த வைத்தொரு பாக
மாழையங்கயற் கண்ணி பாலருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழையம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீண் மார்பர்கே தீச்சரம் பிரியாரே.

07. பண்டுநால்வருக் கறமுரைத்த ருளிப்பல் லுலகினிலுயிர் வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங்கைதொழக் காதலித்துறை கோயில்
வண்டுபண் செயுமாமலர்ப் பொழின்மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய்யவருள் செய்கேதீச்சரமதுதானே.

08. தென்னிலங்கையர் குலபதிமலை நலிந்தெடுத்தவள்முடி திண்டோள்
தன்னலங்கெட வடர்த்தவர்க்கருள் செய்த தலைவனார் கடல்வாயப்
பொன்னிலங்கிய முத்துமாமணிகளும் பொருந்திய மாதோட்டத்
துன்னியன்பொடு மடியவரிறைஞ்சு கேதீச்சரத்துள்ளாரே.

09. பூவுளானுமப் பொருகடல் வண்ணனும் புவியிடந்தெழுந்தோடி
மேவிநாடிநுன் னடியிணை காண்கிலா வித்தக மென்னாகும்
மாவும்பூகமுங் கதலியு நெருங்குமாதோட்ட நன்னகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகேதீச்சரத் திருந்தவெம்பெருமானே.

10. புத்தராய்ச்சில புனைதுகிலுடையவர் புறனுரைச்சமணாதர்
எத்தராகிநின் றுண்பவரியம்பிய வேழைமைகேளேன்மின்
மத்த யானையை மறுகிட யுரிசெய்து போர்த்தவர் மாதோட்டத்
தத்தர்மன்னுபா லாவியின் கரையிற் கேதீச்சர மடைமின்னே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. மாடலொமணமுரசெனக் கடலின தொலிகவர் மாதோட்டத்
தாடலேறுடை அண்ணல் கேதீச்சரத்த டிகளை யணிகாழி
நாடுளார்க்கிறை ஞானசம்பந்தன்சொ னவின்றெழு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பக்தர்கள் பரகதி பெறலாமே.

திருச்சிற்றம்பலம்

## திருக்கொள்ளம் புதூர் சிவாலய தரிசனையில் பாடல் பாட ஓடம் சென்றது

திருஞானசம்பந்தர் திருக்கொள்ளம் பூதூர் தரிசனைக்காகச் செல்ல முற்பட்டார். குறுக்கே பாய்ந்த முள்ளிவாய்க்கரையில் ஆற்றில் வெள்ளப் பெருக்குக் காரணமான ஓடக்காரர் ஓடங்களைக் கரையிற் கட்டிவிட்டுச் சென்றனர். திருஞானசம்பந்தர் சிவாலய தரிசனஞ் செய்ய முன் வந்தார். ஓடக்காரர் இல்லாததால் தாமே ஓடங்களின் கட்டை அவிழ்த்து தமது தொண்டர்களை ஓடத்தில் ஏற வைத்தார். அவ்வோடத்தில் தாமும் ஏறியதும் "கொட்டமே கமளும்" என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். சம்பந்தர் பெருமானின் நாவினால் ஓதப்பெற்ற பாடல் ஓடத்தை ஓட்டவும் இறையருளின் அற்புதம் சித்தியானது. ஓடக்காரரில்லாமல் சம்பந்தரின் பாடலின் மகிமையால் ஓடம் தன் போக்கில் ஓடி மறுகரையை அடைந்தது. யாவரும் அக்கரையிலுள்ள இறைவனை வழிபட்டனர்.

கொள்ளம்பூதூர் பண் - காந்தாரபஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

1. கொட்டமேகமழும் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கோட்ட கக்கழனிக் கொள்ளம் பூதூர்
நாட்ட கத்துறை நம்பனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

3. குலையினார் தெங்குசூழ் கொள்ளம்பூதூர்
விலையின் ஆட்கொண்ட விகிர்தனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

4. குவளை கண்மலரும் கொள்ளம் பூதூர்த்
தவள நீறணி தலைவனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

5. கொன்றை பொன்சொரியும் கொள்ளம் பூதூர்
நின்ற புன்சடை நிமலனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

6. ஓடம்வந் தணையும் கொள்ளம் பூதூர்
ஆடல் பேணிய அடிகளை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

7. ஆறுவந்து அணையும் கொள்ளம் பூதூர்
ஏறு தாங்கிய இறைவனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

8. குரக்கினம் பயிலும் கொள்ளம் பூதூர்
அரக்கனைச் செற்ற ஆதியை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. பருவரால் உகளும் கொள்ளம் பூதூர்
இருவர் காண்பரி யான்கழல் யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

10. நீரக் கழனிக் கொள்ளம் பூதூர்
தேரமண் செற்ற செல்வனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

11. கொன்றை சேர்சடையான் கொள்ளம் பூதூர்
நன்று காழியுள் ஞானசம்பந்தன்
இன்று சொல் மாலை கொண்டு எந்தவல்லார் போய்
என்றும் வானவ ரோடுஇருப் பாரே.

திருச்சிற்றம்பலம

## போதிமங்கையில் புத்தநந்தியின் தலையில் இடி இடிக்கச் செய்தது

திருஞானசம்பந்தர் தமது சிவாலய தரிசனைக்காகப் போதி மங்கை என்னும் ஊரால் செல்லும் போது தொண்டர்களின் ஆரவாரமும் தமது பாடலுக்குரிய பல்லின ஊது கருவிகளும் சூழப்பேரிரைச்சலுடன் சென்றனர். அவ்வூரிலுள்ள சைவ மக்களும் சேர்ந்து சைவப் பெருமையை ஆரவாரத்துடன் நிலைநாட்டினர். இதனைக்கேட்ட புத்த மதத்தினர் புத்த நந்தி என்பவனின் தலைமையிற் சென்று யாவரையும் தடைசெய்தனர். தாம் வாழும் இவ்வழியால் செல்வதாயின் தம்மிடம் வாதிட்டு வெற்றியுடனன்றிச் செல்லக் கூடாதென சினங்கொண்டு தடைசெய்தனர்.

தொண்டர்கள் இதனைத் திருஞானசம்பந்தரிடம் தெரிவித் தனர். திருஞானசம்பந்தர் வாதிட்டு வெல்லுவோமே என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பினார். அச்சமயம் சம்பந்தரின் திருப்பதிகங்களை அவ்வப் போது எழுதும் பணியிலிருந்த தொண்டர் சம்பந்தர் முன்னர் பாடிய பஞ்சாட்சரப் பதிகத்தின் பத்தாவது பாடலான,

"புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள்தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வினைப் பகைக்கு
அத்திரம் ஆவது அஞ்செழுத்துமே"

என்னும் திருப்பாடலை நினைவு கூர்ந்து தாமே பாடினார். அச்சமயம் புத்த நந்தியின் தலையில் இடி இடித்தது. இதனால் புத்த நந்தயின் உடலும் தலையும் வெவ்வேறாயின. புத்தர்கள் யாவரும் பயந்தோடினர். சிவதொண்டர்கள் இதனைச் சம்பந்தரிடம் தெரிவித்தனர். எமக்குத் தடைவிதித்ததால் சிவனருள் விதித்த தண்டனையாகும். நீவிர் அனைவரும் சிவநாமம் செப்புங்கள் என்றார்.

அவ்விடத்திலிருந்து தப்பியோடிய புத்ததுறவிகள் ஒன்று கூடித் "சாரிபுத்தன்" என்பவனைத் தலைவனாக்கினர். சாரிபுத்தன் சம்பந்தரிடம் வந்து இருவரது சமய தத்துவங்கள் சமயப் பொருளுண்மை விடயங்களில் வாதிடுவோம் என்றனர். இதைக் கேட்ட சம்பந்தர் சிவிகையிலிருந்து இறங்கி அருகேயுள்ள மடத்தில் வாதிட அழைத்தனர். அனைவரும் மடத்திற் கூடினர். சம்பந்த கருணாலயர் சம்பந்தரை வணங்கித் தாமே வாதிட அனுமதியும் பெற்றார். இருபகுதியினரும் தத்தமது சமயச்சார்பில் விவாதித்த போது சமணர்கள் தோல்வியுற்றனர். தமது இயலாமையை அறிந்ததும் சாரிபுத்திரன் தமது தோல்வியைக் கூறிச் சம்பந்தரிடம் சரணடைந்தான். ஏனைய புத்தர்களும் திருஞானசம்பந்தரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி நின்றதும் சம்பந்தர் யாவருக்கும் திருநீறணிவித்தார். திருநீற்றின் பெருமையால் சம்பந்தர் விவாதிக் காத போதும் அவரின் தொண்டர் புத்தமதத்தினரை வாதத்தில் வென்று சைவசமயப் பெருமையை நிலைநாட்டினார். இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்த மதத்தினர் யாவரும் திருநீறணிந்து திருஞானசம்பந்தரின் பாதந்தழுவி மெய்ச் சமயமாம் சைவ சமயத்தில் இணைந்தனர். திருஞானசம்பந்தர் அவ்விடம் விட்டகன்று வேறும் பல சிவாலய தரிசனைகளையும் செய்துகொண்டு "திருவோத்தூரை" அடைந் தார்.

## திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கியது

திருஞானசம்பந்தர் தமது திருத்தலச் சுற்றுலாவில் தொண்டை மண்டலத்திலுள்ள திருவோத்தூரை அடைந்தார். சம்பந்தரின் வருகையை எதிர்பார்த்திருந்த அவ்வூர் மக்கள் வீதிகளெங்கும் மகரதோரணங்களால் அலங்கரித்து மங்கல விளக்கேற்றி ஆரவாரஞ் செய்தனர். பக்தர்களின் சித்தப்படி சம்பந்தரும் சிவிகையை விட்டிறங்கி அவர்களுடன் ஆலயஞ் சென்று வழிபட்டு அங்கு சில காலம் தங்கி பாடல்கள் பாடி யாவரை யும் மகிழ்வித்தார்.

அச்சமயம் சிவனடியாரொருவர் அவ்விடம் அழுத வண்ணம் வந்து சம்பந்தரை வணங்கினார். சம்பந்தர் பரிவுடன் அவரின் கவலையைக் கேட்டறிந்தார். அவ்வூரில் வாழும் அவர் இறைவனின் தேவைக்குதவுவதன் பேரில் தரிசு நிலத்தில் பனைகளை வளர்த் தேன். அவை பருவகாலத்தில் ஆண் பனைகளாகவே அமைந் துள்ளன. இதனைக் கண்ட சமணர்கள் உங்கள் இறைவனால் இப்பனைகளைக் காய்க்கச் செய்ய முடியுமா? என ஏளனஞ் செய்தனர். எனது கவலையைப் போக்க இப்பனைகள் காய்க்கு மாறு இறையருள் புரிய வேண்டுமெனப் பணிந்தார்.

அதைக்கேட்டதும் சம்பந்தர் அனைவரையும் அழைத்துக் கொண்டு கோயிலினுட் சென்றார். இறைவனை வேண்டி "பூத்தேர்ந்தாயன" என்ற தொடரில் பதிகம் பாடினார். அப்பதிகத் தின் திருக்கடைக்காப்பில் "குரும்பை ஆண்பனை ஈங்குலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோத்தூர்" என்று பாடியருளினார். அனைத்து ஆண்பனைகளும் பெண்பனைகளாகி ஒவ்வொன்றிலும் குலைகள் தொங்கின. திருஞானசம்பந்தரின் அருளை மேம்படுத்திய பதிகம் யாவராலும் போற்றப்பட்டது.

திருவோத்தூர் பண் : பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

1. பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஒத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே.

2. இடையீர் போகா இளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மானுரி
உடையீ ரேயும்மை யேத்துது மோத்தூர்ச்
சடையீ ரேயும் தானே.

3. உள்வேர் போல் நொடிமையி னார்திறம்
கொள்வீ ரல்குலோர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி யோத்தூர்க்
கள்வீ ரேயும காதலே.

4. தோட்டீ ரேதுத்தி யைந்தலை நாகத்தை
ஆட்டீ ரேயடி யார்வினை
ஓட்டீ ரேயும்மை யேத்துது மோத்தூர்
நாட்டீ ரேயருள் நல்குமே.

5. குழையார் காதீர் கொடுமழு வாட்படை
உழையாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின் றாடுவார்
அழையா மேயருள் நல்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மிக்கார்வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் தம்மக்க ளீரென்
றுட்கா தாருள ரோதிரு வோத்தூர்
நக்கீ ரேயருள் நல்குமே.

7. தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா என்று நலம்புகழ்ந்
தோதா தாருள ரோதிரு வோத்தூர்
ஆதீ ரேயருள் நல்குமே.

8. என்றா னிம்மலை யென்ற அரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதி லெய்தவ னோத்தூர்
என்றார் மேல்வினை யேகுமே.

9. நன்றா நான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலுந்தி சையெலாம்
ஒன்றா யொள்ளெரி யாய்மிக வோத்தூர்
நின்றீ ரேயுமை நேடியே.

10. கார மண்கலிங் கத்துவ ராடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓரம் பாலெயி லெயதவ னோத்தூர்ச்
சீர் வன்கழல் சேருமே.

11. குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுள் ஞானசம்பந் தன்சொல்
விரும் புவார்வினை வீடே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமயிலாப்பூர் - எலும்பைப் பெண்ணுருவாக்கியது

மயிலாப்பூரில் வாழ்ந்த நன்கு வசதி படைத்த சிவநேசன் என்னும் வணிகர் இறையருள் பெற்று சிறப்புடன் வளர்த்த ஒரே பெண் அரவம் தீண்டி மாண்டாள். இறைவனையே தஞ்சமென் றிருந்த வணிகர் தமது மகளின் பல சிறப்புக்களையும் நோக்கி மகளைத் திருஞானசம்பந்தருக்கே திருமணஞ்செய்யக் காத்திருந் தார். கைகூடாத காலத்தால் வருந்தியவர் இறையருளை வேண்டி இறந்த மகளின் உடலை எரித்து அதன் சாம்பல் எலும்பு யாவற்றை யும் புதிய குடத்தில் இட்டுப் புனிதமாக ஆடை அணிகலன்கள் சார்த்திப் பூசையில் வைத்துத் தினமும் பூசித்தார்.

சம்பந்தர் திருவொற்றியூரில் ஆலய தரிசனம் முடிந்து தங்கி யிருந்ததை அறிந்தார். உடனே திருவொற்றியூருக்கும் மயிலாப் பூருக்கும் இடையே நடைபந்தலிட்டு மகர தோரணங்களால் அலங்கரித்துச் சிவமணங் கமழ வைத்தார். அச்சமயம் சம்பந்தர் மயிலை கபாலீச்சுரரை வழிபட வந்து கொண்டிருந்தார். சிவ நேசரும் பக்தர்களும் சம்பந்தரைக் கண்டதும் வீழ்ந்து வணங்கி வரவேற்றார்கள். சம்பந்தர் சிவிகையிலிருந்து இறங்கிச் சிவ நேசரைத் தழுவிய வேளை அவரின் மகளின் விபரத்தையும் அறிந்தார். இதைக்கேட்டதும் சம்பந்தர் உரிய எலும்பு பொருந்திய குடத்தை எம்பெருமானின் சந்நிதி முன் எடுத்து வருமாறு கூறினார்.

எலும்பு பொருந்திய குடம் கபாலீச்சுரரின் திருமுன் வைக்கப் பட்டதும் சம்பந்தர் இறைவனை வணங்கியவாறு "மட்டிட்டபுன்னை" யெனும் தொடரில் பதிகம் பாடினார். அப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலுக்கும் உரிய வளர்ச்சி பெற்றது. நிறைவில் குடம் வெடித்ததும் பூம்பாவை பூரண வளர்ச்சியுடன் அழகிய பூம்பாவையாக தோற்றம் பெற்றாள். தந்தையும் மகளும் சம்பந்தரை வணங்கி எழுந்தனர். யாவரும் இறையருளை வியந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநேசர் தமது மகளைச் சம்பந்தருக்கே திருமணஞ் செய்து வைக்கவென இறையருளை நாடியிருந்ததாகவும் இப்பொழுது மீண்டும் உயிர்பெற்றதால் அவளை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினார். அச்சமயம் திருஞானசம்பந்தர் சிவநேசரை நோக்கி "நீர் பெற்ற பெண் விஷத்தால் மாண்டாள். பின்னர் சிவபெருமானின் அருளால் நான் அவளை உயிர்பெறச் செய்தேன். இதனால் உமது சொல் தகாது" என்று கூறி மறுத்தார். சம்பந்தரின் சொற்கேட்டதும் சிவநேசர் மகளிற்கென கன்னியர் மடமொன்றை அமைத்துக் கொடுத்தார். பூம்பாவை துறவு வாழ்வை மேற்கொண்டாள்.

திருமயிலாப்பூர் பண் - சீகாமரம்

திருச்சிற்றம்பலம்

01. மட்டிட்ட புன்னையங் கானன்மட மயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பினுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.

02. மைப்பயந்த வொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பயந்த நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
ஐப்பசி யோண விழாவு மருந்தவர்கள்
துய்ப்பனவுங் காணாதே போதியோ பூம்பாவாய்.

03. வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரந்தான்றொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.

04. ஊர்திரை வேலையுலாவு முயர் மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
ஆர்திரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. மைப்பூசு மொண்கண் மடநல்லார் மாமயிலைக்
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரமமர்ந்தான்
நெய்ப்பூசு மொண்புழுக்க னேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்.

06. மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
அடலானே றூரு மடிக ளடிபரவி
நடமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்.

07. மலிவிழா வீதிமட நல்லார் மாமயிலைக்
கலி விழாக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
பலி விழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்.

08. தண்ணா வரக்கன்றோள் சாய்த்துகந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச் சரமமர்ந்தான்
பண்ணார் பதினெண் கணங்கடம் மட்டமிநாள்
கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய்.

09. நற்றா மரைமலர்மே னான்முகனு நாரணனும்
உற்றாங் குணர்கிலா மூர்த்தி திருவடியைக்
கற்றார்க ளேத்துங் கபாலீச் சரமமர்தான்
பொற்றாப்புக் காணாதே போதியே பூம்பாவாய்.

10. உரிஞ்சாய வாழ்க்கை யமனுடையைப் போர்க்கும்
இருஞ்சாக் கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச் சரமமர்ந்தான்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.

11. கானமர் சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழான்
ஞானசம் பந்த னலம்புகழ்ந்த பத்தும் வலார்
வானசம் பந்தத் தவரோடும் வாழ்வாரே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்ப் பெருமணம்

திருஞானசம்பந்தருக்குப் பதினாறு வயது வந்ததும் பெற்றோரும் மற்றோரும் வேத விற்பன்னர்களும் சம்பந்தரை வணங்கி அவர் திருமணப் பருவத்தில் திருமணஞ் செய்ய வேண்டுமெனத் தெரிவித்தனர். அச்சமயம் சம்பந்தர் மறுத்துரைத்த போதும் குலமுறைப்படி வேள்விகள் செய்ய வேண்டியதால் ஒரு கன்னியைத் திருமணஞ் செய்ய வேண்டுமென நினைவுறுத்தினர்.

இறைவனின் சித்தப்படி பிறசமயப் பிடியிலிருந்து சைவ சமயத்தை மேலோங்கச் செய்யும் பணிக்கென அவதரித்தவர் சம்பந்தர். அவரின் அவதார நோக்கம் நிறைவடைந்துள்ளது. வேதநெறியை நிலைபெறச் செய்வதற்காக திருமணஞ் செய்து தம்மை நாடிய பெற்றோர் முதலானவர்களின் விருப்பத்தை நிறைவு செய்ய இறையருளைத் தியானித்தார். இறையருளின் சித்தப்படி சம்மதம் தெரிவித்தார். திருமண ஏற்பாடுகள் யாவும் நிறைவானது.

இறையருட் சித்தப்படி திருநல்லூரில் அமைந்த நல்லூர்ப் பெருமணம் என்னும் திருத்தலத்தில் திருஞானசம்பந்தர் சுவாமிகளுக்கும் நம்பியாண்டார்நம்பியின் திருமகளுக்கும் சைவாசார விதிமுறைப்படி வேதவிற்பன்னர்களினால் திருமணம் நிறைவேறியது. நிறைவாக வேள்வித் தீயை வலம் வரும் வேளை மணப் பெண்ணைக் கையிற் பிடித்தவாறு "நாம் விரும்பும் அக்கினி சிவனேயாவர் எனக்கருதி இந்த இல்வாழ்க்கை எம்மைச் சூழ்ந்ததால் இவளுடனேயே சிவன்றாள் சேர்வேன்" என்று கூறிய வண்ணம் ஆலயத்துட்சென்று எம்பெருமானே எம்மை உங்கள் திருவடிகளிற் சேர்த்துக் கொள்ளும் என்ற கருத்துடன் "நல்லூர் பெருமணம்" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார்.

அச்சமயம் "நீயும் உன் மனைவியும் இங்கு இப்புண்ணிய திருமணத்திற் கூடிய அனைவரும் இப்பெருஞ்சோதியுட் சேருமின்" என்ற அசரீரி ஒலிக்கவும் ஆலயம் யாவும் பெருஞ்சோதியாகத் திகழ்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

1. கல்லூர்ப் பெருமணம் வேண்டா கழுமலம்
பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில
சொல்லூர்ப் பெருமணம் சூடல ரேதொண்டர்
நல்லூர்ப் பெருமணம் மேயநம் பானே.

2. தருமணல் ஓதம்சேர் தண்கடல் நித்திலம்
பருமண லாக்கொண்ட பாவைநல் நல்லார்கள்
வருமணம் கூட்டி மணம்செயு நல்லூர்ப்
பெருமணத் தான்பெண் ணோர்பாகம் கொண்டானே.

3. அன்புறு சிந்தைய ராகி அடியவர்
நன்புறு நல்லூர்ப் பெருமண மேவிநின்று
இன்புறும் எந்தை இணையடி யேத்துவார்
துன்புறு வாரல்லர் தொண்டுசெய் வாரே.

4. வல்லியம் தோலுடை ஆர்ப்பது போர்ப்பது
கொல்லியல் வேழத்து உரிவிரி கோவணம்
நல்லிய லார்தொழு நல்லூர்ப் பெருமணம்
புல்கிய வாழ்க்கைஎம் புண்ணிய னார்க்கே.

5. ஏறுகந் தீர்இடு காட் டெரியாடி - வெண்
ணீறுகந் தீர்நிரை யார்விரி தேன்கொன்றை
நாறுகந் தீர்திரு நல்லூர்ப் பெருமணம்
வேறுகந் தீர்உமை கூறுகந் தீரே.

6. சிட்டப்பட் டார்க்குஎளி யான்செங்கண் வேட்டுவப்
பட்டங்கட்டும் சென்னி யான்பதி யாவது
நட்டக்கொட் டாட்டறா நல்லூர்ப் பெருமணத்து
இட்டப்பட் டால்ஒத்தி ரால்எம்பி ரானிரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மேகத்த கண்டன்எண் தோளன் வெண்ணீற்றுமை
பாகத்தன் பாய்புலித் தோலொடு பந்தித்த
நாகத்தன் நல்லூர்ப் பெருமணத் தான்நல்ல
போகத்தன் யோகத்தை யேபுரிந் தானே.

8. தக்கிருந் தீர்அன்று தாளால் அரக்கனை
உக்கிருந்துஒல்க உயர்வரைக் கீழிட்டு
நக்கிருந்தீர் இன்று நல்லூர்ப் பெருமணம்
புக்கிருந் தீர்எமைப் போக்கரு ளீரே.

9. ஏலும்தண் தாமரையானும் இயல்புடை
மாலும்தம் மாண்பறி கின்றிலர் மாமறை
நாலும்தம் பாட்டெடன்பர் நல்லூர்ப் பெருமணம்
போலும்தம் கோயில் புரிசடை யார்க்கே.

10. ஆதர் அமணொடு சாக்கியர்தாம் சொல்லும்
பேதமைகேட்டுப் பிணக்குறு வீர்வம்மின்
நாதனை நல்லூர்ப் பெருமண மேவிய
வேதன தாள்தொழ வீடெளி தாமே.

11. நறும் பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்
பெறும்பத நல்லூரப் பெருமணத் தானை
உறும்பொரு ளாற்சொன்ன ஒண்தமிழ் வல்லார்க்கு
அறும்பழி பாவம் அவலம் இலரே.

திருச்சிற்றம்பலம்

மேற்கூறிய பதிகத்தைப் பாடியவாறு சம்பந்தர் அங்குள்ள யாவரையும் சோதியுட் கலந்து முத்தியின்பத்தை நாடுமாறு அழைத்தார் யாவரும் முன் வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞானசம்பந்தரின் வேண்டுதலையடுத்து இறைவன் மகாசோதி வடிவமாகத் தோன்றி அதனுள்ளே பக்குவ நிலையிலிருந்து அவ்விடத்தில் திருஞானசம்பந்தரின் திருமணத்திற் கலந்து கொண்ட அனைவருக்கும் முத்தியின்பம் வழங்கச் சித்தங் கொண்டார். திருஞானசம்பந்தரிடம் இது பற்றி அசரீரியாகத் தெரிவித்தார். இறையருளை மெச்சிய யாவரும் தமது பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்க எத்தனை காலமெடுக்குமோ என ஏங்கித் தவிக்காமல் இறையருளால் தரப்பட்ட பேரருளை வியந்தனர். அவர்களுள் சிவபாதவிருதயர், நம்பியாண்டர் நம்பி, திருமணவிழாவை நிகழ்த்திய அந்தணர்கள் யாவரும் தத்தமது மனைவிமார் சகிதம் முன்சென்றனர். சம்பந்தருடன் சென்ற அடியார்கள், நீலகண்டப் பெரும்பாணர் மற்றோரும் முத்துச் சிவிகை, குடை, கொடி, ஆலவட்டம் தாங்கி வந்தோரும் முத்துப் பந்தல் தாங்க வந்தோரும் திருமணவிழாவிற் கலந்த அனைவரும் இறையருளை நாடிச் சோதியினுட் புகுந்தனர்.

யாவரும் சோதியுட் கலந்ததும் சைவநெறியை இம்மண்ணில் உய்விக்கவென வந்த திருஞானசம்பந்தர் தமது புத்திளம் மனைவியின் கையிற் பற்றியவாறு "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்று தொடங்கும் பாடலைப் பாடிய வண்ணம் சோதியை வலம் வந்து உரிய வாசலால் சோதியுட் கலந்தனர். யாவும் இனிதே நிகழ்ந்ததும் பிரகாசமாகவும் மேலோங்கிய சோதிச் சுடராகவும் விளங்கிய சோதி வடிவம் ஒடுங்கி மறைந்தது. யாவரும் உட்புகவெனத் தோன்றிய சோதியின் வாசலும் மறைந்தது. நல்லூர்ப் பெருமணம் என்னும் திருத்தலம் முன்போலக் காட்சி தந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

1. காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

2. நம்பு வார்அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாள்மலர் வார்மது ஒப்பது
செம்பொ னார்தில கலம்உ லகுக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே.

3. நெக்குள் ஆர்வம் மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே.

4. இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந்து ஓதவல் வார்தமை நண்ணினால்
நியமம் தான்நினை வார்க்குஇனி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே.

5. கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவரென்பால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

6. மந்தரம் அன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய் வாயின ராயின் உருத்திரர்
விரவி யேபுகு வித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே.

8. இலங்கை மன்னன் எடுத்த அடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே.

9. போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பரி தாகி அலந்தவர்
ஓது நாமம் நமச்சி வாயவே.

10. கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுஉண் கண்டன் நமச்சி வாயவே.

11. நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந்து ஏத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்

இவ்வபூர்வமான சோதியினுட் செல்லத் தாமும் நற்பயன் அடையவில்லையேயென்று பலர் வருந்தினர்.

திருஞானசம்பந்தர் சுவாமிகளின் அற்புதங்கள் நிறைந்த பாடல்கள் நிறைவடைந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுரை

சிவபெருமானால் தோற்றுவிக்கப் பெற்ற சிவநெறி நிலை யானது அநாதியானது. இந்த நெறியை என்றும் காப்பவர் இறைவன். தமது சிந்தனையை மனிதர்கள் மத்தியில் மனித நேயத்துடன் வாழ்பவர் மத்தியில் நிலைநிறுத்தும் நியதியுடையவர்.

நிலையான சைவநெறியைப் பிற்காலத்தில் தோன்றிய பொய்ச்சமயங்களான சமணம், பௌத்தம் நிலைகுலைய வைத்தது. இதனால் பரம்பரை பரம்பரையாகச் சைவ மூச்சுடன் வாழ்ந்த குலமரபில் வந்த சீர்காழிப் பெரியார் சிவபாதவிருதயர் சைவப்பற்றுடையோர் மத்தியில் வாழ்ந்து மாதவஞ் செய்து இறைவனிடம் விண்ணப்பித்தார். இறைவனின் நியதியும் சிவபாதவிருதயரின் வேண்டுதலும் சைவ உலகின் வளர்ச்சிக்கான எதிர்காலமும் பிரகாசிக்க வேண்டி இறைவன் திருவுளங் கொண்டார். இதன் பேறாகத் தமது முருகனின் அம்சமாகத் தவஞானச் செல்வப் பிள்ளையைச் சீர்காழியில் வாழ்ந்த சிவபாதவிருதயரின் தவப்புதல்வன் என்னும் தேடற்கரிய அருட்சொத்தாக வழங்கினார். சைவ உலகம் பெரு வரவேற்புடன் மகிழ்ச்சியில் மலர்ந்தது.

இறைவன் மார்க்கண்டேயரை அவதரிக்கச் செய்த போது நியமித்த வயது பதினாறு. அதே போல இத்தவப்புதல்வனுக்கும் எழுதாமறையாகப் பதினாறு வருட மானிட வாழ்வை அருளினார். (மனித உலகின் மாயவலையின் காரணமாக எவரும் பிள்ளையின் ஆயுட் காலத்தை உணரவில்லை) அருமை பெருமையை அருந்தவ ஆசார சீல மான அந்தணர் குலப்பிள்ளையின் ஆரம்பகாலச் சிந்தனைக்கு உரமூட்டியது. சைவம் காக்க வந்த பிள்ளை தமது காலத்தை வீண் போக்காது மூன்று வயதில் தமது பணியை உணர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறு தந்தையுடன் தோணிபுரஞ் சென்றார். தந்தை நீராடும் போது யாரும் அறியாத தந்திரமாக அழுது இறைவனை வரவழைத்து அம்மை அப்பனால் சிவஞானம் கலந்த பால முதை உண்டார். ஞானம் பெற்ற பிள்ளை சிவனருளை யாவரும் புரியும் வண்ணம் சிவதத்துவங்களை மழலை மொழி யின் தேனருவியாகப் பாய விட்டார். இவ்வற்புதம் சைவ உலகெங்கும் பரவியது. சைவம் புத்துணர்ச்சி பெற்றது.

ஞானக் குழந்தையின் இசைப் பாடல்கள் யாவரும் இறை வனைப் பாடிப் பரவ உந்தியது. சைவ உலகோர் தமது துன்ப துயரங்களை நீக்கி ஆலயஞ் சென்று திருவைந்தெழுத்தையும் சிவநாமத்தையும் பாடிப் பணியும் பேறு பெற்றனர். நால்வேத மோதி சிவநெறியை அலங்கரித்த வேத வேதியருக்குத் தமது உபநயன விழாவில் பஞ்சாட்சரப் பதிக மூலம் சிவதத்துவங் களை உபதேசித்தார். இவர் பாடிய பஞ்சாட்சரப் பதிகம் தமிழ் வேதத்தின் முத்தான வித்தாக அமைந்தது. அங்கு கூடிய வேதியர்களின் சாட்சியாகவே தமிழ்வேதம் திருஞானசம்பந்த ரினால் நிலை நாட்டப்பெற்றது. இதனால் திருமுறை ஓதும் பண்பும் அதனால் சைவம் வளரவும் இறையருள் பாலித்தது.

சம்பந்தர் பாடிய பல்லாயிரம் பாடல்களுள் இப்போ கிடைக்கப் பெற்ற **384** பதிகங்கள் **12** திருமுறை வரிசையில் முதல் மூன்று திருமுறைகளாக அமைந்துள்ளன. இவரின் பாடல்கள் "திருக்கடைக்காப்பு" எனப் போற்றப்படுகிறது. இப்பாடல்களின் அற்புதங்கள் சைவநெறியை நெறிப்படுத்து கின்றன.

பெறற்கரிய தத்துவப் பாடல்களை அருளிய ஞானக் குழந்தை மூன்று வயதில் சிறப்பித்ததால் எமது சைவப்பணி போற்றும் இளம் சமுதாயத்தை நெறிப்படுத்தவென்றே இறைவன் அருள் பாலித்தார். இதன் மகிமையால் எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் சைவசமயம் பிரகாசிக்கிறது. திருஞானசம்பந்தப் பெருமானின் அடிச்சுவடு என்றென்றும் நிலைத்திருக்கவும் சைவசமயம் மேலோங்கவும் தேவார இசையைப் போற்றி வழிபடவும் இறையருள் கைகூட்டும்.

## திருஞானசம்பந்தர் தேவாரம் ஓதும்பயன்

திங்கட் கொழுந்தொடு பொங்கரவு திளைக்குங்
கங்கைப் பேரியாற்றுக் கடுவரக் கலுழியின்
இதழியின் செம்பொன் இருகரை சிதறிப்
புதலெருக்கு மலர்த்தும் புரிபுன் சடையோன்
திருவருள் பெற்ற இருபிறப் பாளன்
முத்தி வேள்வி நான்மறை வளர
வைவ்வேள் வுயர்த்த அறுதொழி லாளன்
ஏழிசை அரசை எண்டிசை யறியத்
துண்டப் படுத்த தண்டமிழ் விரகன்
காழிநாடன் கவுணியர் தலைவன்
மாமழை நோக்கி மலைமகள் புதல்வன்
திருந்திய பாடல் விரும்பினர்க் கல்லது
கடுந்துய ருட்புகக் கைவிளிக் கும்மிர்
நெடும்பிற விக்கடல் நீந்துவ தரிதே.


- நம்பியாண்டார் நம்பி.

வம்பறா வரிவண்டு, மணம் நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற்பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்

- சுந்தரமூர்த்தி சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





திருச்சிற்றம்பலம்

ஆடினாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடினாய் இடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல் கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்கஎம் தொல்வினையே.

திருச்சிற்றம்பலம்

சுடர்நிலா, இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org